
E-mail : omsakthieditorial@gmail.com
https://archive.org/search.php?query=omsakthi

ஓம் சக்தி

ஜனவரி 2020
விலை ரூ.15

நிறுவனர் :
நா. மகாலிங்கம்



அங்கோர்வாட் புராதன ஆலயம்

கு ம ர கு ரு

பொறியியற் கல்லூரி | வணிக மேலாண்மைப் பள்ளி | வேளாண்மைக் கல்லூரி
பன்முகக் கலை அறிவியல் கல்லூரி | சக்தி மேம்பாட்டுக் கல்வி மையம்

ஒழுக்கமே வாழ்வு



"கல்வியைப் போலவே தொழில்களும் கடவுளுக்குச் சமமானவை. படிக்கும் காலத்திலேயே தொழிலுக்கான பயிற்சியை மாணவர்கள் பெறவேண்டும்."

அருட்செல்வர் டாக்டர்.நா.மகாலிங்கம்



குமரகுரு பன்முக கலை அறிவியல் கல்லூரி

KCLAS KUMARAGURU

அடிப்படை அறிவியலிலிருந்து சமூக அறிவியல் வரையும், இலக்கியத்திலிருந்து நுண்கலைவரையும் அனைத்தையும் வழங்கி, சமூக முன்னேற்றத்திற்கான ஆய்வுகளை முன்னெடுத்து, வாழ்நாள் முழுதும் கற்றலில் ஆர்வம் கொண்டு, உலகியலின் போக்கில் தாக்கத்தை ஏற்படுத்தும் தனியாத ஆர்வம் கொண்ட இளைஞர்களை உருவாக்கும் கல்வி நிறுவனம்.

குமரகுரு தொழில்நுட்பக் கல்லூரி

குமரகுரு தொழில்நுட்பக் கல்லூரி

150 ஏக்கர் வளாகத்தில் 6000 மாணவர்களுடனும் 400 பேராசிரியர்களுடனும் 34 ஆண்டுகளாக 'ஒழுக்கமே வாழ்வு' எனும் உயர் குறிக்கோளுடன், ஆராய்ச்சியையும் தொழில் இணைவையும் அடிப்டையாகக் கொண்டு தேசிய தர வரிசையில் முதல் நூறு நிறுவனங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

கே.சி.டி. வணிக மேலாண்மைப் பள்ளி

KCT BUSINESS SCHOOL

தொழிலகங்கள் மற்றும் சமூகத்தின் முன்னேற்றத்தில் முனைப்புடன் செயல்படும் இளைய தலைமுறைக்கான தலைவர்களை உருவாக்கும் இந்தியாவின் முதல் 100 நிறுவனங்களில் ஒன்றாகும் கல்வி, மனித வளம், மாணவர்கள் சேவை, ஐ.டி. தொழில்நுட்பம், தொழிலினைவு, சமூக பங்களிப்பு போன்றவைகளில் மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்படும் இணையற்ற நிறுவனம்.

குமரகுரு வேளாண்மைக் கல்லூரி

KUMARAGURU institute of agriculture

தொழில்நுட்பம் மூலமாக வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கி, வேளாண்மையைத் தற்சார்புத் தொழிலாக மாற்றுவதற்குரிய வேளாண்மைக் கல்வியை, கிராமப்புற மாணவர்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்ட நிறுவனம்.

ஆராய்ச்சி அமைப்புக்கள்

மாணவர் ஆராய்ச்சிகள்

iQube Innovate · Incubate · Incorporate

GARAGE

re KCT'S PLATFORM FOR RESEARCH & EXPLORATION

தொழிலக ஆராய்ச்சிகள்

KUMARAGURU KC.IRI CENTRE FOR INDUSTRIAL RESEARCH & INNOVATION

TECHNOLOGY VISION 2020 TIFAC MISSION REACH

FORGE போர்ஜ்

கே.சி.டி.யின் ஒர் அங்கமான 'போர்ஜ்' வளர்ந்து வரும் நவீனத் தொழில்நுட்பத்தையும், கணினி அறிவியலையும் இணைத்து ரோபோட் தானியங்கிஇயந்திரங்களையும் செயற்கை அறிவூட்டல் கருவிகளையும், டிஜிட்டல் வணிகத்தையும் வளர்த்தெடுத்துப் பல்வேறு தொழில் துறைகளிலும் இந்த நுண்ணறிவுப் பயன்பாட்டைக் கொண்டுசெல்லும் நோக்கில் செயல்படுகிறது.

குமரகுரு கல்வி வளாகம்
சரவணம்பட்டி
கோயம்புத்தூர்

0422 2661100
kct.ac.in
kctbs.ac.in
kclas.ac.in
kia.ac.in



சுரங்கம்

கிராமப் பஞ்சாயத்து என்பதை காந்திஜி தனது காலத்தில் 'கிராமக் குடியரசு' என்றார். அதாவது, பாரதக் குடியரசு போல, கிராமக் குடியரசு. சகலவித அதிகாரங்களோடு அது செயல்பட வேண்டும் என்பது காந்திஜியின் விருப்பம். ஆனால், நடைமுறையில் மத்திய அரசு, மாநில அரசுகளின் அதிகாரங்களைக் கையகப்படுத்திக் கொண்டது.

மாநில அரசுகளோ, பஞ்சாயத்துகளின் அதிகாரங்களைக் கையகப்படுத்திக் கொண்டன. இதனை அடியோடு மாற்றியமைக்க வேண்டும் என்பதுதான் காந்திஜியின் சிந்தனை. அதனை வழிமொழிந்து 14 ஆண்டுகளுக்கு முன்பு (2006-இல்) அருட்செல்வர் எழுதிய கட்டுரையை இம்மாதம் 'சுரங்கம்' பகுதியில் வாசகர்களுக்கு வழங்குகிறோம்.

– இ.ஆர்.

பஞ்சாயத்துகளே ஜனநாயகத்தின் ஆரம்பப் பாடசாலைகள்



காந்திஜி

நமது நாட்டின் நிர்வாகங்களை மத்திய ஆட்சி, மாநில ஆட்சிகள் மற்றும் உள்ளாட்சிகள் என வகுத்துள்ளோம்.

மத்திய அரசு ராணுவம், நாணயம் முதலிய 97 துறைகளில் சட்டம் இயற்ற அனுமதிக்கப்பட்டுள்ளது. மாநில அரசுகள் காவல்துறை முதலிய 65 துறைகளில் சட்டம் இயற்ற அரசமைப்புச் சட்டம் அனுமதித்துள்ளது.

மத்திய, மாநில நிர்வாக ஆலமரத்தின் வேர்களாக உள்ளவை உள்ளாட்சிகள்தான். வேர்கள் ஆரோக்கியமாக இருந்தால்தான் கிளைகளும், இலைகளும் ஆரோக்கியமாக இருக்கும்.

அதனால்தான் உள்ளாட்சிகளைக் 'கிராம சுயாட்சி' என்றே காந்திஜி குறிப்பிட்டார். கிராம ராஜ்யம் என்று காந்திஜி கருதியது, சுமார் 2 ஆயிரம் பேர் வசிக்கும் குக்கிராமங்களான பஞ்சாயத்துக்களைத்தான். இன்றைக்கு அது பொருந்தாது. சுமார் 50 ஆயிரம் மக்களைக் கொண்ட பஞ்சாயத்து ஒன்றியத்தைக் கிராம சுயாட்சி என்றால்தான் சரியாக இருக்கும்.

சுயாட்சி என்பது, இப்பஞ்சாயத்துக்களுக்கு மட்டுமல்ல; நகர சுயாட்சி, மாநகர சுயாட்சி என்றும் அதனை விரிவுபடுத்தலாம்.

காந்தியம், ஹிம்சை முறைக்கு எதிரான அகிம்சை முறையைக் கடைப்பிடித்த கோட்பாடு. இதேபோல, குவியல் முறை அதிகாரத்திற்கு எதிராகப் பரவல்முறை அதிகாரத்திற்கும் வழிகாட்டுகிற கோட்பாடாகும்.

முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள், உள்ளாட்சிகளை மறுமலர்ச்சி செய்யும் மகத்தான நோக்கில், 1990–களில் பஞ்சாயத்துராஜ் மற்றும் நகர்பாலிகா ஆகிய இரு திருத்தச் சட்டங்களை உருவாக்கத் திட்டமிட்டார்.

அவருடைய திடீர் மறைவுக்குப் பிறகு அமைந்த பிரதமர் நரசிம்மராவ் ஆட்சியில்தான் அச்சட்டம் நிறைவேற்றப்பட்டது. 1993 முதல் அமல் படுத்தப்படுகிறது.

1993–இல் பஞ்சாயத்துராஜ் சட்டத்தை நிறைவேற்றிப் பஞ்சாயத்துகளுக்குத் தேர்



டாக்டர் நா. மகாலிங்கம்

தல் நடத்தியதன் நோக்கமே, கிராமங்களை அபி விருத்தி செய்வதற்காகத்தான். அந்த நோக்கம் நிறைவேறி வருகிறதா என்றால், இல்லை என்றுதான் கூறமுடியும்.

ஏனெனில், இப்போது செயல்பட்டுக் கொண் டிருக்கும் உள்ளாட்சிகளுக்கு நிதி ஆதாரமும் இல்லை. நிதி அதிகாரமும் இல்லை. இந்நிலையில் கிராம அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டிய பஞ்சாயத்து ஒன்றியங்கள், எவ்வாறு கிராம அபி விருத்திகளை உருவாக்க முடியும் என்பதே நம் முன்புள்ள கேள்வியாகும்.

அதிகாரங்களைப் பரவல்படுத்துவதற்காக காந்திஜி கூறியபடி, பஞ்சாயத்துகளுக்குப் பதில், பஞ்சாயத்து யூனியன்களுக்குத்தான் அதிகாரங் களை வழங்கியிருக்க வேண்டும்.

பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகாரங் களை வழங்கத்தான் ராஜீவ்காந்தி விரும்பியிருந் தார். அதிகார வர்க்கம் அவருக்குத் தவறாக வழி காட்டி, கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரங் களைத் தரும் சட்டத்தை உருவாக்கிவிட்டார்கள். அந்தக் குறைபாடு இனியாவது திருத்தப்பட வேண்டும்.

கல்வி, சுகாதாரம், சாலை, தெருவிளக்கு, சிறு அணை கட்டுதல், பராமரித்தல் முதலிய நிர் வாக அதிகாரங்களையும், நிதி அதிகாரங்களை யும் உள்ளாட்சிகளுக்குத் தந்துவிட்டால், அந்தப் பஞ்சாயத்து யூனியன்கள் மாவட்ட அலுவலகத் தையோ, மாநில அரசையோ திட்ட அங்கீகாரத் திற்காக எதிர்பார்க்க வேண்டிய அவசியமில்லாமல் போய்விடும்.

இன்றைக்கு ஏற்பட்டுள்ள சிக்கலுக்குக் கார ணம், உள்ளாட்சிகளிடம் இருக்க வேண்டிய அதி காரங்கள் மத்திய அரசிடமும், மாநில அரசு களிடமும் குவிந்து கிடப்பதுதான்.

இதை மாற்றி அமைப்பதற்கான சட்டத் திருத்தங்களை நிறைவேற்றிய பிறகும்கூட, அதில் சொல்லப்பட்டுள்ள 29 அதிகாரங்களும் உள் ளாட்சிகளுக்கு முழுமையாக இன்றுவரை தரப்பட வில்லை.

பஞ்சாயத்து ஒன்றியத்தின் அதிகாரத்தின்கீழ் கூட்டுறவு சங்கம், உயர்நிலைப் பள்ளிகள், ஆரம் பப் பள்ளிகள், ஸ்தல ஸ்தாபன அலுவலகங்கள், கிராம அதிகாரிகளின் நியமனங்கள் ஆகிய அனைத்தும் விடப்பட வேண்டும்.

பஞ்சாயத்து ஒன்றிய வட்டாரத்தில் வாழ் கின்றவர்களின் மத்தியில் ஏற்படும் குடும்பச் சண் டைகளைக்கூட பைசல் செய்யும் கிராம நீதி மன்றங்களைப் பஞ்சாயத்து ஒன்றிய வட்டாரத்தி லேயே உருவாக்க வேண்டும். நீதியைத் தேடி அவர்கள் நகரங்களுக்குப் போகக்கூடாது.


பஞ்சாயத்திற்குரிய நிதி வசதியை, ஒவ் வொரு பஞ்சாயத்து ஒன்றியமும் சுயமாகப் பெருக்கிக்கொள்ளும் அதிகாரம் அவற்றிற்கு இருக்க வேண்டும். இவையெல்லாம் இருந்தால் தான் ஒரு பஞ்சாயத்து ஒன்றியம், ஒரு குடியரசு போலவே விளங்க முடியும்.

மாநில அரசு தனது வரி வருவாயில் முன்பு 8.5 சதவிகிதம் தந்தது. இப்போது 9 சதவிகிதம் மட்டும் உள்ளாட்சிகளுக்குத் தர முன்வந்துள்ளது. 30 சதவிகிதம் கோரப்படுகிறது. நமது மாநில அரசின் வருவாய் ரூ. 61 ஆயிரம் கோடி. இதில் 9 சதவிகிதம் என்பது ரூ. 5,500 கோடிதான்

இந்த 5,500 கோடியைத் தமிழ்நாட்டிலுள்ள 385 பஞ்சாயத்து யூனியன்களுக்கும், 150 நக ராட்சிகளுக்கும், 10 மாநகராட்சிகளுக்கும் வழங்கி னால், என்ன பெரிய அபிவிருத்தி வேலைகளை அவை செய்ய முடியும்?

தொகுதி மேம்பாட்டுத் திட்டம் என்ற பெயரில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ரூ. 2 கோடியும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ரூ. 1 கோடியே 20





லட்சமும் ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்தத் தொகை மாவட்டக் கலெக்டர் மூலமாகத் தொகுதிப் பிரதிநிதிகளின் ஆலோசனைப்படி தொகுதிகளில் செலவு செய்யப்படுகிறது.

நிழற்குடை, பள்ளிகளில் வகுப்புக் கட்டடம், சுற்றுச்சுவர், தண்ணீர்த் தொட்டி, தெருவிளக்குகள், சமுதாயக்கூடங்கள் முதலியவற்றிற்கு இத்தொகை செலவிடப்படுகிறது. இவை யாவும் பஞ்சாயத்துகள் செய்ய வேண்டிய பணிகள்.

தமிழ்நாட்டில் 40 எம்.பி.க்களுக்கு ஒருவருக்கு ரூ. 2 கோடி வீதம் ஆண்டிற்கு மொத்தம் ரூ. 80 கோடி என்றால், 5 ஆண்டுகளுக்கு ரூ. 400 கோடி ஒதுக்கப்படுகிறது. இதேபோல் எம்.எல்.ஏ. ஒருவருக்கு ரூ. 1 கோடி 20 லட்சம் என்றால், 234 எம்.எல்.ஏ.க்களுக்கு 5 ஆண்டுக்கு ரூ. 1,400 கோடி. மொத்தம் ரூ. 1,800 கோடி, எம்.எல்.ஏ. மற்றும் எம்.பி.க்களால் செலவிடப்படுகிறது.

இந்த நிதி ஒதுக்கீட்டு முறை, கிராமப் பஞ்சாயத்துக்களுக்கான அதிகாரங்களுக்குள் தலையீடு செய்வதாக அமைகிறது. தொகுதி மேம்பாட்டு நிதியை மத்திய, மாநில அரசுகள் பஞ்சாயத்துக்களுக்கே நேரடியாக வழங்கிப் பஞ்சாயத்துக்களை வலுப்படுத்தலாம்.

பஞ்சாயத்துக்களை மாநில அரசின்கீழ் அதிகாரம் இல்லாத அமைப்புகளாக வைத்திருப்பதற்கான முயற்சிதான் இப்போதும் தொடர்கிறதே தவிர, அடிப்படையான மாறுதல்கள் எதுவும் ஏற்படுத்தப்படுவதாகத் தெரியவில்லை.

பஞ்சாயத்துராஜ் சட்டப்படி நாம் அமல்படுத்தியுள்ள பஞ்சாயத்து ஆட்சி முறையானது, கிராமப் பஞ்சாயத்து, பஞ்சாயத்து ஒன்றியம், மாவட்டப் பஞ்சாயத்து என்ற மூன்று அடுக்குகளைக் கொண்டது.

பஞ்சாயத்து ஆட்சிமுறை வருவதற்கு முன்பாக, பிரிட்டிஷ் ஆட்சியில் ஜில்லா போர்டு நிர்வாகம் சிறப்பாக இருந்ததை யாரும் மறுக்க முடியாது. இன்றைக்கு சுமார் 80 வயதுள்ளவர்களுக்கு இது நன்கு தெரியும்.

அமரர் குமாரசாமி ராஜா, ஓ.பி. ராமசாமி ரெட்டியார் ஆகியோர் முதலமைச்சராக இருந்தபோது, ஜில்லா போர்டு நிர்வாகம் கிராமப்புறங்களில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வந்துள்ளது.

அவர்கள் காலத்தின் ஜில்லா போர்டு தலைவர்கள், கிராம மக்களிடம் மிகப்பெரிய செல்வாக்குப் பெற்ற பாரம்பரியம் உள்ளவர்களாக விளங்கினார்கள். செல்வாக்கு மிக்க இந்த ஜில்லா போர்டுத் தலைவர்களை 'மாவட்ட மந்திரிகள்' என்றே அழைக்கலாம்.

இத்தகைய மாவட்ட மந்திரிகள் தமிழ்நாட்டில் மாவட்டந்தோறும் செயல்படுவார்களேயானால், மாநில அரசில் 30 மந்திரிகளுக்கு அவசியம் இருக்காது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் முன்பு ஜில்லா போர்டுத் தலைவர்கள்தான் இருந்தனர். 1960–இல் ஜில்லா போர்டு என்பது மாவட்ட வளர்ச்சிக் கழகமாக மாற்றப்பட்டுவிட்டது.

இப்போதுள்ள மாவட்ட வளர்ச்சிக் கழகத்தில் மாவட்டத்தின் எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், நகரசபைத் தலைவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். மாவட்டக் கலெக்டர் இதன் தலைவராக உள்ளார். அரசு அதிகாரி அல்லாத ஒருவர் தலைவராகச் செயல்படுவதுதான் சரியானதாக இருக்கும். இதனை இனிமேலாவது மாற்றலாம்.

ஜில்லா போர்டு நிர்வாகத்தின் கீழ்தான் அன்றைய உயர்நிலைப் பள்ளிகள் சிறப்பாகச் செயல்பட்டன. கல்லூரிப் படிப்புதான் தனியார் கையிலும், மாநில அரசின் கையிலும் இருந்தது.

கிராமப்புற மருத்துவமனைகளில் மருத்துவர் நியமனம், பள்ளிகளில் ஆசிரியர் நியமனம், சாலை அபிவிருத்தி, ஏரி, குளங்கள் பராமரிப்பு, சந்தைகள் இப்படிப் பல துறைகளும் ஜில்லா போர்டின் கீழ் தான் செயல்பட்டன.

உள்ளாட்சிகளான 12 ஆயிரத்து 618 பஞ்சாயத்துகளிலும், 385 பஞ்சாயத்து ஒன்றியங்களிலும் 1 லட்சத்து 16 ஆயிரம் உறுப்பினர்கள் சென்ற 5 ஆண்டுகளாகச் செயல்பட்டு வந்துள்ளனர். இதனால், ஜனநாயகத் தத்துவம் டெல்லி நாடாளுமன்றத்தில் மட்டுமல்லாமல், கிராமப் பஞ்சாயத்துகளிலும் வேரோடியது.

பஞ்சாயத்து என்பது ஜனநாயகத்தின் ஆரம்பப் பாடசாலை. அந்த ஜனநாயகத்திலிருந்துதான் குடியரசுத் தலைவரும், பிரதமரும், உருவாகிறார்கள். ●

தேனீக்கு ஒரு தேம்பாவணி



இறைமகன் ஜெனித்

உழைப்பின் உதாரணம் நீ!
சேமிப்பின் சின்னம் நீ!

சமுதாய வாழ்வின்
சரியான அடையாளம் நீ!

அறிவியல் அறிந்த ஓரறிவே
வடிவங்களிலே ⬡ தான்
உட்பரப்பு அதிகமென உனக்கு
உணர்த்தியது யார்?

உன்னைக் கண்டு
எப்போதும் வியக்கும் நான்
இப்போது விம்முகிறேன்!

ஓயா உன் உழைப்புக்கு
தீயா ஊதியம்?

பறந்து பறந்து நீ
பாடுபட்டுத் தேடியதை
பாவி நீ
பருகாமலேயே கருகிவிட்டாயே!

விளையாடும் சிறுவர்கள்
வினையாகக் கல்லெறிய
உழைத்துக் கட்டிய உன் கூடு
உருக்குலைவது கண்டு
உயிர்துடித்த நீயும்
ஆத்திரத்தில் அறிவிழந்து
அடித்தவரை விடுத்து
அடுத்தவரைக் கொட்டி
அழியாப் பழி சேர்த்தாய்!
போனது புகார்! வந்தது சர்க்கார்!

தீயணைப்புத் துறையே!
தீக்கிரையாக்கிய துனையே!
கருகும்போதும் உன்
உள்ளத்துக் கேள்வியை
உலகம் உணருமோ!

"கல்லடிபட்டு என் கூடு கலையவே
தற்காப்புத் தாக்குதல் நடத்திய
ஓரறிவுக்கு மரண தண்டனை
கல்விட்டு என் கூடு கலைத்த
ஆறறிவிற்கு என்ன தண்டனை?"

சிற்றுயிரே!
கையறு நிலையில் கதறும்
ஆறுதலடையா என் மனம்
ஆற்றாமையால் அளிக்கும்
அறிவுரை கேள் :

"நடந்தது கேட்கவும், நியாயம் தீர்க்கவும்
நல்லவர் இல்லா நாட்டினை நாடாமல்
காட்டிலேயே கண்ணியமாய் இரு!
தேனைச் சேர்த்து தீயில் கருகாமல்
தேவையானதைத் தேடு!
தேடியதைப் பருகு தெவிட்டும் வரை!
அதுவரையில் அழியா உன்
ஆன்மா அமைதியடையட்டும்!

ஜீவா



சொ.சொ.மீ. சுந்தரம்



தீவினை மாற்றும் திருமந்திரம் 5

இறைவனை உணர்ந்து பேரின்பம் பெற்ற திருமூலர், அந்த இன்பத்தை உலகமெல்லாம் பெற வேண்டும் என்று எண்ணினார். அதற்காகத் தவம் கிடந்தார். திருமந்திரம் பாடினார்.

“திருக்குறள் தமிழ் வேதம், திருவாசகம் தமிழ் உபநிடதம், திருமந்திரம் தமிழ் ஆகமம்” என்றார், வள்ளல் பெருமானார் திருவருட்பாவை எழுத்தெண்ணிப் படித்த ஊரன்அடிகள்.

வானளாவிய அறிவு மயமான மறைப்பொருள் இறைவன். அவனைப் பாடும் மந்திரம் உடம்பில் உணர்வுகளைத் தூண்டும். ஆறு ஆதாரங்களிலும் அமுதம் பாயும். அற்புதமான அமுதத் தாரைகள் எற்புத் துளைதொறும் ஏறும். சிந்திக்கச் சிந்திக்கச் சிவம் வந்து நம்மோடு பொருந்தும்.



“ஒன்றி இருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை” என்பது அப்பர் வாக்கு. புறத்தே உள்ள பொருளை விரும்பி அடையும் மகிழ்வைவிட, அகப்பொருளான இறைவனைத் தேடி அடையும் ஆனந்தம் அளக்க முடியாதது. இதை நான் அடைந்தேன், நீங்களும் அடைய வேண்டாமா? “சேர வாரும் செகத்தீரே” என்று அழைப்பதுதான் திருமூலர் நோக்கம்.

“நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்” என்பதுதான் திருமந்திரத்தின் கருப்பொருள் ஆகும். திருமூலர் சிவானந்தம் பெற்றார். அதை எல்லோருக்கும் வாரி வழங்க நினைத்தார். கொடுப்பதுதானே சிறப்பு!

காற்றை உள்ளே பூட்டி வைக்கும் கால்பந்து மிதிக்கப்படுகிறது. காற்றை ஏழு துளைகளின் வழியே எல்லோருக்கும் கொடுக்கும் புல்லாங்குழல் மதிக்கப்படுகிறது. கொடுப்பதுதானே சிறப்பு! எல்லையற்ற பரம்பொருளான இறைவனை அடைய வேண்டும் என்றால், அன்பு வடிவாய் அனைவருக்கும் நாம் பெற்றதைப் பகிர்ந்து கொடுக்க வேண்டும்.

நல்ல சிந்தனைகள் உடம்



பையும் காக்கும், மனத்தையும் பக்குவப்படுத்தும். பக்குவப் பட்ட மனம் பரமன் விரும்பு கோயிலாகும். சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான் என்பது திருவாசகம்.

"உள்ளம் பெருங்கோயில்; ஊனுடம்பு ஆலயம்;

வள்ளல் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்;

தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்;

கள்ளப் புலன்ஐந்தும் காளா மணிவிளக்கே" (1799)

என்பது திருமந்திரம்.



இறையருள் பெறக் குருவை வழிபடுதல், சிவலிங்கப் பெருமானை வழிபடுதல், சிவனடியார்களை வழிபடுதல் என மூன்று வழிகள் உள்ளன. இவற்றைக் குரு, லிங்க, சங்கம வழிபாடு என்பர். சங்கமம் என்ற சொல் அடியார்களைக் குறிக்கும். இம்மூன்று வழிபாடுகளில் குரு வழிபாடும், சங்கம வழிபாடும் குருவருள் பெற்ற சான்றோர்களுக்கே உரியன வாகும். சிவலிங்க வழிபாடு யாவருக்கும் உரியதாகும்.



சிவஞானம் முதிரப் பெற்றவர்க்கு அவர்கள் உடம்பே கோயிலாகும். உள்ளம் கருவறையாகும். வள்ளல் பிரா னாகிய இறைவன் கோயிலில் வாயே வாயிலாகும். தெளிவு பெற்ற ஞானிகளுக்கு அவர்களுடைய உயிரே சிவமாகும். மயக்கம் தரும் ஐந்து புலன்களும் அழகான பெரிய மணிவிளக்குகள் ஆகும். இங்கே செய்யப்படும் அக வழிபாடு மிகச்சிறந்த சிவபூசையாகும். இந்தப் பூசை ஞானியர் உளத்தில் எப்பொழுதும் நடந்துகொண்டே இருக்கும்.

இந்த வழிபாட்டை, "காவித்துணி வேண்டாம் கற்றைச் சடை வேண்டாம்; பாவித்தல் போதும் பரமன் நிலை எய்திடலாம்" என்பார் பாரதியார். இது சிவபூசை யின் ஞானப்பகுதியாகும்.

தோத்திரப் பாடல்கள் தேவையா? : சிவ வழிபாட் டில் இறைவனுக்கு நைவேத்தியம் என்ற பெயரில் உணவைக் காட்டி மகிழ்விக்கிறோம். நம்மால் ஊட்டி மகிழ்விக்க முடியாது. திருநாரையூர்ப் பொல்லாப் பிள் ளையாருக்கு, நம்பியாண்டார் நம்பி உணவை ஊட்டி மகிழ்வித்தார். கல்கத்தா தட்சிணேஸ்வரத்தில் பகவான் இராமகிருஷ்ணர், பவதாரிணியான காளிமாதாவுக்கு உணவை ஊட்டி மகிழ்ந்தார். நம்மால் இது முடியாது. நாம் காட்டித்தான் மகிழலாம். இறைவனுக்குப் படைத்துவிட்டு, நாம்தான் உண்கிறோம். இப்படிக் காட்டி மகிழ்வதையும் இறைவன் ஏற்று மகிழ்கிறான்.



வேள்வி செய்பவர்கள் அந்த வேள்வித்தீயில் இடும் உணவை இறைவன் உண்டு மகிழ்கிறான். இந்த

தொடர்ச்சி : 13-ம் பக்கம்

கட்டுரை

12

பழகிப் பார்த்ததில் இவர்கள்...

தமிழறிஞர் ம.ரா.போ. குருசாமி



செம்மாந்த அறிஞர் பரம்பரையின் கடைசி முகங்கள் இவைதானோ என்று கவலையோடு கணிக்கக்கூடிய காலகட்டத்தில் நாம் வாழ்கிறோம். அத்தகைய முகங்களில் ஒன்றாய் நம் மனங்களில் மிளிர்பவர் மறைந்த தமிழறிஞர் ம.ரா.போ. குருசாமி அவர்கள்.

உன்னத ஒழுக்கங்களின் உறைவிடமாய், கண்ணியம் மிகுந்த காந்திராய் சங்க இலக்கியம் தொட்டுச் சமகால இலக்கியம் வரை ஆழ்ந்த ஆய்வும், தேடலும், புலமையும் மிகுந்த பேரறிஞராய் விளங்கிய அவரின் பெருமைகள் விரித்தால் பெருகும். சுருக்கினால் எங்கும் எஞ்சும்.

அவருடைய இல்லத்தில் இருந்து நான்கைந்து வீடுகள் தள்ளி நாங்கள் குடி வந்தபோது எனக்கு வயது 3. பேராசிரியருக்கும் எங்கள் குடும்பத்திற்கும் இணைப்புப் பாலமாக விளங்கியவர் அவர் வீட்டிற்கு எதிர்வீட்டில் குடியிருந்த தமிழறிஞரும் என் தந்தையாரின் உற்ற நண்பருமான பேராசிரியர் இராம. இருசுப்பிள்ளையவர்கள்.



கோவையில் தாமுநகர் என்னும் அந்தப் பகுதி பற்பல அறிஞர்கள் குடியிருந்த பகுதி என்பதெல்லாம் அந்த வயதில் எனக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

நாங்கள் முதல் மாடியில் குடியிருந்தோம். கீழ்த்தளத்தில் வீட்டின் உரிமையாளர் பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரி முதல்வர் பேராசிரியர் பி.ஆர். கிருஷ்ணமூர்த்தி இருந்தார்.

தமிழறிஞர் பேராசிரியர் தா.ஏ. ஞானமூர்த்தி, பாரதியார் பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தர் முனைவர் சுப்பையன், பேராசிரியர்கள் வேதபுரி கண்ணபிரான், ஹனுமந்த ராவ், புகழ்பெற்ற மருத்துவர் தம்பதிகள் தியாகராஜன் – சகுந்தலா தியாகராஜன் என அந்த வீதியில் வீட்டுக்கு வீடு வெளிச்சங்கள்தான்.

அத்தனை பேரும் மிகவும் மதிக்கக் கூடிய ஆளுமையாய் விளங்கியவர்தான் பேராசிரியர் ம.ரா.போ. குருசாமி அவர்கள்.

பின்னர் நாங்கள் அந்தப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து சொந்த வீடு கட்டிக் கொண்டு வந்த பின்னரும்கூட, இவர்களோடு குடும்ப நண்பர்களாக உறவுகள் தொடர்ந்தன.

பின்னர் என் கல்லூரிப் பருவத்தில் கோவை கம்பன் கழகக் கவியரங்கில் கவிதை பாட வாய்த்தது. பிரகலாதன்

மரபின் மைந்தன் முத்தையா

நரசிம்ம மூர்த்தியிடம் விண்ணப்பித்த வாசகம் ஒன்று தலைப்பாகத் தரப் பட்டது.

“அன்பு பெரும்பேறு அடியேற்கு அருள்” எனும் வாசகம் குறித்துக் கவிதை பாடப் பணிக்கப்பட்டிருந்தேன்.

முன்வரிசையில் சிங்கம் போல் வீற் றிருந்தார் பேராசிரியர் ம.ரா.போ. குரு சாமி அவர்கள். கவியரங்கில் பிரகலா தனை சைவசமயக் குரவர்கள் நால்வ ருடன் ஒப்பிட்டு ஒரு விருத்தம் பாடி னேன்.

ஆமோதிப்பாய்த் தலையசைத்த ம.ரா.போ. அவர்கள் பின்னால் திரும்பி, அங்கே அமர்ந்திருந்த திரு. ஜனார்த் தனனிடம் ‘யார் இந்தப் பையன்?’ என்று வினவுவது போல் முகக்குறி காட்ட, இன்னார் என்று அவரும் சொல்ல, பேராசிரியர் முகத்தில் புன் முறுவல் மலர்ந்தது.

அதன்பிறகு அவர்களோடு பல்வேறு சூழ்நிலைகளில் நெருங்கிப் பழகுகிற நல்வாய்ப்புகள் அமைந்தன. கோவையில் திருவள்ளுவர் கழகம்



“பொய் மனத்தார் உயிர் குடிக்கப் புகுந்த வேளை
பரம்பொருளின் பெயர் கூறி வென்ற தாலே
வைணவத்தின் அப்பர் நீ வயதால் பார்த்தால்
நாமமிட்ட சம்பந்தர்; ஊன் கரைந்து
செய்தவத்தில் சிக்குகிற இறையை அன்பில்
சிறைவைத்த காரணத்தால் சுந்தரர் போல்
மெய்யுருக்கும் சொல் நயங்கள் வளர்த்ததாலே
மணிவாசகர்க் கிணையாய் மாட்சி பெற்றாய்”

இந்த வரிகளைப் பாடியதும்

தொடங்கப்பட்டபோது அவர் செய லாளராக இருந்தார். என்னைச் செயற் குழுவில் சேர்த்திருந்தார்.

அப்போது ஒருமுறை திருக்குறளில் நகைச்சுவை எந்த அளவுக்கு இருக்கும் என்று கேட்டபோது, அவர் சொன்ன பதில் இதுதான் : “திருக்குறளில் நகைச் சுவை இருக்கும். ஆனால் அளவாக இருக்கும். போலீஸ்காரர் சிரிப்பது போல.”

திரு. வி. கல்யாணசுந்தரனார், ம.பொ.சி., மு. வரதராசனார், அ.ச.ஞா. முதலியோரால் உருவாக்கப்பட்ட பேராண்மை அவர். புலமையின் உயர மாகச் செம்மாந்து நின்றவர். ஆனால் யார் வணக்கம் சொன்னாலும் நின்று கைகூப்பி, சிரத்தைச் சற்றே தாழ்த்தி வணக்கம் சொல்லும் பண்பின் சிகர மாகவும் விளங்கினார்.

ரசிகமணி டி.கே.சி.யிடமும் நெருங்கிப் பழகியவர். தமிழில் எம்.ஏ. படித்து முடித்த கையோடு டி.கே.சி. யிடம் போய்ச் சொல்லியிருக்கிறார். அதற்கு டி.கே.சி. சொன்னாராம். "எம்.ஏ. முடிச்சுட்டீங்களா? அப்ப இனிமே தமிழ் படிக்கலாம்."

அவருடைய முனைவர் பட்டஆய்வு நூல் 'சங்க இலக்கியத்தில் குறிப்புப் பொருள்' என்பதாகும். அதை ஒருமுறை என்னிடம் கொடுத்து, "படிக்கக் கொஞ் சம் சிரமப்படும். ஆனாலும் படியுங் கள்" என்றார். உண்மைதான். அந்த நூலை ஒருவர் ஒழுங்காகப் படித்து உள் வாங்கிக் கொண்டால், அதற்காகவே அவருக்கு முனைவர் பட்டம் கொடுத்து விடலாம்.

திருக்குறள், சிலப்பதிகாரம், சங்க இலக்கியம் என வெவ்வேறு பேரிலக் கியங்கள் குறித்தும் விரிவான ஆய்வு நூல்களை அவர் வழங்கியிருக்கிறார். பாரதியார் பல்கலைக் கழகத்திற்குப் பாரதியார் கவிதைகளைச் சீரான வரிசை முறையில் தொகுத்துப் பதிப் பித்த பெருமையும் அவருக்கு உண்டு.

'கபிலம்' என்கிற தலைப்பில் கபில ரின் பாடல்கள் குறித்து அவர் எழுதிய ஆய்வு நூல், தான் எழுதிய 'காடு' நாவ லுக்கு ஓர் உத்வேகமாக விளங்கியதாக எழுத்தாளர் ஜெயமோகன் தனிப்பட்ட உரையாடல் ஒன்றில் என்னிடம் குறிப்பிட்டிருக்கிறார்.

மனதில் பட்டதை மேடையில் தயங் காமல் சொல்லும் பெருந்துணிவு அவருக்கிருந்தது. 1982 என்று ஞாபகம். இலக்கியவீதி அமைப்பின் விழா கோவையில் நிகழ்ந்தது. ஓர் அமர்வுக்கு ம.ரா.போ. தலைவர். கவிஞர் நா.காம ராசன் பேசினார். அவர் போக்கில் பேசிவிட்டு அமர்ந்தார். பின்னர் ம.ரா.போ சொன்னார் : "இத்தனை நேரம் காமராசனை நான் சகித்துக் கொண்டிருந்தேன்."

ஒரு நிகழ்ச்சியில் இப்போது கடவுள் வாழ்த்து என அறிவிக்கப்பட்டுத் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடப்பட்டது. பேசும் போது பேராசிரியர் சொன்னார்: "தமிழ் தான் எனக்குச் சோறு போடுகிறது. ஆனால் கடவுள் வாழ்த்து வேறு; தமிழ்த்தாய் வாழ்த்து வேறு. யார் அறிவித்திருந்தாலும் இது தவறுதான்."

1997–இல் என்னுடைய இரண்டா வது கவிதைத் தொகுப்பு வெளிவந்த போது அதன் வெளியீட்டு விழா கோவை பீளமேடு மணி மஹால் அரங் கில் நிகழ்ந்தது. கவிஞர் வைரமுத்து அந்நூலை வெளியிட 'ஓம்சக்தி' ஆசிரியர் கவிஞர் பெ. சிதம்பரநாதன், டாக்டர் மனோகர், டேவிட் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். அந்த விழா விற்குத் தலைமை தாங்க ம.ரா.போ குருசாமி அவர்களைக் கேட்டுக் கொண் டேன். இசைவு தந்ததுடன் முன்ன தாகவே கவிதை நூலை வாங்கி முழு வதும் படித்துவிட்டார்.

அவர் முழுவதும் படித்து இருந்த தற்கு அடையாளம் ஒவ்வொரு பக்கத் திலும் சில வரிகளை அடிக்கோடிட்டு அதில் சில இலக்கியக் குறிப்புகளை அவர் எழுதி இருப்பார். அந்த நூலிலும் சரி, அதன்பின் வந்த மற்ற நூல்களிலும் சரி, அதேபோலக் குறிப்புகள் எழுதி அந்த நூலை என்னிடம் கொடுத்து விட்டு வேறு நூல் பெற்றுக்கொள்கிற வழக்கத்தை அவர் கைக்கொண் டிருந்தார்.

அப்போது அந்த நூலில் இருந்த ஒன்றிரண்டு வெண்பாக்களை அடிக் கோடிட்டு 'நேரில் பேசவும்' என்று குறிப்பு எழுதியிருந்தார். நேரில் பார்த்த போது "வெண்பா எங்கேயும் தளை தட்டவில்லை. ஆனால் ஒரு வெண்பா முழுவதுமே காய்ச் சீர்களாக அமைந்

திருக்கின்றது. அப்படி இருந்தால் வெண் பாவுக்கு உரிய செப்பலோசை அடி படும். எனவே இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை இரண்டும் விரவி வரவேண்டும்" என நுட்பமாக அறிவுறுத்தினார். பின்னர் ஒரு முறை இதே வெண்பா இலக்கணம் குறித்து அவருக்கும் எனக்கும் ஒரு சுவையான விவாதம் நிகழ்ந்தது.

'வெற்றிவேலன் வெண்பாமாலை' என்ற தலைப்பில் அவர் எழுதிய வெண்பா நூலுக்கான திறனாய்வை நான் நடத்திவந்த 'ரசனை' மாத இதழில் எழுதியிருந்தேன். பொதுவாக வெண்பா வில் மாச்சீர், விளச்சீர், காய்ச்சீர் ஆகியவை மட்டும்தான் இடம்பெறும். ஆனால் இந்த நூலில் ஓரிடத்தில் பூச்சீர் களும் கனிச் சீர்களும் இடம்பெற்றி ருந்தன. அது வெண்பா மரபில் ஏற்கப் பட்டதல்ல என்றாலும் அவ்வளவு பெரிய அறிஞர் எழுதினால் காரணம் இருக்கும் என்று எனக்குத் தோன்றியது.

எனவே அந்த வெண்பாவைச் சுட்டிக்காட்டி, முருக வழிபாட்டிற்குப் பூவும் கனியும் வேண்டும் என்பதால் இவ்வாறு எழுதப்பட்டிருக்கும் போலும் என்று மறைமுகமாகக் குறிப்பிட்டிருந் தேன்.

இதழ் வெளிவந்ததும் அவரிட மிருந்து ஒரு கடிதம் வந்தது. "வழி பாட்டுக்காக என்று பூவும் கனியும் சேர்க்கப்படவில்லை. அப்படி வந்திருந் தால் அது தவறுதான்" என்று குறிப் பிட்ட அவரின் பெருந்தன்மை மறக்க முடியாதது. அத்துடன் நில்லாமல், வேறுசில இலக்கியங்களில் விதிவிலக் காக வெண்பாவில் பூச்சீர்கள் இடம் பெற்ற ஒன்றிரண்டு இடங்களையும் மேற்கோள் காட்டியிருந்தார்.

பின்னர் தன்னை உருவாக்கிய பேராசிரியர் பெருமக்கள், அறிஞர்கள் பற்றி, அவர் 'ரசனை' இதழில் 'குரு முகம்' எனும் தலைப்பில் ஓர் அரிய தொடரை எழுதினார். அது நூலாகவும் வெளிவந்தது. இன்றளவும் கடந்த நூற்றாண்டின் தமிழ் உலகத் திலகங்கள் பற்றிய ஓர் அரிய களஞ்சியமாகவே அந் நூல் திகழ்கிறது. அதற்கு முன்னோடி நூலாக அ.ச.ஞா. அவர்கள் எழுதிய 'நான் கண்ட பெரியவர்கள்' என்னும் நூலைச் சொல்லலாம்.

பின்னர் என் ஐம்பதாவது நூல் வெளிவந்ததையொட்டி என்னுடைய 50 நூல்களின் சில பகுதிகளைக் கொண்ட தொகுப்பு நூலும் வெளிவந்தது... 'மரபின் மைந்தன் எழுத்துக் கருவூலம்' எனும் தலைப்பில் வெளிவந்த அந்தத் தொகுப்பு நூல் காலையிலும் என் ஐம்பதாவது நூலாகிய 'திருக்கடவூர்' மாலையிலும் வெளியிடப்பட்டன.

மரபின் மைந்தன் எழுத்துக் கரு வூலம் எனும் தொகுப்பு நூலை டாக்டர் பி.கே. கிருஷ்ணராஜ் வாணவராயர் தலைமையில் ம.ரா போ குருசாமி அவர்கள் வெளியிட, மலேசிய அமைச்சர் டத்தோஸ்ரீ சரவணன் பெற்றுக்கொண்டார். விழாவில் பேசும்போது ம.ரா.போ அவர்கள் "நூலாசிரியருக்கு வயது நாற்பத்தாறு. எனக்கு 94. நாற்பத்தாறு அழைத்தால் 94 வருகிறது" என்று குறிப்பிட்டார். சில மாதங்களில் அவர் உடல் நலி வுற்றார்.

ஒருநாள் அவருடைய மகனிட மிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு. "அப்பா உடம்பு முடியாம இருக்காங்க. உங்களைப் பார்க்கணும்ங்கிறாங்க." அன்று மாலையே அவர் இல்லம் சென் றேன். படுத்த படுக்கையாக இருந்தார். என்னைப் பார்த்ததும் "கொஞ்ச நேரம் செலவழிக்கலாமில்லையா" என்று கேட்டார். பின்னர் ஏறக்குறைய 40 நிமி டங்கள் என்னிடம் பேசினார். அதில் சரிபாதி எனக்குப் புரியாத அளவு அவருக்கு நாக்குழறல் ஏற்பட்டிருந்தது. ஓரிரு நாட்களிலேயே அவர் மறைந்தார்.

இன்னும் இரண்டாண்டுகளில் அவருக்கு நூற்றாண்டு வருகிறது. தமி ழின் ஆழத்தைத் தரிசித்த அந்தத் தலை யாய அறிஞரின் நினைவுகளும் படைப் புகளும் நிலைத்து வாழ்க! ●

8-ம் பக்கத் தொடர்ச்சி

உணவுக்கு அவி உணவு என்று பெயர். சிவலிங்க வழிபாடு செய்பவர்கள் இலிங்கத்தின் முன்வைத்துக் கையை அசைத்துக் காட்டுகின்ற பொருளை இறைவன் கண்டபோதே உண்டு மகிழ்கிறான்.

இந்த இரண்டும் செய்ய முடியாதவர்கள் இறைவனுக்கு எதைக் கொடுக்கலாம்? அவன் திருவுள்ளத்தை மகிழ வைக்கும் நல்ல தோத்திரப் பாடல்களைச் சொல்லி மகிழ்விக்கலாம். அவன் பாட்டுக்கு ஆசைப் படுபவன். இது சொல் உணவாக இருந்தாலும், அவனுக்கு அது பாற்சோறு போல் இனிக்கும் என்கிறார் திருமூலர்.

“வேட்டவி உண்ணும் விரிசடை நந்திக்குக்
காட்டவும் யாம்இலம் காலையும் மாலையும்
ஊட்டவி யாவன உள்ளம் குளிர்விக்கும்
பாட்டவி காட்டுதும் பால்அவி யாமே.” (1800)

என்பது திருமந்திரம்.

‘நிவேதித்தல்’ என்ற சொல்லுக்கு நன்றாக அறிவித்தல் என்று பொருள். இதுவே தமிழில் காட்டுதல் எனப் பட்டது. காலையும், மாலையும் என்ற இரண்டு நேரமாவது தோத்திரப் பாடல்களைப் பாடவேண்டும். இக் கருத்தை அப்பரடிகள்,

“காயமே கோயிலாகக் கடிமணம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக
நேயமே நெய்யும் பாலா நிறையநீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே.”

என்று குறிப்பிடுகிறார். மேலும் திருவாரூர்த் தேவாரத்தில்,

“பாலை நகுபனி வெண்மதி பைங்கொன்றை
மாலையும் கண்ணியம் ஆவன சேவடி
காலையும் மாலையும் கைதொழு வார்மனம்
ஆலயம் ஆரூர் அரநெறி யார்க்கே”

என்றும் பாடி, இரண்டு வேளை வழிபாடு செய்யத் தூண்டுகிறார். அந்தியும், நண்பகலும் அஞ்சுபதம் சொல்லித் திருமுறைகளான பாட்டவி காட்டிப் பரமனைப் பணிய வேண்டும் என்பது திருமூலர் திருவுள்ளம்.

ஏன் பிறந்தோம்? : ஒவ்வொரு பிறவிக்கும் ஒவ்வொரு நோக்கம் உள்ளது. குறிக்கோள் இலாத வாழ்க்கை மனித வாழ்க்கையாகாது. எந்தக் குறிக்கோளும் இல்லாமல் நாய் ஓடிக்கொண்டே இருப்பதால், அதை இழிபிறவி என்கிறோம். இறைவன் தன்னை நன்றாகப் படைத்தனன் என்று மகிழ்ச்சிப் பெருமிதம் கொள்ளும் திருமூலர், ஏன் படைத்தான் என்று உணர்ந்து மேலும் மகிழ்கிறார்.

தமிழில் ஆகமங்களை விளக்கி இறைவன் புகழ் பாடவே தன்னைப் படைத்து அனுப்பியிருக்கிறான் என்று பேசுகிறார். “என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே” என்ற வரிகள், கேட்கும் பொழுதெல்லாம் செவி குளிரத் தேன்பொழியும் செந்தமிழ்ப் பாமலர்கள்.

முன்னைப் பிறவியில் தவம் செய்யாதவர்கள் மேலும் மேலும் பிறவி பெறுவர். நான் செய்த தவத்தால் எனக்கு இந்த நற்பிறவி கிடைத்தது என்கிறார் திருமூலர். ‘தமிழ் செய்தல்’ என்பது திருமூலர் தந்த வழக்குத் தொடர். இத்தொடருக்குத் ‘தமிழ் பாடுதல்’ என்று மட்டும் பொருள் கொள்ளக்கூடாது.

தமிழ் என்றால் இனிமை என்று பொருள். ‘தமிழ் தழீஇய சாயல்’ என்று சங்க இலக்கியம் பேசும். இனிமையும் நீர்மையும் தமிழெனலாகும் என்பது பிங்கல நிகண்டு. இதன்படி பார்த்தால், இறைவனைப் பாடியும் பரவியும் வாழ்த்தியும் வணங்கியும் இன்புறுத்துவதற்காகவே ‘என்னை

நன்றாக இறைவன் படைத்தனன்' என்கிறார் திருமூலர்.

பிறவியின் நோக்கம் இறையின்பம் துய்த்தலே என்பது திருமூலர் சிந்தனையாகும். இறைவனோடு கலந்து இன்புறும் நிலையை ஆன்மாவுக்கு வழங்கும் வல்லமை மிக்கது தமிழ். இது மொழியை மட்டுமின்றி, இனிமையையும் குறிக்கிறது.

பதி, பசு, பாசம் : உயிர் நிலையானது, உடல் நிலையற்றது. உயிரை ஆன்மா என்றும், பசு என்றும் கூறுவர். 'பச்' என்றால் கட்டப்படுவது என்று பொருள். பசுவை ஒரு கயிற்றால் கட்டுவர். குதிரையை இரண்டு கயிறுகளால் கட்டுவர். யானையை மூன்று சங்கிலிகளால் கட்டுவர். ஊஞ்சலை நான்கு சங்கிலிகளால் கட்டுவர். ஆன்மாவை உடம்போடு இணைத்து மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து சங்கிலிகளால் கட்டியிருக்கிறார்கள். எனவே, ஆன்மா பசு எனப்பட்டது.

இறைவன்தான் பதி. அதாவது தலைவன். இறைவனை மறைப்பது ஆன்மாவோடு தொடர்புடைய பாசம். (இப்பாசம் ஆணவம், கன்மம், மாயை என மூன்றாக வரும்). சைவ சித்தாந்தத்தில் முப்பொருள் உண்மை என்று இம்மூன்றையும் குறிப்பர். பதி, பசு, பாசம் என்ற மூன்றும் முப்பொருள். இவை என்றைக்கும் உள்ளவை. இவை ஒன்றையொன்று உண்டாக்கவில்லை. இவை அனாதியானவை. இவற்றுக்கு இடைப்பட்ட தொடர்பை மிக அழகாகக் கூறியவர் திருமூலர். அவர் கருத்துப்படி,

1. பதி, பசு, பாசம் என்ற மூன்றில் பதியைப் போலவே பசுவும் பாசமும் என்றும் உள்ளவை.
2. பசுவான ஆன்மா பாசத்தோடு கூடி இருக்கும்போது இறைவனை அணுக முடியாது.
3. இறைவன் அணுகினால் பசுவை விட்டுப் பாசம் போய்விடும். இதனால், பசுத்தன்மை மாறிச் சீவன் சிவநிலையடையும். அவனருளாலே அவன் தாள் வணங்கினால் சீவனுக்குள்ளே சிவமணம் பூக்கும். இதை,

"பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணு காபசு பாசம்
பதியணுகில் பசுபாசம் நில்லாவே (115)

என்று பாடுகிறார் திருமூலர். இது சைவ சித்தாந்தத்தின் திரண்ட கருத்தாகும்.

மெய்கண்டார் எழுதிய சிவஞான போதச் செம்பொருளை அவர் பிறப்பதற்குப் பலநூறு ஆண்டுகளுக்கு முன்னால் மிகச் சுருக்கமாகக் கூறியவர் திருமூலர். பசுவாகிய ஆன்மாவுக்குச் சுதந்திரம் இல்லை. பாசம் ஜடம், அறிவற்றது. எனவே, இவற்றால் ஆண்டவனை அடைய முடியாது. ஆன்மாவின் வழிபாடு முதிரும்போது ஆண்டவன் அணுகுவான். அப்படி அணுகினால்தான் பாசம் கழன்று, பசு இறைவனைச் சேரும். இக்கருத்தை,


"பசுப்பல கோடி பிரமன் முதலாய்
பசுக்களைக் கட்டிய பாச மூன்றுண்டு
பசுத்தன்மை நீக்கிஅப் பாசம் அறுத்தால்
பசுக்கள் தலைவனைப் பற்றி விடாவே" (2406)

என்று மீண்டும் குறிப்பிடுகிறார் திருமூலர்.

பிரமன் முதலிய தேவர்கள்கூடப் பாசத்தால் கட்டப்பெற்ற பசுக்களே ஆவர். பாசக்கட்டு அகன்றால், பசுத்தன்மை நீங்கிப் பசுக்கள் தலைவனை விடாமல் பற்றிக் கொள்ளும். இறைவழிபாட்டினால் பாசநீக்கம் கைகூடும் என்பது திருமூலர் கூறும் சைவ சித்தாந்தமாகும்.

●

நூல் விமர்சனம்



பேரா. தி. இராசகோபாலன் தனது கல்லூரிப் பணியின் மூலமாகப் பேராசிரியராக இருந்தார் என்பது எல்லோருக்கும் தெரியும். கல்லூரிப் பேராசிரியர் பதவி என்பது அவருக்குச் சாப்பாடு போட்ட ஒரு சாதனம். அவ்வளவுதான்.

ஆனால், எந்தக் கல்லூரியிலும் வேலை செய்யாத எழுத்தாளர் கல்கியை பேராசிரியர் கல்கி என்பார்கள். அந்தப் பட்டியலில் இரண்டாவதாக இடம்பெறத் தக்கவர் தான் பேரா. தி. இராசகோபாலன். இவர் எழுதியுள்ள நூல்கள் 12.

13–வது நூலாக உள்ளது இந்நூல். இது அவருடைய பரிணாமத்தின் உச்சத்தைக் காட்டுகிற நூல் என்றால் மிகையல்ல. இந்நூலுக்கு அணிந்துரை அளித்தவர் எழுத்தாளர் மாலன் அவர்கள். தமிழுக்குப் புதிய பரிமாணத்திற்கான ஒடுபாதையை அமைத்தவர் அவர்.

பொதுவாகத் தமிழ்ப் பேராசிரியர்கள் மீது அவருக்கிருந்த தணியாத மனக்குறையை பேரா. இராசகோபாலன் பூஜ்ஜியமாக்கினார் என்பதைவிட, மாலனுக்கு ஒரு புதிய படைப்பைத் தந்து அவரைப் பூரணமாக்கினார் என்றாலும் தவறில்லை.

மனவெளிப் பறவைகள்

பொங்கல் உணவில் தட்டுப்படுகிற முந்திரிப் பருப்புகளைப் பொறுக்கியெடுத்துத் தனியாகச் சுவைப்பதைப் போலவே பேரா. இராசகோபாலன் கையாண்ட மேற்கோள்களை ஒரு களஞ்சியமாகவே பாதுகாத்து வந்திருக்கிறார் திரு. மாலன் அவர்கள்.

சாற்றுக்கவி பாடிய கவிஞர் மரபின் மைந்தன் முத்தையா, இவரைத் தலை விளக்காய்ச் சுடர்வீச, அவருடைய திருக்கடவூர் அபிராமியை வேண்டியதை மறக்க முடியாது.

பேரா. இராசகோபாலன் தனது "என்னுரை"யில், தன்னை ஒரு நகரச்சுத்தித் தொழிலாளியாகக் கற்பித்துக் கொண்டு சுத்தப் படுத்துவதற்காகச் சூறாவளிப் பயணம் மேற்கொண்டதை வரிக்கு வரி சிந்திக்கும்படி எழுதியுள்ளார்.



நூலாசிரியர்
தி. இராசகோபாலன்

அவருடைய மனவெளியிலிருந்து வெளிப்பட்ட 33 கட்டுரைகள், 33 பறவைகளாகச் சிறகடித்துள்ளன. அந்தக் கட்டுரைகளில் முதல் கட்டுரைக்கு எண் வழியாகச் சொல்லப்படுகிற முதல் என்பதற்கு மூலதனம் என்றும் ஒரு பொருள் உண்டு. அது அசல். அத்தகைய சிறந்த கட்டுரை.

இந்தச் சமூகம் எந்தளவுக்குச் சுத்திகரிக்கப்பட வேண்டும் என்பதை மிக நேர்த்தியாகவும், நெஞ்சுரத்தோடும் சொல்லியிருக்கிறார். பாவேந்தரை மேற்கோள் காட்டி, ஒவ்வொருவரும் தாயுள்ளத்தோடு பார்ப்பார்களானால் அங்கே சண்டையில்லை; சச்சரவில்லை என்ற சூழ்நிலை உருவாகும் என்பதை மிக அழகாக எடுத்துக்காட்டியிருக்கிறார்.

அந்தக் கட்டுரையின் இறுதிப் பகுதியில் இரண்டு எதிரெதிர் சிந்தனைகளை வள்ளுவன் எப்படி வடிவமைத்தான் என்பதை அழகுற அமைத் திருக்கிறார். 'குடிமை' என்பது பற்றி வள்ளுவன் பாடிய 10 குறள்களும் முத்துக் குறள்கள். அதற்கு எதிராக அவன் பாடிய 10 குறள்கள் 'கயமை' எனும் அதிகாரத்தில் உள்ளவை.

குடிமைக்கும் கயமைக்கும் உள்ள வித்தியா சத்தைப் பார்த்தாலே போதும்; நாம் இந்தச் சமு தாயத்தைப் படித்தவர்களாவோம். அதில் ஒரு வரி – தீமை செய்வதற்கு அஞ்ச வேண்டும் என்பது நமது வழக்கு. நாண வேண்டும் என்றும் சொல் வார்கள்.

ஆனால் பேராசிரியரோ, ''தீமை செய்வதற்கு வெட்கப்படு'' என்கிறார். தீமையை யாருமில்லா நேரத்தில் ஒருவன் செய்துவிடலாம். ஆனால், வெட்கப்படுபவனாக இருந்தால், அந்தத் தீமையை நிச்சயமாகச் செய்யவே மாட்டான்.

அந்தக் கட்டுரைக்குப் பிறகு, ஒவ்வொரு கட்டுரையிலும் கால்பதித்து நடப்பதைப் போல மனம் பதித்து நடந்தேன்.

'மரணத்தை வென்ற மகாக்கவிஞன்' என்ற கவியரசு கண்ணதாசனைப் பற்றிய கட்டுரை. என்னை நில், கவனி, செல் என்று தடுத்தது. 54 ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்து மறைந்துபோன அந்தக் கவிஞனைப் பற்றிப் பேராசிரியர் இராச கோபாலன் தனக்கே உரிய நகைச்சுவையோடு,

"உனக்கோ மூன்று தாரங்கள்
எனினும் தமிழ்தான்
உனக்கு மூலாதாரம்"

என்று வாலிபக் கவிஞர் வாலியை மேற்கோள் காட்டிச் சிலிர்க்க வைத்திருக்கிறார்.

ஒரு கவியரங்கத்தில் கவியரசர் கண்ண தாசனைப் பற்றி நான் இப்படிப் பாடினேன் :

"மூப்படைந்து போனதாகத் தமிழை
அன்னையெனச் சொன்னார்கள்
ஆனால் அவளோ
பூப்படைந்துவிட்ட பருவத்துக் கன்னியாய்
நிலாப்போல் உலாவந்ததைப் பார்த்தவன் நீ!
தமிழைத் தங்க நாதசுரம் வாசித்து
வரவேற்ற கவிஞன் நீ"

என்று பாடினேன்.

அத்தகைய கவியரசு கண்ணதாசனைப் பற்றிப் பேராசிரியரே ஒருவேளை இப்படி ஒப்புக் கொள்ளலாம். கவிச்சக்கரவர்த்தி கம்பனை நூறு இடங்களில் தோற்கடித்தவன் கவியரசு கண்ண தாசன். சக்கரவர்த்தி அரசனிடம் தோற்றுப் போவது ஓர் அதிசயம்தான். அதற்கு ஓர் உதாரணம்,

"நதியில் விளையாடி
கொடியில் தலைசீவி
நடந்த இளந்தென்றலே"

எந்த மேலைநாட்டுக் கவிஞன் இந்த ஏழை நாட்டுக் கவிஞனைப் போலக் கற்பனை செய் தான். எனக்குத் தெரிந்தவரை இல்லை. ஒரு வேளை ஷேக்ஸ்பியர் சிந்தித்திருக்கலாம்.

ஜூலியஸ் சீசரை புரூட்டோ கட்டாரியால் குத்திக் கொலை செய்கிறான். குபுகுபு என்று சிவப்பு ரத்தம் வெளிவருகிறது. அதைப் பற்றி ஷேக்ஸ்பியர் சொல்கிறான், ''தனது எஜமானரைக் கத்தியால் குத்தியவன் யார் என்று பார்க்கக் கடும் கோபத்தோடு அந்த ரத்தம் பாய்கிறது'' என்பான்.

இப்படி ஷேக்ஸ்பியருக்கு இணையாகக் கற் பனை செய்தவன் கவியரசு கண்ணதாசன். அவன் தொட்ட இடமெல்லாம் இலக்கியம். கைபட்ட இடமெல்லாம் தத்துவம். அவன் விட்ட இட மெல்லாம் நம்மை வியக்கவைக்கும் தர்மம். அவன் வழங்கிய எதுவும் வீணானது இல்லை.

பேராசிரியர் தி. இராசகோபாலன் சொன்ன தைப் போல, 500 ஆண்டுகளில் சாதிக்க வேண்டி யதை 54 ஆண்டுகளிலேயே சாதித்தவன் கவி யரசு கண்ணதாசன் என்பது உண்மை, சத்தியம்.

'தினமணி', 'ஓம் சக்தி', 'அமுதசுரபி' 'ராணி' முதலிய பத்திரிகைகளில் வெளிவந்த இத்தகைய சிறந்த கட்டுரைகளை நூலாகத் தொகுத்துத் தமிழன்னைக்குச் சாத்தியுள்ள பேரா சிரியரை எப்படிப் பெருமைப்படுத்தினாலும் தகும்.

'மனவெளிப் பறவைகள்', ஆசிரியர் : பேரா. தி. இராசகோபாலன், வெளியீடு : வானதி பதிப்பகம், 23, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை – 17, பக். : 248, விலை ரூ. 200/–.

– ந.நி.

நா. சியாமளா



காலமென்னும் கலங்கரை விளக்கம்



காலம் என்பது நம் ஒவ்வொருவரின் கைகளிலும் தவழ்ந்து கொண்டிருக்கும் குழந்தையைப் போன்றது. காலத்தைக் காலத்தோடு பயன்படுத்தாவிட்டால், அக்காலத்தை நம்மால் உரிமை கொண்டாட முடியாது. கிடைக்கும் ஒவ்வொரு நிமிடத்தையும் முறையாகப் பயன்படுத்திக் கொள்பவனே சாதனையாளனாகிறான்.

இன்று செய்ய வேண்டியதை நாளைக்கு எனத் தள்ளிப் போடாமல் இன்றே செய்து முடியுங்கள் என்று செஸ்டர்பீல்டு பிரபு என்ற அறிஞர் கூறுகிறார்.

நேரமே இல்லை இல்லை என்று அலுத்துக் கொள்பவரா நீங்கள்? அப்படியானால் இந்நிகழ்வை உற்றுப் பாருங்கள். ஒரு கல்லூரி. தத்துவ வகுப்பு ஆரம்பமானது. பேராசிரியர் வகுப்பிற்குள் நுழையும் போதே தன் கைகளில் சில பொருட்களைக் கொண்டு வந்தார்.

மாணவர்களிடம் எதுவும் பேசாமல் முதலில் தான் கொண்டுவந்த பொருட்களிலிருந்து ஒரு பெரிய மயோனைஸ் ஜாடியை எடுத்து மேசைமேல் வைத்தார். தன்னிடமிருந்த கோல்ப் (Golf) பந்துகளை ஜாடி நிரம்பும்வரை போட்டார்.



மாணவர்களைக் கேட்டார்: "ஜாடி நிரம்பி இருக்கிறதா?"

"ஆம்" என்றனர் மாணவர்கள்.

அடுத்ததாகக் கூழாங்கற்கள் நிறைந்த ஒரு பெட்டியைத் திறந்து அவற்றைக் கோல்ப் பந்துகள் நிறைந்த ஜாடியில் கொட்டினார். ஜாடியைச் சற்றுக் குலுக்கினார். கூழாங்கற்கள் கோல்ப் பந்துகளின் நடுவில் இருந்த இடைவெளியில் போய் உட்கார்ந்து கொண்டன.

பேராசிரியர் மறுபடியும் கேட்டார்: "ஜாடி நிரம்பி இருக்கிறதா?" மாணவர்கள் "ஆம்" என்று தலை அசைத்தனர்.

பேராசிரியர் இப்போது ஒரு பெட்டி நிறைய மணலை எடுத்து ஜாடியினுள் கொட்டினார். ஜாடி முழுவதும் மணல் நிரம்பியது.

தனது கேள்வியை அவர் திரும்பக் கேட்க, மாணவர்களும் ஒட்டுமொத்தமாக "ஆம்" என்றனர்.

பேராசிரியர் மேசையின் கீழிருந்து 2 கோப்பை காப்பியை எடுத்து ஜாடியில் ஊற்றினார். காப்பி மணலுடன் கலந்தது. மாணவர்கள் சிரித்தனர்.

பேராசிரியர் கூறினார்: "இந்த ஜாடி உங்கள் வாழ்க்கையைக் குறிப்பிடுவதாக நினைத்துக் கொள்ளுங்கள். கோல்ப் பந்துகள் உங்கள் வாழ்க்கையின் மிக முக்கியமான பொருட்களான குடும்பம், குழந்தைகள், ஆரோக்கியம், நண்பர்கள், பிடித்தமான பொழுது போக்குகள் இவற்றைக் குறிக்கின்றன. வாழ்க்கையில் நீங்கள் எதை இழந்தாலும் இவை உங்களுடன் இருப்பவை. இவைதான் உங்கள் வாழ்க்கை நிறைவாக இருக்க உதவுபவை..."

சிறிது இடைவெளி விட்டுத் தொடர்ந்தார் : "கூழாங்கற்கள் உங்கள் வேலை, சொந்த வீடு, கார் போன்றவை. மணல் என்பது மற்ற சின்னச் சின்ன விஷயங்கள்.

"சிறிது யோசியுங்கள், முதலில் ஜாடியினுள் மணலைப் போட்டிருந்தால் என்னவாகியிருக்கும்? கூழாங்கற்களுக்கோ, கோல்ப் பந்துகளுக்கோ இடம் இருந்திருக்காது. நம் வாழ்க்கையும் அதேபோல்தான். உங்களிடம் இருக்கும் நேரம் முழுவதையும் சின்னச் சின்ன விஷயங்களில் செலவிட்டால், பெரிய விஷயங்களுக்கு நேரம் இருக்காது.

"அதனால் முக்கியமான விஷயங்களுக்கு முதலில் நேரம் ஒதுக்குங்கள். குழந்தைகளுடன் விளையாடுங்கள்; ஆரோக்கியத்திற்கு முதலிடம் கொடுங்கள். மருத்துவப் பரிசோதனை செய்து கொள்ள நேரம் ஒதுக்குங்கள்.

"உங்கள் துணைவி / துணைவரை வெளியில் அழைத்துச் செல்லுங்கள். வீட்டைச் சுத்தம் செய்யவும், சின்னச் சின்ன வேலைகள் செய்யவும் கட்டாயம் நேரம் இருக்கும். முதலில் முக்கியமானவற்றிற்கு நேரம் செலவிடுங்கள். எது முக்கியம், எதை முதலில் செய்வது என்று முடிவு செய்யுங்கள். மற்றவை மணலைப் போன்றவை."

மாணவர்கள் அவர் கூறியதை மனதில் வாங்கிக் கொண்டு சிந்தனை வயப்பட்டிருந்த போது, ஒரு மாணவி கையைத் தூக்கினாள். ஒரு கேள்வி... எழுந்து நின்று கேட்டாள்: "காப்பி எதைக் குறிக்கிறது?

பேராசிரியர் புன்னகையுடன் கூறினார்: "யாரும் கேட்கவில்லையே என்று நினைத்தேன். நீ கேட்டது மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கிறது...

"உங்கள் வாழ்க்கை எத்தனைதான் வேகமாகச் சென்று கொண்டிருந்தாலும், சற்று நேரத்தைச் சரியாகச் செலவழித்தால், ஒரு நண்பருடன் ஒரு கோப்பை காப்பி குடிக்க கட்டாயம் நேரம் இருக்கும் என்பதைத்தான் காப்பி காட்டுகிறது" என்றார்.

நமக்காகச் சிறிது நேரத்தை ஒதுக்குவதும்கூட ஒருவகை நேர மேலாண்மைதான்.

நாம் எவ்வளவுதான் திட்டம் போட்டாலும், நாம் எதிர்பார்க்காத வேறு வேலைகள் வரலாம். அதற்கும் நேரம் ஒதுக்க வேண்டும். அதைச் செய்யும் நேரத்தில், நீங்கள் ஏற்கனவே திட்டமிட்டிருந்த ஒரு சில வேலைகள் தாமதமாகலாம். அவற்றைச் செய்யவும் நேரம் ஒதுக்க வேண்டும்.

முதலில் கடினம் என்று தோன்றினாலும் சிறிது கட்டுப்பாட்டுடன் முயற்சித்தால் கடினமானதும் நமக்கு ஒருநாள் எளிதாகிவிடும். நேரத்தை முறைப்படி திட்டமிட்டால், நேர்த்தியான காலத்தை நம்மால் படைக்க முடியும். நம் எண்ணங்களும், செயல்களும் உயரும்போது காலமே நமக்குக் கலங்கரை விளக்கமாகிறது.

●



கட்டுரை

நந்தனார்



திருநாளைப் போவார்

சோழ நாட்டில் கொள்ளிடக்கரையில் ஆதனூர் என்ற சிற்றூர் இருந்தது. அவ்வூரில் புலையர் சேரியில் ஆதி திராவிடர் மரபில் நந்தனார் என்னும் பெயருடைய ஒருவர் தோன்றி வாழ்ந்து வந்தார். அவருக்கு இயற்கை உணர்வால் சிவபெருமானிடம் மெய்யன்பு மிகுந்திருந்தது.

அவ்வூரில் அவர் புலைத் தொழில் புரிந்து வந்தார். ஊரிலே பறையடிக்கும் தொழிலுக்கென விடப்பட்டுள்ள தோட்டம் முதலான நிலங்கள் நந்தனாருக்கு இருந்தன. அவற்றிலிருந்து கிடைக்கும் வருவாயும் உணவும் அவருடைய வாழ்வுக்குப் பயன்பட்டன. அவர் பிறந்து உணர்வு தொடங்கிய உடனேயே பிறைசூடிய பெருமானிடம் பேரன்பு கொண்டு விட்டார். சிந்தையில் சிவத்தையன்றி வேறு எதையும் நினைக்க மாட்டார்.

அவர் புலையராகப் பிறந்ததால், அக்குலத்தின் வழியே சிவபெருமானுக்குத் திருத்தொண்டு புரிய வேண்டுமென்று கருதி அந்நெறியிலே நின்றார். அவர் மற்றவரைப் போலவே புலைத் தொழில் புரிந்து வந்தாலும், சிவத்தொண்டில் தலைசிறந்து விளங்கினார்.

சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருக்கோயில்கள் தோறும் பேரிகை, மத்தளம் முதலான கருவிகளுக்குப் போர்வைத் தோலும், இறுகக் கட்டும் வார்களும் நந்தனார் செய்து கொடுப்பார். வீணைகளுக்கும், யாழ்களுக்கும் நரம்பும், சிவார்ச்சனைக்குக் கோரோசனையும் வழங்குவார்.

புலவர் க. சுகுமாரன்

சிவன் கோயில்களின் வாயிற் புறத்திலே நின்று ஆண்டவனைத் தொழுது உள்ளூரப் பொங்கியெழுந்த பக்தியின் மிகுதியால் ஆனந்தக் கூத்தாடியும் பாடியும் மகிழ்வார்.

ஒரு சமயம் நந்தனார் திருப்புன்கூரில் கோயில் கொண்டிருக்கும் சிவலோக நாதருக்குத் திருப்பணி செய்ய விரும்பினார். அந்த விருப்பத்திலே ஒன்றியவராய்ச் சிவலோகநாதனை எப்போது காண்போம் என்று ஏங்கும்

பெரும் காதல் கொண்டு ஆதனூரை விட்டுக் கிளம்பி திருப்புன்கூருக்கு வந்து சேர்ந்தார். அங்கு சிவன் கோயில் திருவாசல் முன் நந்தனார் இசை பாடியவண்ணம் நின்றார்.

அவர் தாழ்த்தப்பட்டவராதலின் கோயிலினுள் நுழைய முடியவில்லை. ஆனால், அன்பர்கள் விரும்பும் வண்ணம் அருள்புரியும் சிவபெருமானை நேராகக் கண்டு கும்பிட வேண்டும் என்று நந்தனார் பெரும் காதல் கொண்டார். அவருக்கு அருள் செய்ய விரும்பிய சிவபெருமான், தம் முன்பு சந்நிதியை மறைத்துக் கொண்டிருந்த இடபதேவரான நந்தியைச் சற்று விலகியிருக்கச் செய்து நந்தனாருக்குக் காட்சிக் தந்து அருளினார். அதைக் கண்ட நந்தனார் ஆனந்தமுற்றார்.

ஆண்டவனின் திருவாயில் முன் நின்றபடியே அவர்தம் தோற் கருவியைக் கீழே வைத்துவிட்டுக் கீழே விழுந்து கும்பிட்டு எழுந்தார். பிறகு அங்கிருந்து அவர் திரும்பிச் செல்லும் போது, திருக்கோயிலின் ஒரு புறத்திலே ஒரு நிலம் பள்ளமாக இருப்பதைக் கண்டு அந்தப் பள்ளத்தை ஒரு பெரிய திருக்குளமாக வெட்டி வைத்தார்.

பிறகு கோயில் புறத்தை வலம் வந்து கீழே விழுந்து கும்பிட்டு எழுந்து, ஆனந்தக் கூத்தாடி விட்டு, மீண்டும் திருப்புன்கூர் சிவபெருமானை வணங்கிவிட்டுச் சொந்த ஊரான ஆதனூருக்கு வந்து சேர்ந்தார்.

அதன் பிறகு நந்தனார் அருகாமையிலுள்ள பல சிவத் தலங்களுக்குச் சென்று வணங்கி, தமது திருப்பணிகளை மன ஒருமையோடு செய்து வந்தார். ஒரு நாள் அவர் தில்லைப் பொன்னப்ப நாதரைத் தரிசிக்கப் பெரு விருப்பம் கொண்டார். அதற்காக, சிதம்பர நகருக்குப் போக வேண்டும் என்ற பெரும் ஏக்க உணர்ச்சி அவரை ஓயாமல் பற்றிக் கொண்டிருந்தது. அன்றிரவு முழுவதும் தில்லைக்குப் போக வேண்டும் என்ற நினைவால் கண்ணுறங்காமல் விழித்திருந்தார்.

தில்லையை நினைத்து நினைத்து நந்தனார் ஓயாமல் மனமுருகி “அந்தோ! நான் தில்லைக்குச் சென்றாலும் திருக்கோயிலினுள்ளே சென்று சிதம்பரநாதரின் ஆனந்தக்கூத்தைக் காணும் பேறு என் குலத்துக்கு இல்லையே?” என்றும் “இதுவும் எம் பெருமானின் திருவருள்தானோ?” என்றும் நினைத்து அங்கு செல்லும் முயற்சியைக் கைவிட்டார்.


ஆனாலும் தில்லை நகருக்குச் சென்று சிதம்பரநாதரைத் தரிசிக்க வேண்டும் என்ற ஆவல் அதிகரித்து வந்ததால், “நாளைக்குப் போவேன்!” “நாளைக்குப் போவேன்!” என்று எண்ணிப் பல நாள்களைக் கழித்தார். அதனால் அவரை எல்லோரும் “திருநாளைப் போவார்” என்று அழைக்கலானார்கள்.

நந்தனார் ஒரு வேதியரின் பண்ணையில் வேலை செய்து வந்தார். சிதம்பரம் சென்று தில்லை நடராஜரைத் தரிசிக்க வேண்டும் என்ற நந்தனாரின் விருப்பம் வேதியருக்குச் சரியெனப்படவில்லை. நந்தனார் தில்லை செல்வதைப் பல வழிகளில் தடுத்தார். முடியவில்லை. முடிவில் ஒரு நிபந்தனையிட்டார். வேதியரின் நாலுவேலி நிலத்திலும் கதிராகியுள்ள பயிரை அறுத்துவிட்டு, நடராஜர் தரிசனம் செய்யலாம் என்பதே நிபந்தனை.



விடிந்தால் தில்லையில் ஆருத்ரா தரிசனம். நந்தன் உள்ளமெல்லாம் தில்லையில் இருந்தது. தில்லையம்பலவாணனான சிவபெருமான் அதிசயம் ஒன்றை நிகழ்த்தினார்.

வேதியரின் நிலமெல்லாம் இரவோடு இரவாக கதிர்



சாய்ந்து நின்றது. அறுவடையையும் நந்தனாருக்காக ஆண்டவனே செய்து முடித்தார். விபரமறிந்த வேதியர், நந்த னாரின் தெய்வீகப் பலத்தை உணர்ந்து அவர் புலையரென்றும் பாராது அவர் அடிகளில் வீழ்ந்து தில்லை செல்ல வழியனுப்பினார்.

நந்தனார் தில்லை வந்தடைந்தார். இழி குலத்தால் இறைவனைத் தரிசிக் கும் பேறு கிட்டாது போகுமோ என்று கலங்கினார். சிதம்பரத்தின் எல்லையைத் தொட்டு, கோபுரத்தைக் கண்டதுமே அவர் மெய் சிலிர்த்தது.

தில்லை அம்பலவாணனும் தன் மெய்யடியவனை ஆட்கொள்ள இதுவே தருணம் என எண்ணி, தில் லையின் எல்லையில் இரவு தங்கி ஓய் வெடுத்துக் கொண்டிருந்த நந்தனார் கனவில் தோன்றி, “இப்பிறவி ஒழிய நீ தில்லையில் தீயினில் மூழ்கி எம்மை அடைவாயாக” என அருள்பாலித்தார்.

அதுபோலவே தில்லைவாழ் அந்தணர் கனவிலும் தோன்றி, நந்த னார் தீக்குளிக்கத் தில்லையம்பலத்தில் வழி செய்து தருமாறு கட்டளை யிட்டார் இறைவன்.

தில்லை நடராஜப் பெருமானின் கட்டளையைக் கேட்ட தில்லைவாழ் அந்தணர்கள் யாவரும் அம்பலவாண ரின் திருவாயிலில் அச்சத்துடன் கூடி, “எமது பெருமான் திருவருள் பணித்த பணியினைச் செய்வோம்” என்று துதித்தார்கள்.

பிறகு அவர்கள் அனைவரும் பரிவு பெருக திருநாளைப் போவாரிடம் சென்று, “ஐயரே! அம்பலத்தில் ஆடும் ஆண்டவன் கட்டளைப்படி இங்கே வந்தோம்! உமக்கு நெருப்பு மூட்டி எரிதழல் அமைத்துத் தரப் போகி றோம்” என்று விளம்பினார்கள்.

அதைக் கேட்ட நந்தனார், “அடி யேன் உய்ந்தேன்!” என்று கூறி அவர் களைத் தொழுதார் – மறையவர்களும் தீமூட்டினார்கள்.

தீ வளர்ந்திருக்கும் தெற்கு மதிற் புறத்துத் திருவாயிலை திருநாளைப் போவார் அடைந்தார். தீக்குழியை அணுகியதும் இறைவனின் திருவடி களையே தம் மனத்தில் இருத்திக் கொண்டு அந்நெருப்பை வலம் வந் தார். பிறகு அவர் தம் இரு கைகளை யும் உயரத் தூக்கித் தொழுது கொண்டே, அருட் கூத்தாடும் ஆனந் தத் தாண்டவரின் திருவடிகளை நினைத்த வண்ணம் தீயிலே மூழ்கி னார். அப்போது சாதிப் பொய்மை யோடு அவருடைய மாயப் பொய் யுடலின் திருவுருவமும் ஒழிந்தது.

மார்பில் பூணூலும் சடைமுடியும் உள்ள முனிவர் பெருமானாக நந்த னார் புது வடிவம் கொண்டு சிவ ஒளி யுடன் தீயினின்றும் எழுந்தார்.

அவர் அவ்விதம் எழுந்த போது செந்தாமரை மலரில் வந்து தோன்றிய அந்தண பிரம்மனைப் போலவே தோன்றினார். அப்போது திரு நாளைப் போவாரான நந்தனாரைத் தில்லைவாழ் அந்தணர் மூவாயிர வரும் கைகூப்பித் தொழுதார்கள். சிவ னடியார்களும் பணிந்து மனதில் பெருமகிழ்ச்சி அடைந்தார்கள்.

தில்லைவாழ் அந்தணர்கள் உடன் வர, திருநாளைப் போவார் தெற்குத் திருக்கோபுரத்தைக் கண்டு இறைஞ் சிய வண்ணம் பொன்னம்பலத்தினுள் புகுந்து கூத்தப் பெருமானின் எல் லையை அடைந்தார். அதன்பிறகு அவரை யாரும் காணவில்லை. மாய உடம்பைத் தீயில் நீத்து மகாதேவ னுடன் கலந்தார் நந்தனார் என்னும் திருநாளைப் போவார்.

கட்டுரை


மனம் என்ற ஒரு விஷயம் எல்லாருக்கும் உள்ள ஒன்று. அது மனிதனைப் பந்தாடும். மகிழச் செய்யும். துக்கப்படச் செய்யும். மனம் என்ற ஒன்று மகான்களையே அலைக் கழிக்கும் என்றால் நம்மைப் போன்ற சாதாரண மனிதர்கள் எம்மாத்திரம்!

இரண்டு பெரும் ஞானிகள். அவர் கள் மனத்திடம் பட்ட பாட்டை இந்தக் கட்டுரையில் பார்க்கலாம்.

யார் அவர்கள்? மானுடம் தழைக்கப் பாடிய வள்ளற் பெரு மானும், பாரதியுமே அவ்விரு பெரு மக்கள்.

என்று புலம்புகிறார்.

“மனமான ஒரு சிறுவன் மதியான குருவையும்
மதித்திடான் நின் அடிச்சீர்
மகிழ்கல்வி கற்றிடான் சும்மா இரான் காம
மடுவினிடை வீழ்ந்து சுழல்வான்.
சினமான வெஞ்சுரத் துழலுவான் உலோபமாம்
சிறுகுகையினூடு புகுவான்
செறுமோக இருளிடைச் செல்குவான் மதமெனும்
செய்குன்றில் ஏறி விழுவான்.
இனமான மாச்சரிய வெங்குழியின் உள்ளே
இறங்குவான் சிறிதும் அந்தோ
என் சொல் கேளான் எனது கைப்படான் மற்றிதற்
கேழையேன் என் செய்குவேன்.


வள்ளலார்

மனமே! மனமே!


பாரதியார்

மனத்தின் இயல்பை வள்ளற் பெருமான் இவ்விதம் சொல்கிறார். ‘மனம் இருக்கிறதே அது ஒரு குறும்பு செய்யும் சிறுவனைப் போன்றது. அந்தச் சிறுவன் ஒழுங்காகப் படிக்க வேண்டியதைப் படிக்க மாட்டான். மதியான குருவை மதிக்க மாட்டான். சும்மா இருக்க மாட்டான். மடுவுக் குள்ளே விழுந்து உழலுவான். சின மான காட்டுக்குள்ளே செல்வான். உலோபமாகிய சிறு குகைக்குள்ளே நுழைவான். மோகமாகிய இருளில் செல்வான். மதம் என்னும் குன்றில் ஏறி விழுவான், மாச்சரிய வெங் குழியின் உள்ளே விழுவான். ஐயோ! என் சொல் கேட்க மறுக்கிறானே!’

தருமமிகு சென்னையில் கந்தக் கோட்டத்துள் வளர்
தலமோங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே”

இவ்வாறு தெய்வ மணிமாலையில் மனத்தை அடங்காச் சிறுவனாக உரு வகித்துப் புலம்புகிறார் வள்ளலார்.

பாரதியாரோ மனத்திடம் இப்படி வேண்டுகோள் வைக்கிறார் :

“சொல்லினுக் கரியனாய் சூழ்ச்சிக்கு அரியனாய்
பல்லுருவாகி படர்ந்த வான் பொருளை
உள்ளுயிராகி உலகம் காக்கும்
சக்தியே தானாம் தனிச்சுடர்ப் பொருளை

சக்தி குமாரனை சந்திர மவுலியை
பணிந்த வனுருவிலே பாவனை நாட்டி
ஓமெனும் பொருளை உளத்திலே நிறுத்தி
சக்தியைக் காக்கும் தந்திரம் பயின்று
யார்க்கும் எளியனாய் யார்க்கும் வலியனாய்
யார்க்கும் அன்பனாய் யார்க்கும் இனியனாய்
வாழ்ந்திட விரும்பினேன். நீயிதை
ஆழ்ந்து கருதி ஆய்ந்து ஆய்ந்து பலமுறை
சூழ்ந்து தெளிந்து பின் சூழ்ந்தார்க்கெல்லாம்
கூறிக் கூறிக் குறைவறத் தேர்ந்து
தேறித்தேறி நான் சித்தி பெற்றிடவே
நின்னால் இயன்ற துணை புரிவாயேல்
பொன்னால் உனக்கொரு கோயில் புரிவேன்
மனமே! எனை நீ வாழ்வித் திடுவாய்!"

என்று மனத்தோடு பேரம் பேசுகிறார்.

மனம் மட்டும் ஒத்துழைத்தால் மனத்துக்குத் தங்கத்தால் கோயில் கட்டிக் கும்பிடுவாராம். மனம் மசிய வில்லை என்றவுடனே பாரதியார் தனது உத்தியை மாற்றிக் கொள்கிறார். அறிவுரை சொல்லிப் பார்க்கிறார்.

"மேன்மைப் படுவாய் மனமே! கேள்.
விண்ணின் இடி முன் விழுந்தாலும்
பாண்மை தவறி நடுங்காதே
பயத்தால் ஏதும் பயனில்லை
யான் முன் உரைத்தேன் கோடிமுறை.
இன்னும் கோடி முறை சொல்வேன்.
ஆன்மா வான கணபதியின்
அருள் உண்டு அச்சம் இல்லையே"

என்கிறார்.

இரண்டு பேருக்குமே மனம் அடங்கிய பாடு இல்லை.

வள்ளற் பெருமான் ஒரு கட்டத் தில் சலித்துப் போகிறார். அதனால் பெருமான் ஜீவசாட்சி மாலையில் இவ்வாறு பாடுகிறார்.

ஜெய்சக்தி



"உள்ள மனக்குரங்காட்டித்
திரியும் என்றன்
உளவறிந்தோ ஐயா நீ
உன்னைப் போற்றார்.
கள்ள மனக் குரங்குகளை ஆட்ட வைத்தாய்
கடையனேன் பொறுத்து முடிகில்லேன் கண்டாய்"

'அப்பப்பா! இந்த மனக் குரங் கோடு போராடி முடியவில்லை!' எனத் தன் இயலாமையை வள்ளலார் குறிப்பிடுகிறார்.

பாரதியாரும் அப்படித்தான்! மனதுக்கு இதமாக, பதமாக சொல்லிப் பார்க்கிறார். "சொன்ன படிக்கு நடந்திடுவாய் மனமே. தொழில் வேறில்லை காண்!"

இருவருமே 'சொன்னால் கேளு. சொன்னால் கேட்க மாட்டாயா?' என்று விதவிதமாக மனத்திடம் சொல்லிப் பார்க்கிறார்கள். ஆனால், எதுவுமே நடக்கவில்லை போலும். பிறகுதான் தங்கள் பாணியை மாற்றிக் கொள்கிறார்கள்.

பாரதியார் மெல்ல மெல்ல மனத்தை "............மனமெனும் பெயர் கொள் கண்ணிலாப் பேயை எள்ளி னேன்" என மிரட்டவே ஆரம்பிக் கிறார்.

ஒரு கட்டத்தில் இந்தப் பாழும் மனத்திடம் சொல்லிக் கொண்டிருந் தால் பலன் இல்லை என்று பாரதியா ரும், வள்ளலாரும் மனதுக்குக் கட் டளையிடத் தொடங்குகிறார்கள்.

"பேயாய் உழலும் சிறு மனமே!
பேணாய் என் சொல் இன்று முதல்
நீயாய் ஒன்றும் நாடாதே!
நினது தலைவன் நானே கேள்
தாயாம் சக்தி தாளினிலுன்

தருமம் என யான் குறிப்பதிலும்

ஓயாதே நின்று உழைத்திடுவாய்.

உரைத்தேன் அடங்கி உய்யுதியால்!"

என்று மனத்தைப் பேயாய் ஆக்கி, அடங்கிப் போ எனக் கட்டளை யிடுகிறார் பாரதியார்.

பாரதியார் மனத்துக்கு அறிவு றுத்துகிறார். 'பேயைப் போல உழலு கிற மனமே உனக்குத் தலைவன் யார் தெரியுமா?' நான்தான். 'இனிமேல் நீயாய் ஒன்றும் செய்யக் கூடாது. உனது தலைவனாகிய நான் சொல் வதைத்தான் கேட்க வேண்டும். தாயாகிய சக்தியின் தாளை வணங்கு வதோடு தர்மம் என நான் எதைக் குறிப்பிடுகிறேனோ, அதைச் செய்யவே ஓயாமல் நீ உழைக்க வேண்டும். சொல்லிவிட்டேன். அடங்கிப் போய் விடு!' என்று ஆணையிடுகிறார்.

வள்ளற் பெருமான் இன்னும் ஒருபடி மேலே போய், 'பேய்க் குரங்கு மடப் பயலே!' என்று விளிக்கிறார்.

"மனமெனுமோர் பேய்க் குரங்கு மடப்பயலே நீதான்

மற்றவர் போல்எனை நினைத்து

மருட்டாதே கண்டாய்

இனமுறஎன் சொல்வழியே இருத்தியெனில் சுகமாய்

இருந்திடு நீ என்சொல்வழி ஏற்றிலை ஆனாலோ

தினையளவுன் அதிகாரம் செல்லவொட்டேன்

உலகம்

சிரிக்க உனை அடக்கிடுவேன்.

திருவருளால் கணத்தே.

நனவில்எனை அறியாயோ யார்என இங்கிருந்தாய்

ஞானசபைத் தலைவனுக்கு நல்ல

பிள்ளை நானே!"


என்கிறார்.

'மனமாகிய பேய்க் குரங்கு மடப் பயலே! மற்றவர்கள் போலே என்னை நினைத்து அச்சமுறச் செய்யாதே! நான் சொல்வதைக் கேட்டுச் சுகமாக இருப்பதாக இருந்தால் இரு! அப்படி என் சொல்லைக் கேட்காவிட்டால் என்ன நடக்கும் தெரியுமா? தினை யளவுக்கும் கூட உன் அதிகாரம் செலுத்த விடமாட்டேன். உலகத் தவர்கள் உன்னைப் பார்த்துச் சிரிக்கு மாறு கணநேரத்திலே அடக்கிவிடு வேன் தெரியுமா? என்னை யார் என்று நினைத்தாய். ஞானசபைத் தலைவனுக்குச் செல்லப் பிள்ளை யாக்கும் நான்!' என்கிறார்.

வள்ளற் பெருமான் மகாஞானி. அவர் மனத்தை வெல்லாமல் இருப் பாரா என்ன? ஆனாலும் சாதாரண மனிதர்களைப் போலத் தானும் மனத்திடம் போராடியதாக உருவகப் படுத்துகிறார். வள்ளற் பெருமானின் கருணை மனமே இதில் தெரிகிறது.

இவ்விரண்டு சான்றோர்களுமே நமக்குப் புலப்படுத்துவது யாதெனில், மனத்திடம் கெஞ்சிக் கொண்டிருக் கவோ, வேண்டிக் கொண்டிருக்கவோ, விண்ணப்பித்துக் கொண்டிருக்கவோ அவசியம் இல்லை. மனதுக்குக் கட் டளையிட்டுக் கட்டுக்குள் கொண்டு வருவதே சிறந்தது என நம்மைப் போன்ற சாமான்யர்களுக்கு அறிவு றுத்துவதாகக் கொள்ளலாம்.

●



முதல் கவிதை இதழ்

தமிழில் முதல் கவிதை இதழை நடத்தியவர் பாவேந்தர் பாரதிதாசன். 1935-இல் வெளியான அந்த இதழின் பெயர் 'கவிதா மண்டலம்' என்பதாகும். முழுக்க முழுக்கக் கவிதையிலேயே வெளி யான அந்த மாத ஏட்டில் விளம் பரங்கள் கூடக் கவிதை வடிவில்தான் வெளிவந்தன.


- நெ.இராமன், சென்னை.

தோல்வியில் சுகம்



உன் மீன்போன்ற கண்களை
ஆசையோடு பார்த்தேன் – ஆனால்
அதிலிருந்து வேலிரண்டு புறப்பட்டு
என்னைத் தாக்கித் தோற்கடித்தன!

புன்னகை மிதக்கும் உன் தேனூறிய இதழ்களை
தாபத்துடன் நோக்கினேன் – ஆனால்
அதிலிருந்து கிளம்பிய
மோகத் தணற் துண்டங்களால்
என் மனக்குடிசை தீப்பற்றி எரிய
மீண்டும் தோற்கடிக்கப் பட்டேன்!




'என்னை எவ்வளவு நேசிக்கிறாய்?'
என்று கேட்டாய்!
"இந்த உலகத்தளவு..." என்று
பெருமிதத்துடன் சொன்னேன்.
"நீ என்னை எவ்வளவு நேசிக்கிறாய்?"
என்று கேட்டேன்!
"அளவு சொல்ல முடியாத அளவு
உன்னை நான் நேசிக்கிறேன்!"
என்ற உன் பதிலால்
மறுபடியும் என்னைத் தோற்கடித்துவிட்டாய்!

தோற்பதில் எவ்வளவு சுகம் இருக்கிறது
என்பதை அப்போதுதான்
நான் புரிந்து கொண்டேன்!

கவிஞர்
ஜெ. கமலநாதன்

ஆட்டனத்தி



பாவம் இவள்...

சிறுகதை



என்ன கோபமோ தெரியவில்லை, பெரும் உறுமலோடு புளியம்பட்டி பேருந்து நிலையத்திற்குள் பெருமூச்சு விட்டபடி ஒரு குலுக்கலுடன் வந்து நின்றது பேருந்து. சத்தியமங்கலத்திலிருந்து வந்திருக்கிறது. இடது ஓரத்தில் அமர்ந்திருந்த ராமமூர்த்தி அதுவரை கண்களை மூடி அரைத்தூக்கத்தில் இருந்தவர், திடீரென்று விழித்துக் கொண்டிருந்தார். பேருந்தின் முன்புறம், பின்புறம், உள்ள வழிகளில் சிலர் ஏறிக் கொண்டிருந்தனர்.

ராமமூர்த்தி எந்தவிதச் சிந்தனையும் இல்லாமல் வெளியே பார்த்துக் கொண்டிருந்தார்.

‘அடடே... இந்தப் பெண்...’ என்று கண்களை இடுக்கியவாறே நெற்றி சுருங்கப் பார்த்துக் கொண்டிருந்தார். பேருந்தில் உட்கார்ந்து கொண்டிருக்கும் தன்னை அந்தப் பெண் பார்க்கவில்லை என்பதை உணர்ந்து கொண்டிருந்தார். பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருக்கும் அந்தப் பெண்ணை அழைத்து ஒரு வார்த்தை பேசலாமா என்று நினைத்தார். அதற்குள் பேருந்து புறப்படத் தயாரானது.

‘இங்கே எங்கே இந்தப் பெண் வந்தாள்...? எங்கேயாவது பஸ்ஸில் போகிறாளோ? இவ்வளவு கூட்ட நெரிசலில் எப்படி? யாரும் அவளோடு துணைக்கு வந்ததாகவும் தெரியவில்லையே... இப்படித் தனியாக வந்திருக்கிறாளே... கர்ப்பிணிப் பெண்... மூன்று மாதக் கர்ப்பிணி.’ நினைக்க நினைக்க ராமமூர்த்தியின் மனசு கிடந்து துடித்தது.

இரண்டு நாட்களுக்கு முன் கோவை மருத்துவமனையில் பார்த்த அந்தப் பெண்தானே இவள்? ஆமாம்.

பெண் மருத்துவரைப் பார்க்கவும், ஆண் மருத்துவரைப் பார்க்கவும் கூட்டம் ஹாலில் நிரம்பியிருந்தது. பதிவு செய்தவாறு வரிசையாக ஒவ்வொருவராய் அழைத்துக்கொண்டு இருந்தான் மருத்துவமனைப் பணியாளன்.

‘கற்பகம்’ என்று அழைப்பு வர, கற்பகம் எழுந்து மருத்துவர் அறையை நோக்கினாள். உடன் வந்த கணவன் சிவநேசனும் உள்ளே செல்லத் தயாரானான். சென்ற முறை இருவருக்குமே மருத்துவர் ஆலோசனை சொல்லி இருந்ததால், இப்போது கற்பகத்தை மட்டுமே அழைத்திருந்தனர்.

“ஐயா, எனக்குச் சத்தியமங்கலம்தான் சொந்த ஊரு... கற்பகத்துக்கு இதே புளியம்பட்டி...” சிவநேசன் சொல்லும்போதே கற்பகம் இடைமறித்தாள்.

ராமமூர்த்தி, விக்னேஸ்வரனுடன் வந்திருந்தார். இருவருமே ஒத்த வயதுடையவர்கள். நடைப்பயிற்சி நண்பர்கள். ராமமூர்த்தி தன் முழங்கால் வலிக்காக டாக்டர் ராஜபாண்டியனிடம்தான் அறுவைச் சிகிச்சை செய்து குணமடைந்திருந்தார். விக்னேஸ்வரனுக்கும் அதே முழங்கால் வலி. அதனால்தான் விக்னேஸ்வரனைத் தன்னுடைய டாக்டரிடம் காட்டி ஆலோசனை பெறலாம் என்று அழைத்து வந்திருக்கிறார்.

கற்பகம் மருத்துவரைப் பார்க்க உள்ளே சென்றபோதுதான் அருகிலிருந்த ராமமூர்த்தியிடம் ஏதோ சொல்ல ஆரம்பித்தான் சிவநேசன். பேசப் பேசக் குரல் நடுங்கியது. முகம் முழுக்க வியர்வை பூத்து நின்றது. தன் தந்தை வயதை ஒத்த ராமமூர்த்தியிடம் சொல்லச் சொல்ல மனசு இலகுவாகிக் கொண்டிருந்தது.

கேட்கக் கேட்க ராமமூர்த்திக்கு மனம் நைந்து உருகியது. அடடா... இவர்களுக்கு இப்படியொரு சோதனையா கடவுளே... இவர்களுக்கு ஒரு குறையும் வைக்காமல் பார்த்துக் கொள்.

பஸ் ஸ்டாண்டில் தனியாக இப்பெண்ணை விட்டுவிட்டு இவள் புருஷன் சிவநேசன் எங்கே போனான்?

வீடு சாயிபாபா காலனியில் இருப்பதாகவும், ஏதோ தனியார் நிறுவனத்தில் பெரிய பதவியில் இருப்பதாகவும் அல்லவா சிவநேசன் சொன்னான்...

பேருந்து நகரத் தொடங்கியது. டானாப்புதூர் வரை மெதுவாக வந்த பேருந்து, டானாப்புதூர் தாண்டியதும் வேகமெடுக்கத் தொடங்கியது.

வலது புறம் ஒதிமலைக் கரடு தெரிந்தது. அங்கொன்றும் இங்கொன்றுமாய்ச் சிறிய சிறிய மரங்கள்... பனை மரங்கள்... இடதுபுறம் சற்றுத் தொலைவில் பெரியதொரு குளம். நீலிபாளையம் குளம். அருகில்தானே நீலிபாளையம் இருக்கிறது...

பேருந்தை நிறுத்தச் சொல்லிக் குளத்தைப் பார்த்துவிட்டு, அடுத்த பஸ் பிடித்துக் கோவைக்குப் போய்விடலாம். ராமமூர்த்தியின் மனதிற்குள் இலேசாய் நினைவுத் தூறல். உடல் ஒத்துக் கொள்ளுமா? ஒரு பர்லாங் தூரம் நடக்க வேண்டுமே. பார்த்து என்ன பயன் கிடைக்கப் போகிறது?

தான் 35 ஆண்டுகளுக்கு முன் பணியாற்றிய இடம் ஆயிற்றே. சுமார் 150 ஹெக்டேர் பரப்பளவு உள்ள குளம். மூன்று புறம் வலுவான ஏரிகள். ராட்சசத் தனமாய் ஏரியின் முதுகில் வளர்ந்து நிற்கும் பனை மரங்கள். மழை... அதுவும் பெரு மழை கிடைக்கும் பட்சத்தில் குளம் நிரம்பி வழியும். இல்லாவிட்டால் குளம் வறண்டே காணப்படும். குளத்தின் நடுவில் கொஞ்சம் தண்ணீர் இருக்கும், அவ்வளவுதான்.

இதைப் பயன்படுத்திக்கொண்டு வனத்துறை பண்ணைக் காடுகள் திட்டத்தின் கீழ் வறண்ட பகுதியில் கருவேல நாற்றுகள் நடுவதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஏரி இல்லாத பகுதி, மழை நீர் குளத்திற்கு ஓடி வந்து தேங்குவதற்கு ஏற்ற வகையில் சரிவாக இருந்தது.

சரிவான அப்பகுதியிலேயே இரண்டு தோட்டங்கள் இருந்தன. விவசாயம் செழிப்பாய் நடந்து கொண்டிருந்தது. ஒரு பகுதியில் இருந்த தோட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட கருவேல நாற்றங்கால். மறுபகுதியில் வேறு ஒரு தோட்டம் இருந்தது.

நில அளவை செய்து குளத்தின் வரைபடத்திற்கு ஏற்றாற்போல் கருவேல நாற்றுக்கள் நடவு செய்யும் பணி முழு வீச்சில் நடந்து கொண்டிருந்தது. நெகிழிப் பைகளைக் கிழித்து மண் கட்டியுடன் கருவேலன் நாற்றுகளை ஏற்கனவே நடவுக்காகத் தோண்டப்பட்ட குழிகளில் நடுவதை வன அதிகாரி ராமமூர்த்தி தணிக்கை செய்து கொண்டிருந்தார். நிறைய ஆட்கள் வேலையில் ஈடுபட்டிருந்ததாலும், நடவு செய்யுமிடம் குளத்தின் பகுதியாக இருந்ததாலும் வேலை இலகுவாக இருந்தது.

வன அதிகாரி ராமமூர்த்தி, 'பிளாண்டேஷன் வொர்க்' என்று வந்துவிட்டால், ஊண், உறக்கமின்றி வேலை செய்பவர். அதுவும், ஒவ்வொரு நாள் காலையிலும், முந்தைய நாள் நடப்பட்ட நாற்றுகள் எப்படியிருக்கின்றன என்று பார்ப்பதில் சொல்ல முடியாத ஆவல். நாற்றுக்கள் செழுமையுடன் பசுமை முகம் காட்டி இருப்பதைப் பார்க்கும் போது மனக் கிளுகிளுப்பு! தண்ணீர் வற்றிக் கிடக்கும் குளத்தின் அத்தனை பகுதிகளிலும் நாற்று நட்டுவிட்டால், பெரியதொரு வனமாக ஆகிவிடும்!

வழக்கம்போல் ஒரு நாள் காலை, மகிழ்ச்சி பொங்கும் மனதோடு ராமமூர்த்தி ஒவ்வோரிடமாகத் தணிக்கை செய்து வந்து கொண்டிருந்தார். ஓர் இடம் வந்ததும் திடீரென்று நின்றார்.

'ஆ... எவ்வளவு நாற்றுக்கள் பிடுங்கி எறியப்பட்டிருக்கின்றன?' மனது துவண்டு கொண்டிருந்தது.

கோபம் தலைக்கேறியது. ராமமூர்த்தி சுற்றிலும் பார்த்தார். தோட்டக் காவலர் தன்னாசி ஓடி வந்தான்.

“என்னய்யா இது... பிளாண்டேஷனைப் பார்க்கிற லட்சணமா இது?” பார்வையில் தீப்பொறி பறந்து கொண்டிருந்தது.

“பக்கத்துத் தோட்டக்காரர் குருந்தாசலம் தான், 'எங்க எடத்திலெ நாற்றுப் போட றீங்க...'ன்னு சொல்லீட்டு இருந்தான்.”

“அந்த ஆள்தான் புடுங்கி எறிஞ்சிருப்பானா? எவ்வளவு நாத்துகளைப் புடுங்கி எறிஞ்சிருப்பான்... எண்ணிச் சொல்லு... அந்தாளைக் கூப்பிடு என்னன்னு கேட்கலாம்...”

நாற்றங்கால் எழுப்பியிருந்த தோட்டத்திற்குக் கிழபுறம் உள்ள தோட்டம் குருந்தாசலத்திற்குச் சொந்தமானது.

குருந்தாசலத்தின் சாளையில் போய்ப் பார்த்தால், ஆளைக் காணோம். தோட்டக்காவலரிடம் வன அதிகாரி போட்ட சத்தத்தில் இவர்கள் பயந்து போய் ஓடிவிட்டார்கள் போலும்!

'நூறு நாற்றுகளுக்கு மேல் பிடுங்கி எறியப்பட்டிருக்கின்றன. நாற்றுகள் எல்லாம் வளர்ந்து பெரிய மரமானால், பயனடையப் போவது இவர்கள் தானே! இது புரியவில்லையே. நாங்களா இங்கே



உட்கார்ந்து அனுபவிக்கப் போகிறோம்? மாற்றல் வந்த பக்கம் போகிறவர்கள்தானே!' குருந்தாசலம் போன்றவர்களின் அறியாமையை எண்ணி எண் ணிப் பார்க்கும்போது ராமமூர்த்திக்கு வேதனைச் சங்கிலி மனம் எங்கும் சுற்றிக் கொண்டது.

இவர்களை இப்படியே விடக்கூடாது. அரசு இழப்பீடு எவ்வளவு? குற்றச்சாட்டுப் பதிவு செய்ய வேண்டாமா...?

காவல் நிலையத்திலிருந்து காவலர்கள் வந்து குருந்தாசலம், மயங்காத்தாள் இருவரையும் அழைத்துப் போனார்கள்.

ஒரு வாரம் கடந்து போயிருந்தது. தணிக் கையில் ஈடுபட்டிருந்த ராமமூர்த்தி திடீரென்று நின்றார். ஒவ்வொரு செடிக்கு அருகிலும் காலடிச் சுவடுகள் பதிவாகியிருப்பது தெரிந்தது. உற்றுப் பார்த்தார். செடிகள் சில வாடியிருப்பது போல் இருந்தன.

ஆமாம்! நாற்றுகள் நன்றாக நிலத்தில் ஊன்றி வேர்பிடித்து வரும் நிலையில், கையால் ஒவ்வொரு செடியாகப் பிடுங்கிப் பிடுங்கி அப் படியே விட்டிருக்கிறார்கள். நெகிழிப் பையைக் கிழித்து மண் கண்டத்துடன் வைத்து நடவு செய்யப்பட்டவை. செடியை இழுத்து விட்டதால், மண்கண்டம் உடைந்து போய், வேர்கள் தொந் தரவுக்குள்ளாகிவிட்டன. காலப்போக்கில் பட்டுப் போகும். இப்படியும் செய்வார்களா...?

ராமமூர்த்திக்குக் குருந்தாசலத்தைப் பற்றி நினைக்க நினைக்க வருத்தம், கோபம் எல்லாம் சேர்ந்து கொண்டது.

பேருந்து அன்னூரைத் தாண்டிக்கொண்டு இருந்தது. இதோ, இந்தக் காவல் நிலையத்திற்கு வந்து புகார் செய்து, மறுபடியும் நடவடிக்கை எடுத்து... எத்தனை ஆண்டுகளாயிற்று!

புளியம்பட்டியிலிருந்து புறப்பட்டு அன்னூர் வருவதற்குள் எத்தனை எத்தனை நிகழ்வுகள் மனதிற்குள் வந்து பயணித்துப் போயின...

தவிர்க்க முடியாது... என் வீட்டு விசேஷங் கள் ஒவ்வொன்றிற்கும் வந்து கலந்து கொண் டவன் கிருஷ்ணமூர்த்தி. அதனால்தான் அவன் மகன் திருமணத்திற்குச் சத்தியமங்கலம் போய் வரவேண்டியதாகிவிட்டது. நல்ல வேளை. முழங் கால் வலி இல்லை. எப்படியோ கோவை வந்தாயிற்று.

ஒரு மாதம் கழிந்திருந்தது.

வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக் கொண்டு நேற்றுத்தான் திரும்பி வந்திருந்தார் டாக்டர் ராஜபாண்டியன். மருத்துவமனையில் இன்று நல்ல கூட்டம். விக்னேஸ்வரனுக்கு முழங் காலில் அறுவைச் சிகிச்சை செய்யலாம் என்று டாக்டர் தீர்மானித்திருந்தார். எப்போது என்று சொல்லவில்லை. பின்னர் சொல்வார்கள்.

முன் ஹாலில் கூட்டம் அப்படியே இருந்தது. கொஞ்சமும் குறையவில்லை. 'கற்பகம்' என்று குரல் கேட்கவும் திரும்பிப் பார்த்தார் ராமமூர்த்தி. தாங்கள் அமர்ந்திருந்த வரிசைக்கு முன் வரிசையில் வலது பக்க மூலையில் அமர்ந்திருந்த கற்பகம் எழுந்து பெண் மருத்துவர் அறைக்குச் சென்றாள். அருகில் அமர்ந்திருந்த சிவநேசன் எதேச்சையாகத் திரும்பி ராமமூர்த்தியைப் பார்த்து விட, தொடர்ந்து வணக்கம் செலுத்தியவாறே ராமமூர்த்தியை நோக்கி வந்து, அருகில் காலியாய்க் கிடந்த இருக்கையில் அமர்ந்தான்.

அன்று புளியம்பட்டியில் கற்பகத்தை பஸ் ஸ்டாண்டில் பார்த்த விபரத்தைச் சொல்லிக் கோபம் கொண்டார் ராமமூர்த்தி. தான் ஓட்டி வந்த காரின் முன் சக்கரத்தின் டயர் பஞ்ச்சர் ஆகிவிட்ட தாகவும், அதுவும் பஸ் ஸ்டாண்ட் அருகிலேயே ஆனதால், தற்செயலாகச் சந்தித்த கற்பகத்தின் தோழியுடன் பஸ் ஸ்டாண்டில் இருக்கச் சொன் னது பற்றியும் ராமமூர்த்தியிடம் அவன் சொன்ன போது கொஞ்சம் சமாதானம் அடைந்தார்.

அன்று சிவநேசன் தன்னிடம் சொன்னது பற்றி நினைக்கும்போதெல்லாம் எப்படித் துன்பம் சூழ்ந்து நின்றதோ, இப்போதும் மாறாமல் வந்து நின்றது.

மருத்துவப் பரிசோதனை முடிந்து கற்பகம் தங்களை நோக்கி வர, சிவநேசன் ராமமூர்த்தி யிடம் விடைபெற்றுப் புறப்பட ஆயத்தமானான். புறப்பட இருந்தவனைத் தடுத்து நிறுத்தினார்.

"ஆமா, உனக்குச் சொந்த ஊர்...?" ராம மூர்த்திக்கு அவர்களைப் பற்றித் தெரிந்து கொள்ள ஓர் ஆவல்.

"ஐயா, எனக்குச் சத்தியமங்கலம்தான் சொந்த ஊரு... கற்பகத்துக்கு இதே புளியம் பட்டி..." சிவநேசன் சொல்லும்போதே கற்பகம் இடைமறித்தாள்.

"ஐயா, எனக்குச் சொந்த ஊரு நீலி பாளையம். இப்போ அங்கெ யாரும் இல்லெ. குளத்தெ ஒட்டித் தோட்டம் இருக்கு. குத்தகைக்குக் குடுத்திருக்கிறோம்."

"அப்படியா? உங்க அப்பா, அம்மா... ஏன்னா, நான்..." தான் பணியாற்றிய விபரத்தைச் சொன்ன ராமமூர்த்தி, மறுபடியும் 'அப்பா, அம்மா...' என்றார்.

"அவங்க செத்துப் போயிட்டாங்க... அப்பா குருந்தாசலம், அம்மா மயங்காத்தாள்..." கற்பகம் சொன்னதைக் கேட்டதும் ராமமூர்த்தி திகைத்துப் போனார்.

கற்பகம் தன் தகப்பன், தாய் பற்றிச் சொன் னதும், திகைப்பு மனசுள் வந்து நிரம்பி வழிந்தது. தான் கற்பகம் சொன்ன விபரங்களைத் தெரிந்து கொண்டிருந்தும் எதையும் காட்டிக் கொள்ளாம லிருந்தது பற்றித் தனக்குள்ளேயே ஆச்சர்யப் பட்டுப் போனார்.

ஆமாம்... முதன் முதலில் மருத்துவமனையில் சந்தித்தபோது, சிவநேசன் ராமமூர்த்தியிடம் முகம் முழுவதும் வியர்வை பூக்க, நடுங்கும் குரலோடு சொன்னதை நினைத்துப் பார்த்தார்.

இரண்டு குழந்தைங்க பிறந்து, பத்து நாள், பதினைந்து நாள் உயிருடன் இருந்து இறந்து விட்டதாகவும், மூன்றாவதாகக் கர்ப்பம் தரித்து, அதுவும் மூன்று மாதத்தில் கருச்சிதைவு ஆகி விட்டது என்றும், நான்காவதாக ஆகியிருக்கும் இந்தக் கர்ப்பமாவது நிலைத்து, குழந்தை பிறந்து உயிருடன் தீர்க்காயுளுடன் இருக்க வேண்டும் என்று சொன்னதை மறுபடியும், மறுபடியும் நினை வுக்குக் கொண்டு வந்து கொண்டே இருந்தார் வன அதிகாரி ராமமூர்த்தி.

●

கட்டுரை

மருத்துவர் **ச. நிரஞ்சனா மணிகண்டன்,** பி.எஸ்.எம்.எஸ்.





கொலஸ்ட்ரால் கூடிப் போச்சா?

கொலஸ்ட்ரால் என்பது என்ன? 'பிளட் கொலஸ்ட்ரால்' என்பது, நம் உடலிலும் இரத்தத்திலும் உள்ள கொழுப்புச் சத்தினைக் குறிப்பது. ஒவ்வொரு உடம்பிற்கும் கொழுப்புச் சத்தானது மிகவும் இன்றியமையாதது. புதிய செல்களை உருவாக்கவும், மூளை சுறுசுறுப்பாக இயங்கவும், ஹார்மோன்கள் நம் உடலில் உற்பத்தி ஆவதைச் சீர்படுத்தவும், வைட்டமின் டி உற்பத்திக்கும், நரம்பு மண்டலம் நன்கு வேலை செய்வதற்கும் கொழுப்புச் சத்தானது மிகவும் தேவை.

கொழுப்பு என்பது உடலின் செல்களுக்குத் தேவையான சக்தியை வழங்குகிறது. கொழுப்பு, உடலில் தேவையான அளவு இருந்தால்தான் நன்மையளிக்கும். அந்தக் கொழுப்பு, இரண்டு வகையாக உள்ளது. ஒன்று, LDL என்கிற Low Density Lipoprotein. மற்றொன்று HDL என்கிற High Density Lipoprotein. இவ்விரண்டு கொழுப்பு வகைகளில் கெட்ட கொழுப்பு LDL என்றும் நல்ல கொழுப்பு HDL என்றும் அழைக்கப்படுகின்றன.

LDL கொலஸ்ட்ரால் என்பது 139 மி.கிராமிற்குக் குறைவாகவும், HDL கொலஸ்ட்ரால் என்பது ஆண்களுக்கு 40 மி.கிராமிற்கு அதிகமாகவும், பெண்களுக்கு 25 மி.கிராமிற்கு மேலாகவும் இருத்தல் வேண்டும்.

HDL கொலஸ்ட்ரால் எனப்படும் நல்ல கொலஸ்ட்ரால் அளவு குறையும்போது, இதய நோய் ஏற்பட வழி பிறக்கிறது. பெரும்பாலும் இந்தியர்களின் HDL கொழுப்பு அளவு, உலக சராசரியை விடக் குறைவாகவே உள்ளது. எனவே, HDL என்ற நல்ல கொழுப்பின் அளவை உயர்த்தினால் ரத்தக் குழாய் அடைப்பு ஏற்படாது.

கொழுப்பு, உணவின் மிகப்பெரிய சக்தி. கிராம் ஒன்றுக்கு 9 கலோரிச் சத்து அளிக்க வல்லது. உடலின் சில செயல்பாடுகளுக்குக் கொழுப்பு அவசியம். உணவில் கார்போஹைட்ரேட் புரதச்சக்தி இல்லாதபொழுது, கொழுப்பே எரிசக்தியை அளிக்கின்றது.

காலம் காலமாகச் சத்துணவு வல்லுநர்களாலும், மருத்துவர்களாலும் குறைந்த கொழுப்பு உணவு பரிந்துரைக்கப்படுகிறது.

கெட்ட கொழுப்பு, கெட்ட கொலஸ்ட்ராலைக் கொண்டுள்ளது. அதன் காரணமாக, உடலில் பல பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. நல்ல கொழுப்பு, உடலுக்கு நலத்தைத் தந்து இருதயத்தைக் காக்கிறது.

குறைந்த கொழுப்பைத் தேர்வு செய்வது எப்படி? : உணவுப் பொருள்களின் மீதுள்ள லேபிளைப் படியுங்கள். கொழுப்புக் குறைந்த அசைவத்தைத்

தேர்ந்தெடுங்கள். கொழுப்புக் குறைந்த பால், பால் பொருட்கள் கிடைக்கின்றன. எண்ணெயை அப்படியே ஊற்றாமல், கரண்டி கொண்டு அளவாக ஊற்றுங்கள். *17.5* கிலோ/*100* கிராம் என்றால், மிகமிக அதிகக் கொழுப்பு. *3* கிலோ / *100* கிராம் என்றால் நல்ல கொழுப்பு.

கெட்ட கொழுப்பு நிறைந்த உணவுகள் : தோலுடன் இருக்கும் கோழிக்கறி, கொழுப்பு நிறைந்த பால், வெண்ணெய், ஐஸ்கிரீம், பாமாயில், கேக், பீட்சா வகைகள், பொரித்த உணவுகள், சர்க்கரை அதிகம் சேர்த்த உணவுகள்.

நமக்கு உதவும் இயற்கையாக இருக்கும் கொழுப்புச் சத்தானது, தன் அளவில் இருந்து கூடும்போது பல விளைவுகளை உருவாக்குகிறது. அதைப் பற்றிக் காண்போம்.

கொலஸ்ட்ரால் இரண்டு வழிகளில் நமக்குக் கிடைக்கின்றது. ஒன்று, நம் உடலில் உற்பத்தி ஆவது. மற்றொன்று நாம் உண்ணும் உணவிலிருந்து நமக்குக் கிடைப்பது. நம் உடல் கொழுப்பினை 'லிப்பிட் பிரொஃபைல்' (Lipid profile) சோதனை மூலம் நாம் தெரிந்து கொள்ளலாம்.

கொலஸ்ட்ரால் எப்பொழுது கூடும்?


1. அதிக உழைப்பின்றி ஒரே இடத்தில் அமர்ந்து வேலை பார்ப்பது, பொழுது போக்குவது முதலிய வாழ்க்கை முறை நடத்துவோர்க்குக் கொழுப்புக் கூடுவதற்கு வாய்ப்புள்ளது. ஆகவே, அவர்கள் உடற்பயிற்சி செய்வது இன்றியமையாதது.

2. **ஆரோக்கியமற்ற உணவு முறை :** புகை பிடித்தல், மது அருந்துதல் மட்டுமின்றி, நிறைய அசைவ உணவுகளையும் எண்ணெயில் பொரித்த உணவுகளையும் அதிகம் உட்கொள்பவர்களுக்கும், காய்கறிகள், பழங்கள் குறைவாக உட்கொள்பவர்களுக்கும், பருப்பு மற்றும் சுண்டல் வகைகளைக் குறைத்துக்கொண்டு அரிசி மற்றும் கிழங்கு வகைகளைச் சேர்ப்பவர்களுக்கும் உடல் எடை கூடுவதுடன் கொலஸ்ட்ராலும் கூடுகிறது.

3. உடலுக்குத் தேவையற்ற இனிப்புச் சத்தின் மூலம் கொழுப்புக் கூடுதலாகும். மூளை நன்கு சுறுசுறுப்பாக இயங்கவும், உடனே சக்தி கிடைக்கவும் குளுக்கோஸ் நம் உடலுக்கு மிகவும் அவசியம். குளுக்கோஸ் ஆனது, எரிந்து நமக்குச் சக்தியைக் கொடுக்கும்.

குழந்தைகளுக்கும், கடின உழைப்புச் செய்பவர்களுக்கும் நிறைய இனிப்புச் சத்துத் தேவைப்படும். இனிப்பினை உண்டுவிட்டு உட்கார்ந்து வேலை பார்ப்பதனால் அது கொழுப்பாக மாறி நம் உடலிலும் இரத்தக் குழாய்களிலும், இரத்தத்திலும் கொழுப்பினைக் கூட்டும். குளிர்பானங்கள் அனைத்திலுமே கெட்ட கொழுப்புக் கூடுவதற்கான சத்துக்கள் உள்ளன. அவற்றைத் தவிர்ப்பது மிகவும் நல்லது.

4. **மன அழுத்தம் (Stress)** : நீடித்த மன அழுத்தம் உடல் கொலஸ்ட்ராலைக் கூட்டும். நீரிழிவு நோய், தைராய்டு, இரத்த அழுத்தம் முதலிய நோய்களும் இரத்தத்தில் உள்ள கெட்ட கொழுப்பினைக் கூட்டும்.




இதன் விளைவுகள் :

1. இதய அடைப்பு (ஹார்ட் அட்டாக்).
2. ஸ்ட்ரோக் எனப்படும்

இரத்தக்கசிவு மற்றும் அடைப்பு.

3. இரத்த அழுத்தம்.
4. இரத்தத்தில் அடைப்பு ஏற்பட்டு உறுப்புகள் இயங்காமல் தடைப்படுதல் (Infarct) முதலியன.



கொலஸ்ட்ரால் வராமல் இருக்க நாம் கடைப்பிடிக்க வேண்டியவை...

1. சுடு நீர் குடித்தல் வேண்டும்.
2. அரை வயிறு உணவு உட்கொண்டால் போதும் என்னும் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும்.
3. அதிக இனிப்பு, புளிப்பு, உப்பினைத் தவிர்க்க வேண்டும்.
4. உண்டபின் சிறிது தொலைவு உலாவுதல் வேண்டும்.
5. பசித்த பின் புசித்தல் வேண்டும்.
6. செயற்கை உணவுகளைத் தவிர்த்து, இயற்கை உணவுகளை உட்கொள்ள வேண்டும்.
7. நீர்ச்சத்து, நார்ச்சத்து, புரதச்சத்துச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.
8. நல்ல கொழுப்புள்ள தேங்காய் எண்ணெய் மற்றும் உருக்கிய நெய் சேர்த்துக் கொள்வது நல்லது.
9. ரீஃபைன்டு ஆயிலைத் தவிர்த்துச் செக்கு எண்ணெயைப் பயன்படுத்துதல் வேண்டும்.
10. வெல்லம் சேர்த்த இனிப்பு வகைகளைச் சேர்த்துக் கொள்ளலாம்.
11. மீன் மற்றும் இறைச்சி (மட்டன்) வகைகளைச் சிறிதளவு சேர்த்துக் கொள்ளலாம்.
12. கொடம்புளியை உணவில் சேர்த்துக் கொண்டால் கொலஸ்ட்ராலைக் குறைக்கும்.
13. தேநீர் மற்றும் காபிக்குப் பதிலாக, சுக்குமல்லிக் காபியைக் கருப்பட்டியுடன் சேர்த்துக் கொள்ள, ஆக்ஸிஹீமோகுளோபின் (Oxy - Hemoglobin) அதிகமாகி உள் உறுப்புக்களின் இரத்த ஓட்டம் கூடி, உறுப்புகளின் கொழுப்பு (Visceral fat) என்பதும் குறையும்.
14. காய்கறிக் கொதிநீர் (சூப்) அடிக்கடி எடுத்துக் கொள்வதன் மூலம், செரியாத உணவும் செரிக்கும். அதனால் தான் நம் முன்னோர்கள் நாள்தோறும் உணவில் ரசம் சேர்த்துக் கொண்டனர்.

கொலஸ்ட்ராலுக்கான சித்த மருத்துவம்

1. **பேதி மாத்திரை (Purgation cleansing) :** பேதி ஆவதற்கு மருந்து எடுத்துக் கொள்வதன் மூலம், குடலில் உள்ள கொழுப்புப் படிமானங்கள் கரைந்து நன்கு பசி எடுக்கவும், நாம் உண்ணும் உணவானது சத்தானதாக நம் இரத்தத்தில் கலக்கவும் உதவி புரிகின்றது.
2. **பஞ்ச தீபாக்கனி மாத்திரை :** இந்த மாத்திரை வாய்வு மற்றும் வயிற்றின் தேவையில்லாத கொழுப்பினைக் குறைத்து இரத்தத்தில் உள்ள கொழுப்பினையும் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள உதவும்.

   மேலும், பூண்டு, தேங்காய் எண்ணெய் கலந்து செய்யப்பட்ட மாத்திரையும் இதுபோன்ற காப்புரிமை பெற்றுத் தயாரிக்கப்படும் பல சித்த மருந்துகளும் உள்ளன. இவற்றையும் சித்த மருத்துவத்தில் தந்து குணப்படுத்துகிறோம்.

மேலும் விபரங்களுக்கும், மருத்துவ ஆலோசனைக்கும் கோவை வரதராஜபுரத்தில் உள்ள கஸ்தூர்பா காந்தி நினைவு சித்த மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தில் ஆலோசனைகள் பெறலாம். மருத்துவரின் தொடர்பு எண் : 97891 25991.

கட்டுரை

காரிருள் கல்கத்தா ஒளி மிகுந்த டில்லி



சி.எஸ். இராமகிருஷ்ணன்

1947 ஆகஸ்ட் 15, ஆங்கில அரசின் கொடுமைகளைத் தகர்த்தெறிந்து ஆனந்த சுதந்திரத்தை அடைந்த நாள். டில்லி மாநகரம் முழுவதும் வண்ண விளக்குகளால் ஒளி வெள்ளத்தில் ஜொலித்துக் கொண்டிருந்தது. டில்லி மாநகரம் மட்டுமல்ல, மின்வசதி இருந்த எல்லா நகரங்களிலுமே ஒளி வெள்ளத்தில் மக்கள் மகிழ்ச்சிக் கடலில் கூத்தாடிக் கொண்டிருந்தனர். பட்டாசுகளையும், வாணங்களையும் விட்டு மேலும் ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சினர்.

இத்தகைய மகிழ்ச்சியில், ஆனந்தத்தில் பரவசமடைந்த நாளன்று காந்திஜி எங்கு இருந்தார்? சேவா கிராமத்தில் இருந்தார், டில்லியில் இருந்தார், ஆங்கில அரசுடன் கையெழுத்துப் போட்டுச் சுதந்திரத்தை வாங்க லண்டன் சென்றுவிட்டார் என்றுதான் பதில் வரும். அல்லது சபர்மதியில் இருந்தார், மும்பையில் இருந்தார் என்றும் கூறுவர்.

எங்கிருந்தார் காந்திஜி? கல்கத்தாவில் பாலியாகாட் என்ற பகுதியில் 'ஹைதரி மாளிகை' என்ற பாழடைந்த, எவரும் வசிக்காத ஒரு முஸ்லீம் வீட்டில் தங்கியிருந்தார்.

அங்கு இந்து – முஸ்லீம் வகுப்புக் கலவரங்களால் தீக்கிரையாக்கப்பட்ட கட்டடங்கள், ஒருவரை ஒருவர் வெட்டிக்கொண்டு ரத்த ஆறு ஓடிய வீதிகள், துப்பாக்கிகளையும், கையெறி குண்டுகளையும் வைத்துக்கொண்டு நகரத்தைப் போர்க்களமாக்கிக் கொண்டிருந்த இளைஞர்கள். வெளியே வீதிகளில் வரப் பயந்த மக்கள். நகரமே இருளில் மூழ்கியிருந்தது.


'ஹைதரி மாளிகை' ஒரு சந்தில் மிகவும் அசுத்தமாக இருந்த கட்டடம்.



கல்கத்தா கலவரம்

காந்திஜியின் வருகைக்காக அவசரமாகச் சுத்தம் செய்யப்பட்டது. கதவுகள், ஜன்னல்கள் ஆகியவற்றில் பொருத்தியிருந்த கண்ணாடிகள் தூள் தூளாக உடைக்கப்பட்டிருந்தன.

ஒரே ஒரு கழிவறை. அதையும் வருவோரும், போவோரும், விருந்தினரும், காவலுக்கு இருந்த போலீசாரும் என நூற்றுக் கணக்கானோர் பயன்படுத்தினர். மழையும் பெய்திருந்ததால் சேறும், சகதியுமாக நாற்றமடித்துக்



கொண்டிருந்தது. நாற்றத்தைப் போக்கத் தலைசுற்றி மயக்கம் வரும் அளவிற்குப் பிளீச்சிங் பவுடரை அதிக மாகப் போட்டிருந்தார்கள்.

அந்த வீட்டில் ஓர் அறை காந்தி ஜிக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. மற்றோர் அறை அவருடைய சாமான்களுக்கும், அவருடன் வந்தவர்களுக்கும், விருந் தினர்களுக்கும் ஒதுக்கப்பட்டிருந்தது.

சுதந்திர தினத்தன்று வழக்கத் தைவிட முன்னதாகவே, அதிகாலை 2 மணிக்கே காந்திஜி எழுந்துவிட்டார்.

அந்த நாள், பல ஆண்டுகளுக்கு காந்திஜிக்குச் செயலாளராக இருந்த மகாதேவ தேசாய் ஐந்து ஆண்டு களுக்கு முன்னால் இறந்த நாளாகும். அத்தகைய நாட்களில் பிரார்த் தனைக்குப் பிறகு கீதையை முழுவதும் காந்திஜி பாராயணம் செய்வார். பின்னர் மவுனம் அனுஷ்டிப்பார்.

அன்று காலை பிரார்த்தனை நடந்து கொண்டிருந்தபோது பல இளம் பெண்கள் ரவீந்திரநாத் தாகூர் இயற்றிய சுதந்திர கீதங்களை இசைத் துக்கொண்டு அந்த வீட்டருகில் வந்து கொண்டிருந்தனர். அது காந்திஜியின் பிரார்த்தனைக்குத் தடையாக இருக் குமோ எனக் கருதித் தங்களின் இசையை உடனே நிறுத்திவிட்டுப் பிரார்த்தனையில் அவர்களும் கலந்து கொண்டனர்.

பிரார்த்தனைக்குப் பின்னர் மீண்டும் அந்த யுவதிகள் ரவீந்திரநாத் தாகூரின் பாடல்களைத் தொடர்ந்து இசைத்துவிட்டு காந்திஜியைத் தரிசனம் செய்துவிட்டுத் திரும்பினர். இதேபோலப் பல குழுக்களும் வந்து காலை வரை இந்நிகழ்வு நடந்தது.

காந்திஜி, வழக்கம்போல காலை யில் நடப்பதற்கு வெளியே சென்றார். அவரைத் தரிசிப்பதற்காக ஆண், பெண், குழந்தைகள் காத்திருந்தனர். அன்று முழுவதும் திரளான கட்டுக் கடங்காத கூட்டம் அவரைத் தரிசிக்க வந்து கொண்டேயிருந்தது. ஒவ்வோர் அரைமணி நேரத்திற்கும் காந்திஜி வெளியே வந்து தரிசனம் கொடுத்துக் கொண்டிருந்தார். மேற்கு வங்க அமைச்சரவையில் இருந்த அனை வரும் காந்திஜியைத் தரிசித்தனர்.

“இன்று முதல் நீங்கள் முள் கிரீடம் சூட்டிக் கொள்கிறீர்கள். சத்தியம், அகிம்சை ஆகியவற்றால் அயராமல் உழையுங்கள். எளிமை, பொறுமை ஆகியவற்றைக் கடைப்பிடியுங்கள். இதுவரை பிரிட்டிஷ் ஆட்சி உங் களைச் சோதித்துக் கொண்டிருந்தது. இனிவரும் காலங்களில் விழிப்புடன் இருந்து சோதனைகளை எதிர்கொள் ளுங்கள்.

“அதிகாரத்தை ஜாக்கிரதையாகக் கையாளுங்கள். தவறினால், அதிகாரம் உங்களை அழித்துவிடும். ஆடம்பரத் திற்கும், பகட்டிற்கும் மயங்கி இரை யாகிவிடாதீர்கள். இந்தியக் கிராமங் களிலுள்ள ஏழை மக்களுக்குச் சேவை செய்யப் பதவியின் மூலம் வாய்ப்புக் கிடைத்துள்ளது. ஆகையால், அர்ப் பணிப்புடன் பணி செய்யுங்கள். ஆண்டவன் உங்களுக்குத் துணை புரி வாராக” என்று காந்திஜி அவர் களிடம் தெரிவித்தார்.


மேற்கு வங்க கவர்னராக நியமிக் கப்பட்ட ராஜாஜியும் காந்திஜியைத் தரிசித்தார். பல விஷயங்களைக் குறித்துப் பேசிக் கொண்டிருந்தனர். வேடிக்கையும், வெடிச்சிரிப்பும் அந்தப்


பேச்சின் நடுவில் இருந்ததாம்.


வகுப்புவாதத்தால் இரத்த ஆறு ஓடிய கல்கத்தா நகரம் அன்று வித்தியாசமாகக் காட்சியளித்தது. ஹிந்து – முஸ்லிம் மக்கள் லாரிகளில் ஏறிக்கொண்டு, "ஹிந்து – முஸ்லிம் ஒற்றுமை ஓங்குக! ஹிந்துவும் – முஸ்லிமும் சகோதரர்கள் (பாய் – பாய்)" என்று முழக்கமிட்டு வீதி களில் நகர்வலம் வந்தனர்.

கவர்னர் மாளிகை முன் மக்கள் மகிழ்ச்சியுடன் முழங்கிக் கொண்டிருந்த தால், கவர்னர் ராஜாஜியால் வெளியே கூட வர முடியவில்லை.

இதைப்போன்ற முழக் கங்கள் 'ஹைதரி மான்சன்' முன்னாலும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஆனால், காந்திஜியின் முகம் எந்த வித மகிழ்ச்சியையும் தெரிவிக்கவில்லை. இனி என்ன செய்யவேண்டும் என்று அகக் கண்களால் கடவுளை வேண்டிக் கொண்டிருந்தார்.


ரவீந்திரநாத் தாகூர்


வல்லபாய் படேல்


நேரு

அன்று மாலை பிரார்த்தனைக் கூட்டத்திற்கு 30 ஆயிரம் பேர் வந் திருந்தனர். பிரார்த்தனைக் கூட்டத் திற்குச் செல்ல வழக்கமாக 5 நிமிடங் கள்தான் பிடிக்கும். அன்று 20 நிமி டங்களாகிவிட்டன. அந்தக் கூட்டத் தில் வகுப்பு ஒற்றுமை ஏற்படுத்திய கல்கத்தா மக்களைப் பாராட்டினார்.

வங்கத்தில் கலவரத்திற்குக் காரண மாக இருந்த முதலமைச்சர் சுஹர் வர்த்தி மனம் மாறியிருந்தார். அன்று சுஹர்வர்த்தி காரை ஓட்ட, வகுப்பு ஒற்றுமை ஏற்பட்ட பல இடங் களுக்குக் காந்திஜி சென்று பார்த்தார். காந்திஜியை அடையாளம் கண்டு கொண்ட மக்கள், 'மகாத்மா காந்திஜிக்கு ஜே' என்று முழக்கமிட்டனர். சிலர் பன்னீர் தெளித்தனர். சில முஸ்லிம் இளைஞர்கள் காரைச் சூழ்ந்துகொண்டு காந்திஜிக்கு கைலாகு கொடுத்து வணங்கினர்.

ஆகஸ்ட் முதல் வாரத்தில் "சுதந்திர தினம்" குறித்து காந்திஜியிடம் கேட்ட போது, "அந்த நாள் கொண் டாடுவதற்கு அல்ல. அன்று பூராவும் ராட்டையில் நூல் நூற்றல், பிரார்த்தனை ஆகியவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்" என்று கூறியிருந் தார். அவர் கூறியது போல அன்று முழுவதும் காந்திஜி உபவாசமிருந்தார். ராட்டை யில் நூல் நூற்றார்.

அன்று அகதாஹாரிசன் என்பவருக்கும், ராஜகுமாரி அமிர்தகௌர்க்கும் கடிதங்கள் எழுதினார். இவ்வாறு இந்திய முதல் சுதந்திர நாளைக் கழித்த காந்திஜி அடுத்த சுதந்திர நாளைக் காண இருக்க வில்லை. 1947 ஆகஸ்ட் 15 அவரது முதல் சுதந்திர நாளாகவும், அதுவே கடைசியாகவும் அமைந்து விட்டது.

காந்திஜி முதல் சுதந்திர தினத் தன்று டில்லியில் ஏன் கலந்து கொள்ளவில்லை?

சுதந்திர தினத்திற்குச் சில நாள் களுக்கு முன்னர் நேருஜியும், படேலும் கடிதம் ஒன்றை ஒரு தூதுவர் மூல மாகக் கல்கத்தாவில் இருந்த காந்திஜிக்குக் கொடுத்து விட்டனர். அந்தத் தூதுவர் இரவில் கல்கத்தா வையடைந்து காந்திஜி தங்கியிருந்த இடத்தை அடைந்தார்.

"நீங்கள் உணவருந்தினீர்களா?"

என்று தூதுவரிடம் விசாரித்து, அவர் உணவருந்தவில்லை எனத் தெரிந்ததும், அவருக்கு உணவளிக்க ஏற்பாடு செய்தார் காந்திஜி. பின்னர் அவர் கொண்டுவந்த கடிதத்தைப் பிரித்துப் பார்த்தார் காந்திஜி.

"பாபுஜி! நீங்கள் இந்த நாட்டின் தந்தை, தேசப்பிதா. இந்தியா சுதந்திரம் பெறும் ஆகஸ்ட் 15–ஆம் நாள் தாங்கள் டில்லிக்கு வரவேண்டும். எங்களுக்கு ஆசிகள் வழங்க வேண்டும்" என்று எழுதியிருந்தனர்.

"எவ்வளவு முட்டாள்தனம். வங்காளம் எரிந்துகொண்டிருக்கிறது. ஹிந்துக்களும், முஸ்லிம்களும் ஒருவரையொருவர் கொன்று குவித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் இடும் ஓலத்தில் கல்கத்தாவில் இருள் சூழ்ந்துள்ளது. ஒற்றுமையையும், அமைதியையும் ஏற்படுத்த நான் இங்குதான் இருக்க வேண்டும். ஒளி விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ள டில்லிக்கு நான் ஏன் செல்ல வேண்டும்? நெருக்கடி நேர்ந்து, தேவையானால் என் உயிரையும் கொடுக்க நான் இங்குதான் இருக்க வேண்டியுள்ளது" என்று மனமுருகிச் சொன்னார்.

அடுத்த நாள் காலை தூதுவர் டில்லிக்குத் திரும்பிச் செல்லும் பொருட்டு காந்திஜியிடம் விடைபெற வந்தார். காந்திஜியும், தூதுவரும் ஒரு மரத்தடியில் நின்று பேசிக் கொண்டிருந்தனர்.

அப்போது காந்திஜி தூதுவரிடம் கூறினார்... "நண்பரே! நீங்கள் டில்லிக்குத் திரும்பிச் செல்கிறீர்கள். பண்டித நேருவுக்கும், சர்தார் படேலுக்கும் நான் என்ன பரிசு தர முடியும்? அவரோ இந்த நாட்டின் பிரதம மந்திரி. அதிகாரமும், செல்வமும் இல்லாத நான் ஒரு பரம ஏழை" என்று கூறிக்கொண்டிருந்தார்.

அந்த நேரத்தில் அந்த மரத்திலிருந்து காய்ந்து வறண்ட ஓர் இலை காற்றில் பறந்து கீழே விழுந்தது. காந்திஜி அதை எடுத்துத் தன் உள்ளங்கையால் தடவினார். பின்னர், "இந்த வறண்ட இலையை என் முதல் சுதந்திர நாள் பரிசாகப் படேலிடமும், நேருஜியிடமும் கொடுங்கள்" என்று கொடுத்தார்.

இதைக் கேட்ட தூதுவரின் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்தது. அந்தக் கண்ணீர், கையில் வைத்திருந்த வறண்ட இலைமேல் விழுந்து இலையை ஈரமாக்கியது.

உடனே காந்திஜி நகைச்சுவையுடன் "கடவுள் எவ்வளவு பெரியவர்! காந்தி ஒரு வறண்ட இலையைக் கொடுத்துவிட அவர் விரும்பவில்லை போலுள்ளது. அவர் அதை ஈரமாக்கி விட்டார். இப்போது அந்த இலை ஈரத்தால் பிரகாசித்துச் சிரித்துக் கொண்டிருக்கிறது. உங்கள் கண்ணீர் நிரம்பிய இந்த ஈரமான இலையை என் சுதந்திரதினப் பரிசாகக் கொடுங்கள்" என்று வேடிக்கையாகப் பேசித் தூதுவரை வழியனுப்பி வைத்தார்.

ஆக, ஒளி வெள்ளத்தில் மூழ்கிய டில்லி, காரிருளில் ஆழ்ந்திருந்த கல்கத்தா. காரிருளைக் கிழித்து நாட்டுக்குச் சுதந்திரம் கிடைக்கச் செய்து ஒளியேற்றிய காந்தி மகான்.

1946 அக்டோபர் 27 டில்லியை விட்டுப் புறப்பட்ட காந்தி, 28 அன்று கல்கத்தாவை அடைந்தார். நவம்பர் 6–இல் நவகாளியை அடைந்து அமைதி யாத்திரை சென்றுவிட்டு, 1947 மார்ச் 5–இல் கல்கத்தா திரும்பி விட்டார். முதல் சுதந்திர தினத்தன்று அவர் நவகாளியில் இல்லை. கல்கத்தாவில் இருந்தார். ●

ஓம் சக்தி

ஆருயிர்களுக்கு எல்லாம் – நான்
அன்புசெயல் வேண்டும்.
– வள்ளலார்

மலர் : 37 ஜனவரி 2020 இதழ் : 12

நிறுவனர் : **நா. மகாலிங்கம்**

ஆசிரியர் & வெளியிடுபவர்: **ம. மாணிக்கம்**

Editor & Publisher : **M. MANICKAM**

அச்சிடுபவர் : **த. ராஜ்குமார்**

Printer : **T. RAJKUMAR,**

Rukmani Offset Press

ருக்மணி ஆப்செட் பிரஸ்,
E-32, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
கோவை – 641 021.

இணையாசிரியர் : **பெ. சிதம்பரநாதன்**

கதை, கவிதைகளில் வரும் பெயர்களும்,
சம்பவங்களும் கற்பனையே.

படைப்புகளைச் சுருக்கவோ, திருத்தி அமைக்கவோ
ஆசிரியருக்கு உரிமை உண்டு.

'ஓம் சக்தி'யில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகள்
அவற்றின் எழுத்தாளர்களுக்கு உரியவையே தவிர,
பத்திரிகை அவற்றிற்குப் பொறுப்பேற்காது.

தனிப் பிரதி ரூ.15/-
ஆண்டு சந்தா ரூ. 265/-
(தீபாவளி மலர் உட்பட)
ஆயுள் சந்தா ரூ. 2000/-
(10 ஆண்டுகள்)

சந்தா தொகையை "SAKTHI SUGARS LTD. A/c OMSAKTHI" என்ற பெயரில் D.D.–யாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர், ஓம் சக்தி
69–ஏ, ஆரோக்கியசாமி சாலை (மேற்கு),
ஆர்.எஸ்.புரம், கோவை – 641 002
போன் : 0422–4322471, 0422–4322423
வெளியிட்டோர் : **சக்தி சுகர்ஸ் லிமிடெட்.**

E-mail : omsakthieditorial@gmail.com



சமையல்

சோயா அப்பம்

தேவையான பொருள்கள் :

சோயா மாவு : 1/4 கப், கோதுமை மாவு : 1/4 கப், அரிசி மாவு : 1/2 கப், பொடி செய்த வெல்லம் : 2 கப், தேங்காய்த் துருவல் : 1/4 கப், ஏலக்காய்த் தூள் : 2 டீஸ்பூன், எண்ணெய் : 300 கிராம்.

செய்முறை :

1. வெல்லத்துடன் தண்ணீர் சேர்த்து நன்றாகக் கரைத்து, அத்துடன் சோயா, கோதுமை, அரிசி மாவு களையும், தேங்காய்த் துருவல், ஏலக்காய்த் தூள் ஆகியவற்றையும் சேர்த்து நன்றாகக் கலக்கவும்.
2. அடுப்பில் வாணலி வைத்து, எண்ணெய் ஊற்றிக் காய்ந்ததும், சிறு கரண்டியால் மாவை வட்டமாக ஊற்றவும். ஒரு பக்கம் சிவந்ததும், திருப்பிப் போட்டு நன்கு வெந்த பின் எடுக்கவும்.
3. இதன் ஓரம் கரகரப்பாகவும், நடுவில் மிருதுவாகவும் இருக்கும். உடலுக்குச் சத்தான உணவு 'சோயா அப்பம்.'

– **அ. திவ்யா,** காஞ்சிபுரம்.

இந்தியா வேண்டுவதை நாம் செய்வோம்!

முனைவர் டாக்டர் ஜே.ஜி. சண்முகநாதன்

“பெரும்பாலும் நீங்கள் குறை கூறுவதாகவே இருக்கிறீர்கள். “அரசு திறமையாக இல்லை; நம்முடைய சட்டங்கள் மிகவும் பழமையானவை; நகராட்சி குப்பைக் கூளங்களை எடுப்பதில்லை; தொலைபேசிகள் சரியாகவே செயல்படுவதில்லை; ரயில்வே ஒரு வேடிக்கை தான்; நமது விமானங்கள் உலகிலேயே மோசமானவை; கடிதங்கள் சரியான இடத்திற்குச் சென்று சேர்வதில்லை...” இப்படி நீங்கள் சொல்கிறீர்கள். சொல்லிக் கொண்டே இருக்கிறீர்கள்.

நீங்கள் இதற்கு என்ன செய்தீர்கள்?



சிங்கப்பூரில் நீங்கள் சிகரெட் துண்டை வீதியில் எறிவதில்லை. பல சரக்குக் கடைகளில் நீங்கள் உண்பதில்லை. நீங்கள் பாதாள ரயிலைப் பாராட்டுகிறீர்கள். நீங்கள் கார்கள் நிறுத்தும் இடத்திற்குத் தாமதமாக வந்தால், அட்டைகளில் யார் என்ற அந்தஸ்து கருதாமல் அட்டையைப் பதிவு செய்கிறீர்கள். துபாயில் ரமலான் போது வெளிப்படையாக நீங்கள் உண்பதில்லை. ஜெடா (Jeddah)–வில் நீங்கள் தலைக்கவசம் இல்லாமல் வெளியில் செல்ல மாட்டீர்கள்.



வாஷிங்டனில் நீங்கள் 88 கி.மீ. வேகத்திற்கு மிஞ்சி கார் ஓட்ட மாட்டீர்கள். அங்கு இன்னாரவரின் மகன் அதனால் நான் கொடுக்கும் பணத்தை எடுத்துக் கொண்டு போ! என்று சொல்ல மாட்டீர்கள்.

ஆஸ்திரேலியா அல்லது நியூசிலாந்து கடற்கரைகளில் குப்பைத் தொட்டிகளில் தவிர வேறெங்கும் தேங்காய் மட்டைகளைப் போட மாட்டீர்கள். டோக்கியோவில் நீங்கள் எச்சில் துப்ப மாட்டீர்கள்.

வெளிநாடுகளில் உள்ள பழக்கங்கள் மற்றும் விதிகளைப் பின்பற்றி நடக்கும் நீங்கள், நம் நாட்டில் மட்டும் ஏன் அவ்வாறு நடப்பதில்லை? வெளிநாடுகளின் மக்கள் மதிக்கும் விதத்தில் நல்லவராக மதிக்கப்படும் நீங்கள், நமது நாட்டில் மட்டும் ஏன் அவ்வாறு நடப்பதில்லை?

ஒருமுறை மும்பையின் முன்னாள் கமிஷனரிடம் (Mr. Tenalkar) உரையாடும் போது அவர் கூறியது : பணக்காரர்களுடைய நாய்கள் வீதியில் நடக்கும்போது வீதியில் பல இடங்களில் தனது மலக் கழிவுகளால் பரவலாக அசுத்தம் செய்கின்றன. ஆனால் மக்கள் அதிகாரிகளைக் குற்றம் சொல்வார்கள். இவர்கள், அதிகாரிகள் என்ன செய்ய வேண்டுமென எதிர்பார்க்கிறார்கள்? நாய்களின்

பின்னாலேயே துடைப்பத்தை எடுத்துக் கொண்டு போவதா? அமெரிக்காவில் நாய் கழிவு செய்யும் போது, உடனே நாயின் உரிமையாளர் சுத்தம் செய்கிறார். ஜப்பானிலும் இது போலவே தான்.

இவ்வாறு இந்தியாவில் நாய்களின் உரிமையாளர்கள் செய்வார்களா? நாய் தேர்தலில் (அலங்கார அணிவகுப்பில்) தேர்வு செய்துவிட்டுப் பிறகு எல்லாம் மறந்துவிடுகிறோம். நம்மை உபசாரம் செய்வதை எதிர்பார்த்து எல்லாவற்றையும் மறந்து விடுகிறோம். நம் அரசாங்கமே சுத்தம் செய்யட்டும் என எதிர்பார்க்கிறோம்.

வீதியில் இருக்கும் காகிதத் துண்டை எடுத்துக் குப்பைத் தொட்டியில் போடுவதில்லை. ரயில்களில் சுத்தமான குளியல் அறைகளை நிறுவுவதை எதிர்பார்க்கிறோம். ஆனால் அவற்றை நாம் சுத்தமாகப் பராமரிப்பதைக் கற்றுக் கொள்வதில்லை.



இண்டியன் ஏர்லைன்ஸ் மற்றும் ஏர் இந்தியாவில் அருமையான உணவு கொடுப்பதையும் சுத்தமான கழிவறைகளை அமைப்பதையும் எதிர்பார்க்கிறோம். ஆனால் அதைக் கடிதில் கெடுத்து விடுகிறோம். இதில் அதன் சிப்பந்திகளே சிறந்த சேவையை மக்களுக்கு அளிப்பதில்லை.

நாம் பெண்கள் வரதட்சணை, பெண் குழந்தைகள் பற்றிப் பொது மேடைகளில் பேசுகிறோம். ஆனால் வீட்டு விஷயங்களில் எதிர்மறையாகச் செய்கிறோம். என் வீட்டில் மட்டும் வரதட்சணை வாங்கினால் என்ன? இதுவே அவர்களின் எண்ணம்.



டாக்டர் அப்துல்கலாம்

ஆகவே, யார் இந்தக் குறைகளை மாற்றுவது? இந்தக் கடமை யாருடையது? இதில் நன்மையடைவது நமது அக்கம் பக்கத்தினர், மற்ற குடித்தனங்கள், மற்ற நகரங்கள், மற்ற குடிமைகள். ஆனால் கண்டிப்பாக நான் மற்றும் நீங்களும் இல்லை.

இந்தச் சீரான முறை நன்றாக அமைய இதற்கு முயற்சி செய்யும்போது, நாம் ஒதுங்கிப் பத்திரமாக இருந்து கொள்கிறோம். மற்ற நாடுகளிலிருந்து சுகாதார ஆட்கள் வந்து அற்புதம் செய்து விடுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். அல்லது நமது நாட்டை விட்டு ஓடி விடுகிறோம்.

இந்திய மக்களே! இதில் உள்மனச் சோதனை மற்றும் நமது மனதில் சுருக்கெனக் குற்ற உணர்வு ஏற்பட வேண்டியது அவசியம். அமெரிக்காவின் தலைவர் கென்னடியின் உரை மாதிரி இந்தியாவிற்கு என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுகிறேன். “இந்தியாவில் நாம் என்ன செய்ய வேண்டும்? அமெரிக்கா மற்றும் அயல்நாடுகள் போல் இந்தியாவை மாற்ற என்ன செய்ய வேண்டும்?

இந்தியா நம்மிடம் எவற்றை எதிர்பார்க்கிறதோ அவற்றை நாம் செய்வோம்.”


(ஏ.பி.ஜே. அப்துல்கலாம் அவர்கள் ஹைதராபாத் Indian Institute of Technology-ல் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.)

●



விவாதம்

குடிஉரிமைச் சட்டத் திருத்தத்தில் என்னதான் குறை?



ஒரு ஜனநாயக தேசத்தில் வாழ்வதற்கு மக்களுக்கு ஆதார் அட்டை, ரேசன் அட்டை, சமையல் எரிவாயுப் பதிவு, வாக்காளர் அட்டை, கடவுச்சீட்டு, பாஸ்போர்ட், பிறப்புச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ் ஆகியவை கட்டாயம்.

குடிஉரிமைச் சான்றிதழ் என்று தனியாக நமக்கு இல்லை. ஆனால், வடகிழக்குப் பகுதியில் உள்ள 7 மாநிலங்களுக்கு அது அவசியமாகி இருக்கிறது. காரணம், அம்மாநிலங்களுக்குள் பிற நாட்டினர் பிழைப்புத் தேடிப் பிரவேசிக்கின்றனர். அதனால் உள்ளூர் மக்களுக்கான வேலைவாய்ப்புகள் குறைந்துவிடுகின்றன.

இந்தியாவுக்கு அண்டை நாடுகளாக உள்ளவை வங்காளதேசம், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், மியான்மர், சீனா ஆகியவை. இவற்றில் மியான்மர், சீனா தேசங்களிலிருந்து இந்தியாவுக்கு வரும் யாரும் பிழைப்புத் தேடி வருவதில்லை. மற்ற 3 நாடுகளான ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், பங்களாதேசம் ஆகியவற்றிலிருந்து குடிபெயர்கிறார்கள். அவர்களைத் தடுப்பதற்குத் தேசியப் பதிவேடு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதேபோல, குடிஉரிமைச் சான்றிதழும் தரப்படுகிறது.

வடகிழக்கு மாநிலங்களில் குடி உரிமை இல்லாதவர்கள் சட்ட விரோதமாக இந்தியாவுக்குள் பிரவேசித்தவர்கள் என்றே கணக்கிடப்படுவார்கள். அப்படிப்பட்டவர்களை அங்கீகரித்து, அவர்களுக்கும் குடியுரிமை தருவது பாரத தேசத்தின் மாண்பைக் காட்டுகிற நாகரிகமான பண்பாகும்.

ஏனோ, இதனை எதிர்த்து மிசோரம், மேகாலயா, அசாம், திரிபுரா ஆகிய வடகிழக்கு மாநிலங்களில் கலவரம் நடக்கிறது. குடி உரிமைச் சட்டத்தை எதிர்த்து அசாமில் நடக்கிற போராட்டத்தைக் கூர்ந்து கவனித்தால், அந்த மாநிலத்து இளைஞர்களின் கோபத்தைப் புரிந்துகொள்ளலாம்.







குடிமக்களுக்கான தேசியப் பதிவேட்டு முறை இல்லாதபோது, அருணாச்சலப்பிரதேசம், நாகாலாந்து, மிசோரம் முதலிய வடகிழக்கு மாநிலங்களுக்குள் பிரவேசிக்க வேண்டுமானால், அதற்கு "உள்நுழைவு அனுமதி" (Inner line permit) முன்பு இருந்தது. அதன்மூலம், அந்த மாநிலங்களுக்குள் பிற மாநிலத்தவர் பிரவேசத்தைக் கட்டுப்படுத்த முடிந்தது.

அதேபோன்ற ஓர் உள்நுழைவு அனுமதி இப்போது 7 வடகிழக்கு மாநிலங்களுக்குமே வழங்கப்பட வேண்டும் என்பது அசாம் மாணவர் அமைப்புகளின் கோரிக்கையாக உள்ளது. **அதற்காகவும் இந்தப் புதிய குடிஉரிமைச் சட்டத்தை அவர்கள் எதிர்க்கிறார்கள்.**

ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய மூன்று நாடுகளில் உள்ள மெஜாரிட்டி முஸ்லிம்களால் துன்புறுத்தித் துரத்தப்பட்ட கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள், ஜைனர்கள், பார்சிகள், ஹிந்துக்கள், சீக்கியர்கள் ஆகியோர் வடகிழக்கு மாநிலங்களுக்குள்தான் பிரவேசிக்கிறார்கள். குடிஉரிமை இல்லாமலேயே சட்ட விரோதமாக எத்தனை ஆண்டுகளுக்கு அவர்களை இந்தியாவுக்குள் வைத்திருக்க முடியும்? என்ற கேள்வி எழுகிறது.

இசுலாமிய நாடுகளில் இருந்த மதச் சிறுபான்மையினர், அங்கு வாழ வேண்டுமானால், முஸ்லிம்களாக மாற வேண்டும். மறுத்தால் கொல்லப்படுவார்கள். அதனால்தான் அம்மூன்று நாடுகளிலிருந்தும் அவர்கள் வெளியேற வேண்டியதாகியது.

அவர்களுக்கும் குடிஉரிமை வழங்கப்படுமானால்தான், சட்டப்படியான இந்தியப் பிரஜைகளாக அவர்கள் இங்கே வாழ முடியும். இந்த விசால எண்ணத்தில்தான் 12 வருடங்கள் வசித்திருக்க வேண்டும் என்ற பொது விதியை 5 ஆண்டாக மத்திய அரசு குறைத்தது.

சுதந்திரத்திற்கு முன்பு ஒரே வங்காளமாக இருந்த மாநிலத்தில் சுதந்திரத்தீ ஜுவாலை விட்டு எரியத் தொடங்கியதைக் கண்ட பிரிட்டிஷ் வைஸ்ராய் கர்சன் பிரபு, மத அடிப்படையில் இந்துக்கள் பெருவாரியாக உள்ள வங்காளம் என்றும்,

1971–இல் கிழக்கு வங்காளத்திடம் பாகிஸ்தான் ராணுவம் தோற்றபிறகு, இந்தியாவிடம் 93 ஆயிரம் சிப்பாய்களோடு பாகிஸ்தான் தளபதி **அமீர் அப்துல்லாகான் நியாசி** சரணடைந்தார். அப்போது அசாம் ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானது. அதன்படி கிழக்கு வங்காள மக்கள் அசாமில் குடியேறு வதற்கு 1971–ஆம் ஆண்டு எனக் கெடு விதிக்கப்பட்டது. இந்தக் காலக்கெடுவைத் தற்போது நிறைவேற்றப்பட்ட புதிய குடிஉரிமைச் சட்டம் 2012 என்று நீட்டித்துவிட்டது.

அதனால், பங்களாதேஷ் முஸ்லிம்கள் அசாமில் தொடர்ந்து குடியேறுவதற்கு அது வசதி செய்து தந்துவிட்டது. அசாம் மக்களுக்கிடையில் இது கொந்தளிப்பை உண்டாக்கியுள்ளது.

அசாம், திரிபுரா முதலிய மாநிலங்களில் ஐ.டி. படித்த இளைஞர்களின் வேலை வாய்ப்புக்களைப் புதிதாகப் பிரவேசித்தவர்கள் அபகரித்துக் கொள்வார்களோ என்ற சந்தேகம் அசாமிய இளைஞர்களுக்கு ஏற்பட்டுவிட்டது. **அதற்காகத்தான் குடிஉரிமைத் திருத்தச் சட்டத்தை அவர்கள் எதிர்க்கிறார்கள்.**

முஸ்லிம்கள் அதிகமுள்ள வங்காளம் எனவும் இரண்டாகப் பிரித்தான்.

அப்படிப் பிரித்தாலும், இரண்டு வங்கங் களிலும் வங்க மொழிதான் தொடர்ந்தது. பாகிஸ் தானின் உருது மொழியைப் பேச கிழக்கு வங்க முஸ்லிம்கள் மறுத்தார்கள். அதனால் அவர்கள் சொல்லொணாத் துயரத்தை அடைந்தனர். இதனைப்பற்றி பங்களாதேஷ் எழுத்தாளர் டாக்டர் தஸ்லிமா நஸ்ரீன் எழுதிய 'லஜ்ஜை' (வெட்கக் கேடு) என்ற நூல் விரிவாகப் பேசுகிறது.

அதற்காக, மெஜாரிட்டி முஸ்லிம்கள் அவ ரைக் கொலை செய்யத் திட்டமிட்டனர். உயிர் பிழைப்பதற்காக பங்களாதேஷின் தலைநகர் டாக் காவிலிருந்து அவர் ஸ்வீடன் நாட்டில் தஞ்சமடைந் தார்.

அதன் பிறகு டாக்காவுக்குப் பக்கத் தில் கல்கத்தா வந்து வசித்தார். மீண்டும் அவருக்குக் கொலை மிரட்டல் வந்ததால், இந்திய வெளியுறவுத்துறை அனுமதி யோடு, ஒவ்வோராண்டும் விசா பெற்று புது டெல்லியில் வாழ்கிறார். பங்களாதேசத்தில் சிறுபான்மை ஹிந்துக்களின் துன்பத்தைப் பற்றித் தெரிய இது ஒன்றே போதும்.

குடி உரிமைத் (Citizenship Bill) திருத்த மசோதா சென்ற மாதம் சட்ட மாகிய பிறகு, பாகிஸ்தான், பங்களாதேசம், ஆப்கானிஸ்தான் முதலிய மூன்று நாடு களில் துன்புறுத்தலுக்கு உள்ளான மதச் சிறுபான்மையினர் குடிஉரிமை கோரி புதி தாக மனுச்செய்து கொள்ள குடிஉரிமைச் சட்டம் வாய்ப்புத் தந்துள்ளது.

அதேசமயம் இம்மூன்று நாடுகளிலிருந்தும் இந்தியாவுக்குள் வருகிற முஸ்லிம்கள் மட்டும் இச்சட்டப்படி குடிஉரிமை கோர முடியாது.

காரணம், இவர்கள் சிறுபான்மையினரைத் துன்புறுத்திய பெரும்பான்மை இஸ்லாமியரைச் சேர்ந் தவர்கள் என்பது கவனத்தில் கொள்ளப்படுகிறது.

இந்தியாவில் குடிஉரிமைச் சட்டம் அளிக்கப் பட்டதைப் போல பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் முஸ்லீம் நாடுகளிலும் இந்த 70 ஆண்டுகளில் மதச் சிறுபான்மையினர்களுக்குக் குடிஉரிமை தந்தார்களா? தந்திருக்கிற இந்தியா விடம் தவறு காண்பவர்கள், அங்கு ஏன் தர வில்லை என்பதைச் சிந்திக்க வேண்டும்.

வடகிழக்கு மாநிலங்களில் குடிஉரிமைச் சட்டம் அமலாக்கப்பட்டால், பி.ஜே.பி.க்கு ஆதரவு ஏற்பட்டுவிடுமோ என்ற காழ்ப்புணர்வினால், எதிர்க் கட்சித் தலைவர்கள் "இந்த மசோதா "நமது அரசியல் சாசனத்தையே உடைத்துவிட்டது" என் றும், "இந்தியாவின் ஆன்மாவையே காயப்படுத்தி விட்டது" என்றும், "மதச்சார்பின்மைக் (Secularism) கோட்பாட்டிற்கே மரணஅடி கொடுத்துள்ளது" என் றும் கூறி பொதுமக்களையும், மாணவர்களையும் இவர்கள் தூண்டிவிடுகின்றனர்.

அயோத்தி வழக்கில் வெளியான தீர்ப்பால் கலவரம் வெடிக்கும் எனக் காத்திருந்தவர்கள் ஏமாந்தனர். முத்தலாக் சட்டத்தை ஒழித்ததை எதிர்த்து ஆதரவு திரட்ட முடியாமல் விரக்தி யடைந்துவிட்டார்கள். காஷ்மீரின் 370–ஆவது சிறப்பு அந்தஸ்தை ரத்துச் செய்ததைப் பாகிஸ் தான் பிரதமர் இம்ரான்கான் குரலில் எதி



ரொலித்துப் பேசி வருகிற இவர்கள், இப்போது குடிஉரிமைச் சட்டத்தைக் குறைகூறி மக்களைத் தூண்டிவிடுகின்றனர்.

இவர்களின் வலுவான வாதம், குடிஉரிமைச் சட்டப்படி மத ரீதியில் கிறிஸ்தவர்களுக்கும், சீக் கியர்களுக்கும் பௌத்தர்களுக்கும் குடிஉரிமை தரப்படும்போது, முஸ்லிம்களுக்கு மட்டும் தரப்பட வில்லையே ஏன் என்பதுதான்.

பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ் தான் ஆகிய மூன்று நாடுகளில் உள்ள இஸ்லா மியப் பெரும்பான்மையினரால் சிறுபான்மை மதத்தார் துன்புறுத்தப்பட்டதால்தான், அங்கிருந்து உயிர் பிழைப்பதற்காகப் பக்கத்தில் உள்ள இந்தி யாவுக்குள் அவர்கள் தஞ்சமடைந்தார்கள்.

இவ்வாறு, துன்புறுத்தல்களுக்கு உள்ளானவர்களைத்தான் மனிதாபிமானப்படி இந்தியா அரவணைத்தது. பாதிக்கப்பட்டவர்களுக்கும் குடி உரிமை தரச் சட்டம் நிறைவேற்றியுள்ளது. அதே சமயம், அவர்களைத் துன்புறுத்திய மெஜாரிட்டி முஸ்லிம்களுக்கு இக்குடி உரிமையைத் தர வேண்டியது அவசியமில்லை என்றும் கருதுகிறது.

அப்படியானால், மியான்மரில் துன்புறுத்தப்பட்ட ரோகிங்யா முஸ்லிம்கள் சிறுபான்மையினர் தானே. அம்முஸ்லிம்களுக்கு ஏன் இந்தியாவில் குடிஉரிமை தரப்படவில்லை என்று தர்க்க ரீதியாகக் கேள்வி கேட்கிறார்கள். ரோகிங்யா முஸ்லிம்கள் சிறுபான்மையினராக இருந்தாலும், மியான்மர் நாட்டின் குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் பூர்வ குடிகள் அவர்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ரோகிங்யா முஸ்லிம்களுக்கு உரிய குடிஉரிமையை மியான்மர் அரசு தரத்தான் வேண்டுமென உலக நாடுகளே வலியுறுத்தி வருகின்றன.

இதேபோல, இலங்கைத் தமிழர்களுக்கு இந்தச் சட்டம் குடியுரிமை தரவில்லையே என்றும் கேட்கப்படுகிறது.

ஈழத்தமிழர்கள் இலங்கையின் சிங்களவருக்குச் சமமான உரிமையோடு வாழ்ந்தவர்கள். இலங்கையின் பூர்வ குடிகள். சிங்களப் பேரினவாதத்தால் ஈழத் தமிழர்கள் சிதறிப் போனதற்குக் காரணமே, இலங்கைக்கு இந்தியா செய்த ராணுவ உதவிகளால்தான். அதனால்தான் இலங்கை வெற்றி பெற்றது என்பது ரகசியம் அல்ல.

அப்படி இந்தியா உதவி செய்யாமல் போயிருந்தால், சிங்கள ராணுவத்திடமிருந்து விடுதலைப் புலிகள் ஈழத்தை விடுதலை செய்திருப்பார்கள் என்பது நிச்சயம்.

ஜெர்மனி, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா முதலிய பிற நாடுகளிலும் சிதறிக் கிடக்கின்ற ஈழ அகதிகள் அந்நாடுகளில் குடியுரிமை கோர முடியாதபோது இந்தியாவில் மட்டும் எப்படிக் கேட்க முடியும்? என்கின்றனர்.

ஆப்கானிஸ்தானத்தில் தலிபான்கள் கையில் ஆட்சி இருந்தபோது, கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தியதால் நாட்டை விட்டுக் கிறிஸ்தவர்கள் வெளியேற வேண்டியதாகியது.

இந்தியாவில் இன்றைய நாள் கணக்குப்படி 18 கோடி முஸ்லிம்கள் உள்ளனர். அவர்களுக்கு இப்புதிய குடிஉரிமைச் சட்டத்தினால் எவ்விதப் பாதகமும் இல்லை.

வடகிழக்கு மாநிலங்களுக்குள் ஊடுருவிய சில லட்சம் முஸ்லிம்களுக்குத்தான் புதிய குடியுரிமைச் சட்ட அங்கீகாரம் இல்லை. அவர்களை அவர்களின் இஸ்லாமியத் தாய்நாடுகள்தான் அரவணைக்கக் கடமைப்பட்டுள்ளன. இந்தியா இங்கே முஸ்லிம்களுக்குக் குடிஉரிமையை மறுத்தால்தான் அவர்கள் அதை அங்குபோய்க் கோரிப் பெற முடியும். ஒரு வகையில், இது முஸ்லிம்களை அவர்களின் தாய்நாடுகளோடு மீட்டடையச் செய்யும் நடவடிக்கையாகும்.

அரசியல் சாசனத்தை உருவாக்கிய மேதைகள், மதத்தைக் காரணம் காட்டி, மக்களைப் பிரித்துப் பார்க்கக்கூடாது என்று கூறியுள்ளதை தங்களுக்குச் சாதகமாக எதிர்க்கட்சியினர் பேசுகிறார்கள். பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் ஆட்சிகளுக்கு ஒரே மதம்தான். அது இஸ்லாம். இந்தியாவில் அப்படி இல்லை. எல்லா மதங்களும் இங்கு சமம். அதனால் ஒரே ஒரு மதத்துக்கு ஆதரவாக மத்திய, மாநில அரசுகள் செயல்படாது. இந்த மகத்தான நோக்கத்தைத்தான் இந்தியா தெரிவித்துள்ளது.

மதச் சார்பில்லாத செக்யூலர் தேசம் என்று சொல்வது மதத்தை மலினமாகக் கருதியல்ல, மேன்மையாகக் கருதியே என்பதை நமது பகுத்தறிவுவாதிகளும், சிறுபான்மைவாதிகளும், செக்யூலர்வாதிகளும் புரிந்து கொள்ள வேண்டும். மதச்சார்பின்மையில் அரசியல் ஆதாயம் தேடுவது அநாகரிகமானது.

சீன அதிபர் ஜின்பிங்கின் இந்தியா வருகை, பாகிஸ்தானைத் தனிமைப்படுத்திய மோடியின் ராஜதந்திரம். லஞ்சமில்லாத மத்திய ஆட்சி போன்றவை பற்றி எல்லாம் பேசாத இவர்கள், ஏதாவது ஒரு பிரச்சனையை ஊடகங்கள் வழியாக ஊதிப் பெரிதாக்கி, மத்திய ஆட்சிக்குப் பின்னடைவை ஏற்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியை, எதிர்க்கட்சிக்காரர்கள் கலைப்பதற்கு முயற்சிப்பது ஜனநாயகம் ஆகாது.

வாசகர்களாகிய நீங்கள் குறையற்ற இக்குடி உரிமைச் சட்டம் பற்றி என்ன எண்ணுகிறீர்களோ, அதனை எழுதுங்கள் ஜனவரி 15–க்குள்.

– பி.சி.

கட்டுரை

சமய நல்லிணக்கம் சாத்தியமே!



பேரா. பெரோஸ்கான்

காசி பனாரஸ் ஹிந்து பல்கலைக்கழகம் – அதன் பெயருக்கு ஏற்ப அந்தப் பல்கலைக் கழகத்தில் சமஸ்கிருதம் கற்பிற்கும் ஆசிரியர்கள் இருப்பதைப் போல, உருது கற்பிக்கும் ஆசிரியர் களும் இருக்கிறார்கள்.

சமஸ்கிருதப் பேராசிரியர்கள் அநேகமாக சர்மாக்களாக இருப்பார்கள். உருதுப் பேராசிரியர் களோ, சாகேப்களாக இருப்பார்கள். ஆனால், பனாரஸ் ஹிந்து பல்கலைக்கழகத்தில் வியப்புக் குரிய வித்தியாசமாக ஒரு முஸ்லீம் சமஸ்கிருதப் பேராசிரியராகவும், ஒரு ஹிந்து உருதுப் பேராசிரிய ராகவும் திகழ்ந்ததுதான் அந்த வியப்பு.

பனாரஸ் பல்கலைக்கழகத்தின் சமஸ்கிருதத் துறை கடுமையான போராட்டத்தைச் சந்தித்தது. காரணம், அந்தத் துறையில் ஒரு முஸ்லீம் பேராசி ரியர் இடம்பெற்றதால். அவர் பெயர் பெரோஸ் கான்.

இப்பல்கலைக்கழகத்தில் நடந்த ஆசிரியர் தேர்வுப் போட்டியில் 8 பேராசிரியர்கள் வேலைக்கு மனுச் செய்திருந்தார்கள். அவர்களில் பெரோஸ் கானும் ஒருவர். தேர்வுப் போட்டியில் பெரோஸ் கான்தான் முதலிடத்தைப் பிடித்தார். அதனால் பனாரஸ் ஹிந்து பல்கலைக்கழக நிர்வாகம் பெரோஸ்கானை சமஸ்கிருதத் துறைப் பேராசிரியர் பணிக்கு நியமித்தது.

இதனைப் பற்றி முன்னாள் முதல்வர் மாயாவதி குறிப்பிடுகையில், ‘‘பனாரஸ் ஹிந்து பல்கலைக்கழகத்தில் திறமைக்குத்தான் முதலிடம் என்பதைக் காட்டுவதற்காகவே, மதம் கடந்து சமஸ்கிருதத் துறைப் பேராசிரியராக பெரோஸ் கானை நியமித்தது சரியானது, நியாயமானது’’ என்றார்.

முஸ்லீம் ஒருவர் சமஸ்கிருதத்தைப் போதிப்பதா என்று பாரத வித்யார்த்தி பரிஷத் மாணவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அவர்களுடைய கோரிக்கை, சமஸ்கிருதப் பாடங் களை ஒரு ஹிந்துப் பேராசிரியர்தான் போதிக்க வேண்டுமே தவிர, ஒரு முஸ்லீம் பேராசிரியர் அல்ல என்பதாகும்.

பனாரஸ் பல்கலைக்கழக நிர்வாகமோ மாணவர்களின் கோரிக்கையை நிராகரித்து விட்டது. நிர்வாகத்தின் ஆதரவில் பெரோஸ்கான்

பல்கலைக்கழகத்தில் வகுப்புக்குச் சென்று சமஸ்கிருதப் பாடத்தைப் போதிக்கத் தொடங்கினார்.

மாணவர்களோ ஹிந்துக்கள். முஸ்லீம்கள் அல்ல. பாடம் போதிப்பவரோ முஸ்லீம். சர்மா அல்ல. அதனால் மாணவர்களுக்கிடையில் ஒரு விதமான மனக்குமுறல்கள். சகித்துக்கொள்ள முடியவில்லை. சலசலப்பு. அதனால் போராட்டத்தைத் தொடங்கினார்கள்.

பேராசிரியர் பெரோஸ்கானைத் துறை மாற்றம் செய்ய வேண்டும் என்று மாணவர்கள் போராடினார்கள். நிர்வாகமோ ஹிந்து நிர்வாகமாக இருந்தாலும் பேராசிரியர் பெரோஸ்கானுக்கு ஆதரவாக இருந்தது மெச்சத்தக்கது. நாடு முழுவதும் தெரிந்துகொள்ளப்பட வேண்டிய நல்ல செய்தி. சமய நல்லிணக்கத்திற்கு இதைவிட வேறு எதுவும் அவசியமில்லை.

இத்தகைய கலவரச் சூழ்நிலையில் ராஜஸ்தான் முதல்வர் அசோக் கெலாட், உ.பி. முதல்வர் யோகி ஆதித்தியநாத்தைத் தொடர்பு கொண்டு பேசினார். ‘‘சமஸ்கிருத மொழியில் புலமைவாய்ந்த ஒருவரை சமஸ்கிருதம் கற்பிற்க நியமிப்பதுதான் சிறப்பானது என்றும், அவ்வாறு கற்பிப்பவர் சமஸ்கிருத மொழியைத் திறமையோடு கற்று வைத்திருக்கிறார் என்பதுதான் முக்கியமே தவிர, அவர் ஹிந்துவா, முஸ்லீமா, சீக்கியரா, கிறிஸ்தவரா என்று பார்க்க வேண்டிய அவசியமில்லை’’ என்றார்.

‘‘மாணவர்களுக்குச் சரியான பாடத்தை ஒரு சாகேப்பாலும் தரமுடியும் என்பதை இந்த நியமனம் நிரூபிக்கிறது. இது ஹிந்து மதத்திற்கும் பெருமை. முஸ்லீம் சகமூகத்திற்கும் பெருமை’’ என்று கூறியதோடு ‘‘பி.ஜே.பி. கட்சியும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பும் இதை வரவேற்கவும் வேண்டும்’’ என்றார்.

அசோக் கெலாட் கருத்திற்கு யோகி ஆதித்தியநாத் என்ன பதில் சொன்னார் என்று தெரியவில்லை. இந்த மாணவர் போராட்டத்தால் பனாரஸ் ஹிந்து பல்கலைக்கழகம் மூடப்பட்டு, நவம்பர் 14–ஆம் தேதி திறக்கப்பட்டது.

சமஸ்கிருதப் பேராசிரியராக நியமிக்கப்பட்ட பெரோஸ்கான் இதே பல்கலைக்கழகத்தில் ஏற்கனவே இலக்கியத் துறையில் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். மீண்டும் பல்கலைக்கழகம் திறக்கப்பட்ட பிறகு பனாரஸ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ராஜேஷ் பட்நாகரும், வேறு சில பேராசிரியர்களும் இணைந்து போராட்ட மாணவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தினர். ஆனால், பேச்சுவார்த்தை பலனளிக்கவில்லை.

அதனால் பெரோஸ்கான் சமஸ்கிருதப் பேராசிரியர் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு, மீண்டும் இலக்கியத்துறைப் பணிக்கு மாறுதல் செய்யப்பட்டார்.

இதனைத் தெரிவித்தவர் பல்கலைக்கழகத்தின் இலக்கியத் துறையில் பணியாற்றும் தலித் பேராசிரியர் சாந்திலால் சால்வி என்பவர். அவர் மீதும் மாணவர் குழு ஒன்று அவர் பெரோஸ்கானை ஆதரித்ததற்காகத் தாக்குதல் நடத்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

பெரோஸ்கானுக்கு எதிராகப் பேராசிரியர்கள் சுபம் திவாரி, கௌசலேந்திர பாண்டே, முனிஷ் மிஸ்ரா ஆகியோர் பேசியதும் குறிப்பிடத்தக்கது.

இவர்கள் மூவர் மீதும் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. அதேசமயம் இந்தப் புகாரைத் தந்தவர் தாழ்த்தப்பட்ட, பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர் என்ற அடிப்படையிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்திற்கு நேர்எதிராக நிகழ்ந்த இன்னொரு விசித்திரமான, வித்தியாசமான, விநோதமான சம்பவமும் நமது பதிவிற்குரியதாகும்.

ரிஷிகுமார் சர்மா என்ற இளைஞர். மேற்கு வங்காளத்தில் உத்தர் தினாஜ்பூர் மாவட்டத்தில் பிறந்தவர். அவர் பூர்வீகத்தில் பீகாரி. சர்மாவுடைய குடும்பத்தார் போஜ்புரி, ஹிந்தி பேசக் கூடியவர்கள்.

மேற்கு வங்கத்தில் ஆர்.கே. சர்மா வசித்த இடத்திலிருந்து பள்ளிக்கூடம் வெகு தொலைவில் இருந்ததால், இரும்புக்கடை வைத்து நடத்திவந்த சர்மாவின் தகப்பனார் தனது வீட்டிற்கு அருகிலுள்ள மதரஸாப் பள்ளிக்கு சர்மாவை அனுப்பி, அங்கு தன் மகன் ஹிந்தி படிக்கட்டும் என்று விரும்பினார்.

அவருடைய வகுப்பு ஆசிரியரோ சர்மாவைப் பார்த்து, ‘‘உனக்கு ஏற்கனவே ஹிந்தி தெரியும். அதனைத் தொடர்ந்து இந்த மதரஸாப் பள்ளியில் ஹிந்தியுடன் கூடவே நீ உருதும் படித்துக் கொள்

ளலாமே'' என்று கேட்டிருக்கிறார். அதனால் பாரசீக உருது படிக்க ஆர்.கே. சர்மா விரும்பினான்.

புகழ்பெற்ற உமர்கயாம் என்ற கவிஞன் தனது கவிதைகளை பாரசீக உருது மொழியில்தான் எழுதினார். அவருடைய உருதுக் கவிதைகளை ஆங்கிலத்தில் எட்வர்டு பிஜ்ரால்டு என்பவர் மொழிபெயர்த்து வெளியிட்ட பிறகுதான், உமர் கயாம் உலகக் கவிஞர்களில் ஒருவராகச் சிறப்புப் பெற்றார்.

மாணவன் சர்மா ஒருவேளை உமர்கயாமின் கவிதைகளை ஆங்கிலத்தில்கூடப் படித்திருக்க லாம். அதனால் சர்மாவுக்கு உருது மீது ஈர்ப்பு ஏற்பட்டிருக்கலாம்.

உமர்கயாமின் புகழ்பெற்ற உருதுமொழிக் கவிதையை,

"வெயிற்கேற்ற நிழலுண்டு / வீசும்
தென்றல் காற்றுண்டு
கையில் கம்பன் கவியுண்டு / கலசம்
நிறைய அமுதுண்டு..."

என்று கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை தமிழில் மொழிபெயர்த்துப் பாடியுள்ளார்.

இத்தகைய சிறப்புவாய்ந்த உருதுமொழியை ஆர்.கே. சர்மா என்ற மாணவன் படிக்க வேண்டு மென்று அவருடைய வகுப்பாசிரியர் அறிவுறுத்தி யதில் தவறில்லை. அதை ஆமோதித்த சர்மா, மிகுந்த ஆர்வத்தோடும் படிக்கத் தொடங்கினான்.

அதேசமயத்தில் உருதுமொழியைப் படிப்ப தென்றால், அதை முஸ்லீம்கள்தான் படிப்பார்கள் என்பது ஒரு தவறான கருத்தாகும். அதனால் சர்மாவின் தகப்பனார் அவனை உருதுமொழி படிக்க ஆட்சேபணை செய்யவில்லை.

உருதுமொழியை மட்டுமல்ல, எந்த மொழியை யும் ஒரு மதத்தோடு சம்பந்தப்படுத்திப் பார்க்க வேண்டிய அவசியமில்லை. எந்தவொரு மொழி யையும் அது ஒரு மொழி என்பதற்காகவே படிக்க லாம். உருதுமொழிகூட ஹிந்துஸ்தானி என்ற பெயரில் அது இந்திய மொழியாகவும் இருந்தது.

மகாத்மா காந்தி ஹிந்து – முஸ்லீம் ஒற்று மையை உருவாக்குவதற்குக் கையாண்ட பலவித மான முயற்சிகளில் ஒரு முயற்சி ''ஈஸ்வர அல்லா தேரேநாம், சப்கோ சண்மதி தேபகவான்'' என்ற பாடல் வரியாகும். அதாவது ஈஸ்வரனும் அல்லா வும் ஒன்றுதான் என்பதாகும்.



ஆர்.கே. சர்மா

இதேபோல அடுத்த முயற்சி, ஹிந்து – முஸ் லீம் ஒற்றுமையை உருவாக்குவதற்காக ஹிந்தியும் உருதும் கலந்த ஹிந்துஸ்தானி மொழியை காந்திஜி ஆதரித்தார் என்பது நினைவுகூரத் தக்கது.

பேராசிரியரான பிறகு உருது மொழியைக் கற்க முன்வந்த ஆர்.கே. சர்மா, இந்த உருது மொழியை முஸ்லீம் அல்லாத அறிஞர்கள் பலரும் போதித்திருக்கிறார்கள் என்பதையும் அறிந்து வைத்திருந்தார்.


பனாரஸ் ஹிந்து பல்கலைக்கழகத்தை நிறுவிய மதன்மோகன் மாளவியா அவர்கள், இதே பனாரஸ் பல்கலைக்கழகத்தில் உருதுமொழியை யும் ஒரு பாடமாகக் கற்பிக்க வேண்டுமென்று பதிவு செய்துள்ளார். அதற்காகவே 1916–இல் பாரசீக அரபிக் மொழித் துறையை இந்தப் பல்கலைக்கழத்தில் அவரே உருவாக்கியுள்ளார்.

அதன் துறைத் தலைவராக பயஸ் பனார்ஷி என்பவரை அப்போது நியமித்தார். 1920–இல் மகேஷ்பிரசாத் என்ற பேராசிரியர் உருது மொழி யைக் கற்பிக்கும் பேராசிரியராக முப்பதாண்டுகள் அப்பணியைச் செய்துள்ளார்.

உருதுமொழித் துறையின் தலைவர்கள் பலர் ஹிந்துக்களாகவே இருந்திருக்கிறார்கள். அம்ரித் லால் இஸ்ரத், குகும்சந்த் நய்யார் அவர்களில் சிலர். இந்தத் தகவல்களை எல்லாம் ஆர்.கே. சர்மா நினைவுகூர்கிறார்.

அதே துறையில் இவர் தனது நியமனத்தைப் பெற்றுள்ளார். உருதுமொழிப் பேராசிரியராக ஒரு ஹிந்து, பனாரஸ் ஹிந்து பல்கலைக்கழகத்தில் பணி செய்வது சமயநல்லிணக்கத்திற்குச் சரியான எடுத்துக்காட்டாகும்.

– ந.நி.



LED, கலர் டி.வி, ரெஃப்ரிஜிரேட்டர், ஏர்கண்டிஷ்னர்,
வாஷிங் மெஷின், மற்றும் அனைத்து தரமான வீட்டு உபயோக
பொருட்களை குறைந்த விலையில் வாங்க சிறந்த இடம்.
Easy Finance Options BAJAJ Finance
Exchange offer
Gift Coupons Available
*Free gift with every purchase
*Free delivery with in city Limits
Open on Sundays
வந்து பாருங்கள்! வாங்கி மகிழுங்கள்!!
NM
LG
SAMSUNG
SONY
PHILIPS
VIDEOCON
ONIDA
Godrej
Whirlpool
SIEMENS
IFB
Prestige
ELGI ULTRA
Preethi
V-GUARD
BOSCH
Micromax nothing like anything
VOLTAS LIMITED
Butterfly
TATA Sky
CG Crompton Greaves
USHA
HAVELLS
BPL EMERGENCY LIGHT
Preethi INDUCTION COOK TOP
EUREKA FORBES Your friend for life
CASCADE
VENUS WATER HEATER
*For purchase above RS.8000/- condition apply
நா. மகாலிங்கம் & கம்பெனி
68, Dr, Nanjappa Road, Near Central Bus Stand
Coimbatore - 641 018.
Ph: 2239834 / 2239841 / 2239803 / 2239811

அயோத்தித் தீர்ப்புக்கு சீராய்வு அவசியமா?

விவாதக் கடிதங்களில் சில... சில... சில...

அயோத்தி வழக்கில் ஐவர் வழங்கிய தீர்ப்பு நியாயமானதே. மெக்காவின் புனிதம்போல் ராமஜென்ம பூமியும் புனிதமானதே. மெக்கா உருவாவதற்கு முன்பே பல நூற்றாண்டுக் காலமாக இருந்தது ராமஜென்மபூமி. இதை யாரும் மறுக்க முடியாது. இந்த ஐந்து நீதிபதிகளும் பஞ்சேந்திரியங்களாகச் செயல்பட்டுள்ளனர். கண், காது, மூக்கு, வாய், தொடுதல் எல்லா நிலையிலும் சீர்தூக்கிப் பார்த்து வழங்கிய நீதி பாராட்டத்தக்கது.

– **தி. இராதாகிருட்டிணன்,** அரூர்.

இராமர் இருந்த இடத்தில்தான் பாபர் மசூதி அமைந்தது. இடித்த இரு பிரிவினரும் வன்முறையாளர்கள் என்ற கருத்தில் மாற்றமில்லை. அதற்கு அழகான மாற்றுச் சொன்னார்கள் நீதிபதிகள். எரிகிற கொள்ளியில் பிடுங்கலாம் என்ற எண்ணத்தில் இருந்தவர்கள் தோற்றனர். புரிகிற விதத்தில் தர்ம நுணுக்கம் போதித்த துலாக் கோலுக்கு நன்றி!

– **சீத்தலைச்சாத்தன்,** திருப்பத்தூர்.

1528–இல் தொடங்கி 500 ஆண்டுகளாக நடந்து வரும் ராமர்கோவில் – பாபர் மசூதிப் பிரச்சனை என்பது சட்டென ஒரே ஒரு தீர்ப்பின் மூலம் முடிவுக்கு வந்துவிடாது. இந்து – முஸ்லிம் ஒற்றுமை வராவிட்டாலும், ஒருவரைச் சகித்துக் கொள்ளுமளவுக்காவது சமாதானமாக வாழ்வதற்குச் சிறுபான்மை முஸ்லிம் சகோதரர்கள் இத்தீர்ப்பை வரவேற்க வேண்டும். இந்தத் தீர்ப்பு சமுதாய நல்லிணக்கத்திற்கு நிரந்தரத் தீர்வாக அமையும், அமைய வேண்டும் என்பதே பெருவாரியான இந்துக்கள் – முஸ்லிம் மக்களின் விருப்பமும், எதிர்பார்ப்பும்.

கோத்ரா ரயில் எரிப்பு, குஜராத் கலவரங்கள் இந்திய சமூக வரலாற்றில் – சுதந்திர இந்தியாவில் நிகழ்ந்துவிட்ட கொடுங்கனவு. அதுபோன்ற தவறுகளை, பிழைகளை இருபெரும் சமூகங்களும் மறக்கவும், புரிந்துகொள்ளவும், திருத்திக் கொள்ளவும், ஒன்றுபடவும் இந்தத் தீர்ப்பு நீண்டகாலப் பயனளிக்கும் என்றே நம்புவோம்.

– **ரவி வாமனன்,** பொள்ளாச்சி.

500 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியா மீது பாபர் படையெடுத்து வந்தபோது அவரின் தளபதி மீர்பாகியால் இடிக்கப்பட்டதுதான் இராமர் கோவில் என்பது திட்டவட்டமாகத் தெரிகிறது. அப்படியானால், அத்துமீறிக் கட்டப்பட்டதுதான் மசூதி என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. புராதனக் காலத்திலிருந்து இராமரை வழிபட்டு வந்த இடம் அது. அந்த இடம் இராமர் கோயிலுக்குத்தான் உரிமை உடையது. அதைத்தான் உச்சநீதிமன்றமும் தீர்ப்பாக வழங்கியுள்ளது. மசூதி கட்டிக்கொள்ள ஐந்து ஏக்கர் நிலம் வழங்க வேண்டும் என்றும் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. இந்துக்களின் மரபு வழி இடத்திற்கு இசுலாமியர்கள் போராடாமல், சீராய்விற்குச் செல்லா

மல் புதிய இடத்தில் விருப்பம் போல் மசூதி கட்டிக் கொள்வதுதான் அனைவருக்கும் நல்லது.

– **புலவர் கருமலைத் தமிழாழன்,**
ஒசூர்.

சுமார் 491 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட மசூதி, 2019–ஆம் ஆண்டில் விடிவுகாலம், இறுதி முடிவுக்கு வரப்பெற்றது மிக்க மகிழ்ச்சியே. மனிதர்களால் உருவாக்கப்பட்ட நீதிமன்றமே தீர்ப்பு அளிப்பதை ஏற்றுக்கொள்ள இயலாதது, சிந்தனை செய்ய வேண்டியது. அயோத்தி இடத்தை அரசே எடுத்துக்கொண்டு, மக்கள் வறுமையின் பிடியிலிருந்து மீளத் தேவையான அமைப்புகள், சட்டங்கள் கொண்ட அலுவலகங்கள் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். மீண்டும் வீணாகக் கோயில்களைக் கட்டுவது என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை.

– **லிங்கம் சின்னசாமி,** தாராபுரம்.

அயோத்தித் தீர்ப்புக்குச் சீராய்வு அவசியமில்லை. இது ஐந்து பேர் அந்த வழக்கை நன்கு படித்து, மிகத் தெளிவாகப் புரிந்து கொண்டு உணர்ந்து சொல்லப்பட்ட நல்ல தீர்ப்பு. இந்தத் தீர்ப்பு வெளிவருவதற்கு முன் தீர்ப்பு வந்தவுடன் என்ன கலவரம் நடக்கும் என்று பயந்தவர்களின் பயத்தைப் போக்கும்படி தீர்ப்பு வெளி வந்த பிறகு நாடு அமைதியாகவே இருந்தது. இந்த அமைதிக்கு மக்கள் இந்தத் தீர்ப்பை விரும்பி ஏற்கிறார்கள் என்றுதானே பொருள்! இப்படி அனைவரும் விரும்பும் இந்தத் தீர்ப்பை எதற்காகச் சீராய்வு செய்ய வேண்டும்?

– **உஷா முத்துராமன்,** மதுரை.

500 ஆண்டுகளுக்கு முன் கட்டி முடிக்கப்பட்ட மசூதியை இடித்தது எந்த விதத்திலும் நியாயமன்று. ராமர் கோவில் இருந்த இடத்தில்தான் மசூதி கட்டப்பட்டது என்பதற்கான ஆதாரத்தின் அடிப்படையில் நீதிமன்றத்தில் முறையிட்டு, அதன் மூலமாகத்தான் அவ்விடத்தை மீட்டிருக்க வேண்டும். மாறாக, வன்முறையில் ஈடுபட்டு மசூதியை இடித்துச் சேதப்படுத்தியதை ஏற்றுக்கொள்ள முடியாது. இப்படி ஒவ்வொருவரும் கட்டி முடிக்கப்பட்ட கட்டடத்தை இடித்துவிட்டு நிலத்தை மீட்க முயன்றால் சட்டம், ஒழுங்கு கேள்விக்குறியாகிவிடும். ஆகவே, இந்தத் தீர்ப்புக்குச் சீராய்வு மனு அவசியம்தான்.

– **உ.மு.ந. ராசன் கலாமணி,**
கோபிசெட்டிபாளையம்.

இந்த ஒரு தீர்ப்பே இந்தியாவில் நீதிமன்றங்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதற்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு. இப்போது எடுத்துள்ள முடிவை, ஏன் பிரச்சனை தொடங்கிய உடனே நீதிமன்றங்கள் செய்யவில்லை? இத்தனை வருடமாக நீதிமன்றத்தில் மழுப்பலாக விசாரணை நடத்திக் காலம் தாழ்த்தி வந்துள்ளனர் என்பது தெளிவாகிறது. சில வாரங்கள், சில மாதங்களில் முடிக்க வேண்டிய வழக்குகளைப் பல வருடங்கள் தீர்ப்பே இல்லாமல் காலம் கடத்துவது பிரச்சனையின் தீவிரத்தை அதிகரிக்கும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

– **சி. பிரகாஷ்,** முத்தரசநல்லூர்.

இந்திய மக்களின் ஒற்றுமைக்கே உலை வைத்துவிடக்கூடிய அயோத்திப் பிரச்சனை வழக்கில் நீதி வழங்கும் மன்றங்களின் உச்சமாக இருக்கும் உச்ச நீதிமன்றமானது, எடுத்தேன், கவிழ்த்தேன் என்ற ரீதியில் தீர்ப்பினை வழங்கிவிடாது. இரு தரப்பாரின் சாட்சிகள், ஆவணங்கள், வாதங்கள் ஆகியவற்றின் அடிப்படையில்தான் திடமான, தீர்க்கமான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்தியத்

திருநாட்டின் ஒற்றுமையை வலுப்படுத்துவதற்கும், மதநல்லிணக்கத்தைப் பேணிக் காப்பதற்கும் உச்சநீதிமன்றத் தீர்ப்பை முழுமையாக, மனமார ஏற்றுக்கொள்வதே இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் விவேகமாக அமையும். எனவே, சீராய்வு அவசியமில்லை.

– **மேலை. தமிழ்க்குமரன்,** முத்தரசநல்லூர்.

அந்நியர் ஆட்சியில் பாரதத்தின் பண்பாடு, கலாச்சாரத்தைச் சீரழித்தது அயோத்தி உட்பட இன்னும் மிகப் பல. இந்தத் தீர்ப்பை மத நல்லிணக்கம் மற்றும் அமைதியை விரும்புவோர் வரவேற்பர். அடுத்தவர் வீட்டில் இழவு நிகழ்ந்தால் அரசியல் செய்யும் அந்நியக் கைக்கூலிகளான ஓவாசி, சற்குணம், வீரமணி, திருமாவளவன், தி.மு.க. கும்பலுக்கு ஏமாற்றமே!

– **மு. சுரேஷ்குமார்,** நங்கைநல்லூர்.

அயோத்தி வழக்கில் உச்சநீதிமன்றத் தீர்ப்பை இந்துக்களும், முஸ்லிம்களும் ஏறறுக்கொண்டு அமைதி காத்து வருகின்றனர். இந்நிலையில், அகில இந்திய முஸ்லிம் தனிநபர் சட்ட வாரியம் தீர்ப்புக்கு எதிராக மறு ஆய்வுக்கு மனுத்தாக்கல் செய்திருப்பது ஏற்புடையது அல்ல.

– **த. நாகராஜன்,** சிவகாசி.

அயோத்திப் பிரச்சனைக்கு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு மிக மிகத் தெளிவானது. இத்தீர்ப்பை எதிர்த்துச் சீராய்வு மனுச் செய்பவர்கள் ராமர் கோவில் இருந்த இடத்தின் மீதுதான் மீர்பாகி மசூதியைக் கட்டினான் என்பதையும், தொல்லியல் துறையின் ஆய்வையும் ஏற்கவில்லையென்பது தெளிவாகிறது. இதிலிருந்து என்ன தெரிகிறதென்றால், மதத் துவேஷத்தைத் தூண்டிவிட்டுத் தங்களையும், தங்கள் கட்சியையும் வளர்க்க நினைக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களின் அமைப்புக்களுக்குத் தடை போட வேண்டும்.

– **இரா. கல்யாணசுந்தரம்,** மதுரை.

பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் மீண்டும் பாபர் மசூதி கட்ட அனுமதித்து, ராமர் கோவிலை அயோத்தியில் வேறு இடத்தில் கட்டலாம் எனத் தீர்ப்பு வந்தால்தான், இந்துக்கள் சற்றுப் பெருந்தன்மையாக விட்டுக் கொடுத்தால்தான் நிரந்தர சமுதாய நல்லிணக்கம் ஏற்படும்.

– **அ. சம்பத்,** திருவரங்கம்.

அயோத்தி வழக்கில் உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஐவர் அமர்வு ஒருமித்த கருத்தில் இரு சாராருக்கும் (இந்து, முஸ்லிம்) பாதகம் இல்லாமல் நியாயமான தீர்ப்பை வழங்கி அமைதியையும், நிம்மதியையும் அளித்துள்ளது. மத ஒற்றுமையை உறுதி செய்யும் தீர்ப்பு இது. சேதாரமில்லாத தீர்ப்பை வழங்கிய நீதிபதிகளை எவ்வளவு பாராட்டினாலும் தகும். ஆக, சீராய்வுக்கு அவசியமில்லை.

– **மு. கணபதி,** பெருந்துறை.

அயோத்திப் பிரச்சனைக்குச் சீராய்வு அவசியமில்லை. சுதந்திரம் அடைந்து இந்த 72 ஆண்டுகளில் இந்தியாவில் உச்சநீதிமன்றம் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய் தலைமையில் ஐவர் அமர்வில் ஒருவருடைய தீர்ப்புக்கூட மாறுபாடு இல்லாமல் புதிய கோணத்தில் அலசி, ஆராய்ந்து சட்டத்தின் முன் எல்லோரும் சமம் என்ற கோட்பாட்டில், வேற்றுமையில் ஒற்றுமையை நிலைநாட்டிய தீர்ப்பு. ஒரு தாய் வயிற்றில் பிறந்த மக்கள் எல்லோரும் ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்ற எண்ணத்திலும் சமூக நல்லணக்கம்

பேணப்பட வேண்டும் என்ற கருத்துடனும் வழங்கப் பட்ட சரியான தீர்ப்பு.

– முசிபுசி. முத்துக்குமார்,
திருவில்லிப்புத்தூர்.

இராமர் கோவில், மசூதி இரண்டையும் அதே இடத்தில் நிர்மாணம் செய்ய முயற்சிப்பது சரியாகப் படவில்லை. தொல்லை தந்த அக்களத்தே, அருங்காட்சியகத்தை அரசு அமைத்தால், அனைத்து வரலாற்று ஆவணங்களும் அங்கே இடம் பெறும். எவரும் காண இயலும். அரசுக்கும் வருமானம் கிட்டும். பிரச்சனைக்கு அப்பொழுதுதான் முற்றுப் புள்ளி கிட்டும்.

– எஸ்.ஜி. இசட்கான்,
திருப்பூர்.

சமூக நல்லிணக்கம் பேணப்பட வேண்டுமெனில், உச்சநீதிமன்றத் தீர்ப்பை ஏற்று, அயோத்திப் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று அறிஞர்கள் பலர் அறிவுறுத்தியிருப்பது வரவேற்கத் தக்கதே. எப்படியாயினும், மதத்தின் நோக்கம் மனிதனை மேம்படுத்தி உயர்த்துவதே என்ற நோக்கத்தோடு இசுலாமிய – இந்துத் தோழர்கள் செயல்பட வேண்டும்.

– நவீன்குமார், நடுவிக்கோட்டை.

வரப்பெற்றோம்

'பவானி போற்றுதும்' : ஆசிரியர் : முனைவர் க.வீ வேத நாயகம். வெளியீடு : சுந்தரவடிவு பதிப்பகம், மெயின்ரோடு, கணக்கம்பாளையம், ஈரோடு – 638 505. செல் : 9443412819. பக். 184, விலை ரூ. 100/–

கொங்கு மண்டலத்தில் உற்பத்தியாகும் பவானி ஆறு; அது செல்லும் வழித்தடங்கள்; அதன் கரையில் அமைந்துள்ள ஊர்கள்; அங்குள்ள மனிதகுலப் பண்பாடு, கலாச்சாரம்; அது காவிரியோடு கலக்கும் வரையிலான நிகழ்வுகளை அழகாக எடுத்துச் சொல்லும் நூல்.

'பூமிக்கான பிரார்த்தனையும் சீற்றமும்' : ஆசிரியர் : ஈரோடு ஜீவா, நாலந்தா மருத்துவமனை, 45, கலைமகள் ரோடு, ஈரோடு – 638001. செல் : 9442272773. பக். 54. விலை ரூ. 30/–

பருவநிலை மாற்றத்தால் பூமி சூடாகி, நீரில் மூழ்கி அழியும் நிலைக்குச் சென்றுவிடும் என்பதை அறிந்து, அதைத் தடுப்பதற்கான விழிப்புணர்வுச் செய்திகள் அடங்கிய நூல்.

'ஓ அன்பே, இனிய அன்பே!' : ஆசிரியர் : ஸ்ரீ கிருஷ்ணன், வெளியீடு : ரோசன் பிரஸ், எண். 6 (38), நிகோலஸ் ரோடு, சேத்துப்பட்டு, சென்னை – 31. பக். 58, விலை ரூ. 99.

ஷேக்ஸ்பியர், ஜான் கீட்ஸ், ராபர்ட் பிராஸ்ட், வேர்ட்ஸ்வொர்த், ராபர்ட் பிரௌனிங், ஷெல்லி, வால்ட் விட்மன்... இப்படி இன்னும் புகழ்பெற்ற ஆங்கில மகாக் கவிஞர்கள் எழுதிய கவிதைகளின் தமிழ்த் தழுவல்கள் அடங்கிய தொகுப்பு.

'நிழற்படங்களும், நினைவுகளும்' : ஆசிரியர் : கே. ஜெகதீசன், வெளியீடு : நந்தினி பதிப்பகம், 644, 7–ஆவது வீதி நீட்சி, காந்திபுரம், கோவை – 12. செல் : 99422 32135, பக். 127, விலை ரூ. 80/–

நூலாசிரியர், கடந்த ஐம்பது ஆண்டுகளில் கலந்து கொண்ட பொது நிகழ்வுகள், சந்தித்த சான்றோர்கள், நிபுணர்கள், கலைஞர்கள், சிந்தனையாளர்கள் என அவர்களோடு கொண்ட தொடர்புகளைப் புகைப்படங்களோடு விவரித்துச் சொல்லும் நூல்.

'ஸ்ரீமத் பகவத்கீதையில் பகுத்தறிவு (பாகம் – 1)' : ஆசிரியர் : கேப்டன் எஸ்.பி. குட்டி, சரைவேதி இல்லம், 357, வெங்கிடசாமி தெரு, பொன்னப்ப நாடார் நகர், நாகர்கோவில் – 629004. பக். 134, நன்கொடை ரூ. 100/–

இந்து மதத்தின் புனித நூலாகக் கருதப்படும் 'பகவத் கீதை'யைத் தற்போதைய விஞ்ஞானத்துடன் ஒப்பிட்டு, எடுத்துக் காட்டுகளுடன் விளக்கப்பட்டிருக்கும் நூல்.

திருக்குறளைக் கொங்கணியில் மொழிபெயர்த்தவர்!

கோவா மாநிலத்தில் ஒரு கல்விமான் சென்ற 8–ஆம் தேதி தனது 84–வது வயதில் புற்றுநோயால் மரணமடைந்துவிட்டார். 'அமாங்கர்' என்று அவரைச் செல்லமாக கோவா


அமாங்கர்

கோவா திரும்பி, ஏறக்குறைய 20 ஆண்டுக் காலம் தந்தை நடத்தி வந்த உயர்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியராகச் செயல்பட்டு வந்தார். கோவா உயர்நிலைக் கல்வியின் கழகத்திற்குத் தலைவராக நீண்டநாள் இருந்தார்.

மக்கள் அழைப்பார்கள். இவருடைய இலக்கியப் பணி, கோவா மாநிலத்தின் மொழியான கொங்கணி மொழிக்கு வளம்சேர்த்த பணியாகும்.

கோவா கொங்கணி அகாடமியின் தலைவராக இருந்தவர். சீக்கியம், கிறிஸ்தவம், பௌத்தம், ஹிந்து சாஸ்திரங்களைக் கொங்கணியில் மொழிபெயர்த்து அந்த மொழிக்குச் சிறப்புச் சேர்த்தவர். அநேகமாக மறக்கப்பட்ட 'கிறிஸ்து புராணம்' என்ற 17–வது நூற்றாண்டுப் படைப்பின் 11 ஆயிரம் கவிதைகளை மொழிபெயர்த்துச் சிறப்புப் பெற்றார். இந்த மொழிபெயர்ப்புகளெல்லாம் கொங்கணியில் செய்யப்பட்டவை.

சிறந்த படைப்பாளியான தாங்கள், இவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கலாமே என்று கேட்டதற்கு, அவர் சொன்ன பதில், "என் தாய்மொழி கொங்கணிக்குச் செழிப்பை ஏற்படுத்த வேண்டும் என்றுதான் இவற்றைக் கொங்கணியில் மொழிபெயர்த்தேன். எனக்கு என் தாய்மொழிதான் முதலானது" என்றார்.

இதேபோல ஷேக்ஸ்பியரின் படைப்புகளையும் கொங்கணியில் மொழிபெயர்த்திருக்கிறார். இவருடைய தகப்பனார் ஒரு கல்விமான். மிகச் சிறந்த பள்ளியை நடத்தி வந்தார். 'ஜி.எஸ். அமாங்கர் வித்யாமந்திர்' என்பது அதன் பெயர்.

அமாங்கர் லண்ட னுக்குச் சென்று உயர் படிப்பை மேற்கொண்டிருந்த போது, அவருடைய தகப்பனார் மாரடைப்பால் மரணமடைந்தார். அதனால்

சாகித்ய அகாடமி விருது, பத்மஸ்ரீ விருது ஆகியவற்றைப் பெற்ற சிறப்புக்குரியவர். அவர் காங்கிரஸ் கட்சியில் தீவிர உறுப்பினராக இருந்தவர். அதனால் அரசியலிலும் அவருக்கு ஈடுபாடு இருந்தது. ஆனால், அவரை அரசியல்வாதி என்று அழைப்பதைவிட, சிறந்த கல்விமான் என்றே அவர் அழைக்கப்பட்டார். இவ்வளவு பின்புலத்தோடு அவரைப் பற்றி விவரிப்பதற்குக் காரணம் ஒன்று உண்டு.


அவருடைய சிறப்பான பணிகளில் மொழிபெயர்ப்புப் பணி முக்கியத்துவம் வாய்ந்தது. பௌத்த மதத்தின் வேதமாகிய 'தம்மபதம்', 'பகவத்கீதை', மராத்திய இலக்கியமாகிய 'ஞானேஸ்வரி', சீக்கிய சாஸ்திரமாகிய 'ஜபுஜி சாகேப்', 'பைபிள்', துக்காராமின் 'ஜாதகக் கதைகள்' முதலியவற்றை மொழிபெயர்த்தார்.

இந்த மொழிபெயர்ப்புகளில் சிறப்பாக இருந்த மொழிபெயர்ப்பு, அவர் திருக்குறளை மொழிபெயர்த்ததுதான்.

கோவா மாநிலத்தின் கொங்கணி மொழியில் திருக்குறளை மொழிபெயர்த்த கல்விமான் அமாங்கர் அவர்கள் தமிழ் மக்களின் போற்றுதலுக்குரியவராகிவிட்டார்.

இவ்வாறு கல்விமானாக, கொங்கணி மொழியை வளர்த்த அன்னையரில் ஒருவராக, மிகச்சிறந்த சிந்தனையாளராக வாழ்ந்த அமாங்கர் நமது மரியாதைக்குரியவர்.

– ந.நி.



அட்டைப்படக் கட்டுரை

கம்போடியா – அங்கோர்வாட்

கம்போடியா என்றொரு தேசம். தென் கிழக்கு ஆசிய நாடுகளில் ஒன்று என்று பூகோளம் சொல்கிறது. அதற்கு மிக அருகில் வியட்நாம், இன்னொரு பக்கத்தில் சீனா, மற்றொரு பக்கத் தில் தாய்லாந்து, மியான்மர், ஜப்பான்.

இப்படிப்பட்ட நாடுகளின் கூட்டத்திற்குள் கம்போடியா நாடு உள்ளது. மற்ற நாடுகளிலுள்ள மக்களெல்லாம் ஏறக்குறைய ஒரே மாதிரியான உடலமைப்பு, முகவெட்டு, தோல் நிறம் கொண்டுள் ளனர். இந்த ஒரே ஒரு நாடு மட்டும் தோலின் நிறம், முகவெட்டு, உடலமைப்பு ஆகியன ஏறக் குறைய மற்ற தேசத்தவர்களுடன் ஒத்துப் போவ தாக இருந்தாலும், ஏதோ ஒன்று ஒத்துப்போகா மலும் இருக்கிறது. அந்த ஏதோ ஒன்றுதான் அந்நாட்டு மக்களின் மனோபாவம்.

அந்த நாட்டிற்குச் சென்ற யாரோ ஒரு பிரெஞ்சுக்காரச் சுற்றுலாப்பயணி ஆராய்ச்சியில் ஆர்வம் கொண்டு, அங்கே சுற்றித் திரிந்திருக் கிறார். கண்ணுக்கெட்டிய தூரம் காடாகவே தெரிந்திருந்திருக்கிறது. அந்தக் காட்டுக்குள் தான் அவர் அலைந்து திரிந்திருக்கிறார்.

அப்போது, அவருக்கு ஏற்பட்ட அதிர்ச்சியும், ஆச்சரியமும் அந்த அடர்ந்த காட்டுக்குள் பகல் நேரத்தையே இருட்டாக்கக்கூடிய உச்சி நேரத்தில் அவர் பார்வையில் பட்டும், படாமல் சில கல் கட்டடங்கள் தென்பட்டுள்ளன. அதன் அருகில் செல்கிறார். அண்ணாந்து பார்க்கிறார், வியந்து கீழே விழுகிறார், எழுகிறார், அழுகிறார் – அடி பட்டதற்காக அல்ல, ஆனந்தத்தால்!

இப்படிப்பட்ட இந்தக் கல் கட்டடங்களை இந்த அடர்ந்த காட்டுக்குள் யார் கட்டியவர் என்ற கேள்வியோடு, திரும்பித் திரும்பிப் பார்க்கிறார், விடை கிடைக்கவில்லை. திரிகிறார், அலைகிறார், எங்கோ தங்கி இரவைக் கழிக்கிறார். மறுநாளும் முயற்சியைத் தொடர்கிறார். தான் கொண்டு சென்ற சக்தி மிக்க கேமராவை எடுத்துப் படம் எடுக்கிறார். அதோடு பாரிஸ் நகரத்திற்குத் திரும்பிச் சென்றுவிடுகிறார்.

அந்தப் புகைப்படங்களை முறையாக அச் சிட்டு வெளியிடுகிறார். உலகம் முழுவதுமிருந்து இந்தப் படங்கள் எங்கே எடுக்கப்பட்டன என்ற கேள்விகள் எழுகின்றன. அப்போதுதான் கம் போடியா என்ற தேசம் பற்றி அவர்கள் தெரிய வரு கிறார்கள்.

அந்தக் கம்போடியா தேசத்தில் இந்தக் கல் கட்டடங்களை எழுப்பியவர் யார் என்று எழுப்பப் பட்ட கேள்விக்குக் கிடைத்த பதில், இந்தக் கட்ட டங்கள் இருந்த அந்த அடர்ந்த காடு, காடல்ல. ஒரு காலத்தில் கம்போடியா தேசத்தின் தலை நகரம். அங்கோர்வாட் என்று அதற்குப் பெயர். அந்தத் தலைநகரத்தில்தான், கட்டடங்கள் எனச் சொல்லப்பட்ட இவையெல்லாம் வெறும் கட்டடங் கள் அல்ல. அத்தனையும் கோவில்கள் என்று கண்டறியப்படுகிறது.

ஒன்றா, இரண்டா? ஆயிரக்கணக்கான கோவில்கள். வழிபடுவதற்குப் பக்தர்களும் இல்லை, பூசை செய்வதற்கு அர்ச்சகர்களும் இல்லை. சென்று தரிசிப்பதற்குச் சரியான சாலை களும் இல்லை. மழை வந்தால் ஒதுங்குவதற்கும் இடம் இல்லை. ஆபத்து நிறைந்த அடர்ந்த காடு.

1200 ஆண்டுகளுக்கு முன்பு இந்தக் கோவில்களைக் கட்டியவர் எவர்?


இந்தக் கேள்விக்குக் கிடைக்கிற பதில், தமிழர்களைத் தத்தளிக்க வைக்கிறது. அதைக் கட்டியவர்கள் சூரியவர்மன், ஜெயவர்மன், மகேந்திர வர்மன் என்பதாக அங்குள்ள கல்வெட்டுகள் சொல்கின்றன. அந்தக் கல்வெட்டுகளிலுள்ள எழுத்துக்கள் வட்டெழுத்துக்கள். தெலுங்கு, கன்னடம் முதலிய இந்திய மொழிகளுக்குள்ள எழுத்துக்களைப் போன்ற வட்டெழுத்துக்கள்.

இது எப்படிச் சாத்தியமாயிற்று? அந்தச் சரித்திரம் எங்கே போயிற்று? இந்தச் சாதனைக்குத் தமிழனா சொந்தக்காரன்? ஆமாம்! தமிழனேதான்.

அந்த வட்டெழுத்துக்கள் தமிழோடு சம்பந்தப்பட்ட எழுத்துக்கள். அந்த எழுத்துக்களை வரி வடிவத்தில் படித்துப் பார்த்த கல்வெட்டு அறிஞர்கள் வர்மன் என்ற வம்சத்தைப் பற்றி அறிகிறார்கள்.

இந்த வர்மன்கள் எங்கே இருந்தார்கள்? தமிழ்நாட்டில்தான். அதுவும் காஞ்சிபுரத்தைச் சுற்றியுள்ள பிரதேசத்தைப் பல்லவர்கள் ஆண்ட காலத்தில் இந்த வர்மன்கள் வாழ்ந்திருக்கிறார்கள். கடல் மார்க்கத்தில் செல்வது அவர்களுக்குக் கைவந்த கலை. கப்பல், படகு, தோணி இவையெல்லாம் அவர்களுடைய குழந்தைப்பருவ நாகரிகத்தின் வீர விளையாட்டுகள்.

இந்த வர்மன்களில் முதலாம், இரண்டாம், மூன்றாம் சூரியவர்மன்கள், அதேபோல ஜெயவர்மன், மகேந்திரவர்மன் இவர்களெல்லாம் காஞ்சிபுரத்தில் அமைக்கப்பட்டிருக்கிற சிவாலயம் போல, கம்போடியாவில் கட்டியிருக்கிறார்கள்.



கற்களால் கட்டியிருக்கிறார்கள். அழகு நிறைந்த ஒரு தலை நகரத்தையே உருவாக்கியிருக்கிறார்கள்.



பாட்டும், நாட்டியமும் அங்கு பந்தயப் போட்டிகளில் இடம்பெற்றுள்ளவையாக இருந்துள்ளன. ஆட்சி அதிகாரத்தைச் செப்பனிட்டுள்ளார்கள். விவசாயம் வளர்ந்தது. பாசன நீருக்கு உத்தர வாதம் இருந்தது.

அப்படிப்பட்ட ஒரு வரலாற்றோடு வளர்ந்த கம்போடியாவின் அங்கோர்வாட், இப்போது எப்படி உள்ளது?

மாக்கோலம் கலைக்கப்பட்டதுபோலச் சிங்காரக் கட்டடம் சிதிலமடைந்தது போல, சங்கீதம் சப்தமாகிவிட்டது போல மாறிப் போயிருப்பதைக் கண்டு உலகச் சுற்றுலாப் பயணிகள் உடைந்து போயிருக்கிறார்கள்.

லண்டன், பாரிஸ், சுவீடன் முதலிய இடங்களிலிருந்து ஐரோப்பியர்களும் மாஸ்கோவிலிருந்து ரஷ்யர்களும் வந்தவண்ணம் இருக்கிறார்கள். ஆண்டிற்கு ஏறக்குறைய 6 மாதக் காலம் இவர்களுடைய வருகைக்காகவே கம்போடியாவின் கதவுகள் அடையா நெடுங்கதவுகளாக இருக்கின்றன.

இந்தக் கம்போடியாவின் அங்கோர்வாட்டைப் பார்ப்பதற்காக '50+' சுற்றுலா நிறுவனத்தின் மூலம், நாங்கள் 40 பேர் சென்றிருந்தோம். 40 பேருமே 60 வயதைக் கடந்தவர்கள். 70 வயதை எட்டிப் பிடித்தவர்கள். ஏன், 80 வயதுள்ளவர்களும் உண்டு.

அங்கோர்வாட் கோவில் வளாகத்தின் முன்பு இறங்கி உள்ளே செல்வதற்குத் தொடங்கியபோது, வெகு தொலைவில் தெய்வீக உருவங்கள் உள்ள கோயில்கள் தென்பட்டன. அது என்ன கோவில் என்று யாருக்கும் தெரியாது. அந்த வட்டாரம் முழுவதுமே பௌத்த சமயத்தின் தாக்கம் அப்போது இருந்த காரணத்தால், அந்தக் கோவிலை புத்த பகவான் கோவில் என்றார்கள். வேறு சிலர் அதை விஷ்ணு கோவில் என்றார்கள்.

அங்கு உள்ளே இருக்கும் சிலை இரண்டு ஆள் உயரத்திற்கு இருக்கிறது. சிரித்த முகத்தோடு ஒரு சிலை. அதை புத்த பகவான் என்பதா?

தொடர்ச்சி : 95–ம் பக்கம்

வாசகர் கடிதம்

தஞ்சைப் பெரிய கோவிலும், அதனை உருவாக்கிய இராஜராஜனின் திருவுருவமும் தோற்றமளிக்கும் 'ஓம் சக்தி' 2019 டிசம்பர் இதழின் அட்டைப் படம் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே ஈர்த்தன என்றால் மிகையல்ல!

– **முத்து. வள்ளிமயில்,**
மேலைச்சிவபுரி.

'சுரங்கம்' பகுதியில் 'தேசிய இலக்கியம் திருக்குறள்' பற்றிய அருட்செல்வரின் கட்டுரை தீர்க்க தரிசனமானது. தகுந்த அறிஞர்களின் கருத்தை மேற்கோள்காட்டிய விதமும் பாராட்டத் தக்கது.

– **வள்ளுவப்பித்தன்,** கூழிப்பிறை.

'வாரி இறைத்த வார்த்தைகள்' கட்டுரை அருமை. வார்த்தைகளைத் தடவித் தடவிப் பார்த்து வெளியிடாவிடில், வாய் புண்ணாகி நாக்குத் தெறித்துவிடும் என்ற அறிவுரையும் மிகச் சிறப்பு!

– **ஜெயாராஜாமணி,** மதுரை.

தஞ்சைப் பெரிய கோவிலையும் மாமன்னர் இராஜராஜனையும் 'ஓம் சக்தி' டிசம்பர் இதழ் அட்டையில் ஒரு சேர தரிசிக்கச் செய்துவிட்டீர்கள்! நன்றி!

– **அர.கோ. குப்புசாமி,** தாதம்பட்டி.

சிவவாக்கியர் சித்தர் தொடர்பான கட்டுரையைப் பலமுறை படித்து ரசித்தேன். இது பாதுகாக்க வேண்டிய கட்டுரைப் பகுதி!

– **வி. சகாயராஜா,** திண்டுக்கல்.

செ. சரத் எழுதிய "உழவர்க்கும் வந்தனை செய்வோம்" கட்டுரை விவசாயிகளின் நிலையை நன்கு படம் பிடித்துக் காட்டியது. இதுபோன்ற நல்ல கருத்துக்களை வெளியிடும் ஓம்சக்திக்கு நன்றி!

– **பா.மா. வெங்கடாசலபதி,**
கவுந்தப்பாடி.

பழகிப் பார்த்ததில் இவர்கள்... பகுதியில் அ. அறிவொளி அவர்களின் அறிவார்ந்த கருத்துக்களையும் அவருடனான நிகழ்வுகளையும் அருமையாகத் தொகுத்துக் கொடுத்திருக்கிறார் கவிஞர் மரபின்மைந்தன் முத்தையா.

– **அவினாசி முருகேசன்,** காரமடை.

'நமக்குத் தேவை காந்தி' கட்டுரை மூலம் அவர் ஏன் என்றென்றும் தேவைப்படுகிறார் என்பதை டாக்டர் க. பழனித்துரை அருமையாக விளக்கியிருக்கிறார்.

– **என்.ஜே. கந்தமாறன்,** சென்னை.

கே. பிரவாஸினியின் "பொண்ணு பிடிச்சிருக்கு" சிறுகதை, சமூகத்தில் நிலவும் சிலரின் மனப்பான்மையை வெளிச்சமிட்டுக் காட்டியது. சிறப்பான சிறுகதை.

– **மு.இராமு,** திருமங்கலம்.

"முத்தமிட்ட ரோஜாவனம்" கவிதை மிகவும் அருமை. "வெற்றிடமே இல்லாமல் என்னுள் பூத்த ரோஜாவனம்" என்ற வரிகள், மெல்லிய மயில் இறகால் மனதை வருடியது போல் இருந்தன.

– **உஷாமுத்துராமன்,** திருநகர்.

நமது ஐம்புலன்களை மனம் என்ற அங்குசத்தால் அடக்க நினைப்பதை விட, அறிந்து தெளிய வேண்டும் என்கிற காந்த ஆற்றல் தத்துவங்களை நன்கு விளக்குகிறது "விநாயகருக்கு ஒரு விநோத விளக்கம்" எனும் ஆன்மீகக் கட்டுரை.

– **த. நாகராசன்,** சிவகாசி.

கிருத்திகாவின் 'பிரதோஷம்' சிறுகதையில் பாட்டி – பேத்தி இவர்களுடனான மனமகிழ்வுகளையும், மன நெகிழ்வுகளையும் காண முடிந்தது. மனம் நெகிழும்படியான சிறுகதை.

– **ச. லெட்சுமி,** செங்கோட்டை.

"சொல், செயல் இவற்றால் பிறருக்குத் தீங்கு செய்யாதவரே முஸ்லிம்" என்று நபிகளார் கூறிய நிலையில், இன்றுள்ளோர்க்குத் தஸ்லிமா நஸ்ரீன் தொடுத்த வினா தவறென்று எப்படிச் சொல்ல இயலும்?

– **எஸ்.ஜி. இசட்கான்,** திருப்பூர்.

ஆன்மிகம்



மயிலாப்பூர் ஷீரடி சாயிபாபா
திருக்கோயில் முகப்புத் தோற்றம்

சென்னையில் ஒரு ஷீரடி



19-ஆம் நூற்றாண்டில் அவதரித்து இருபதாம் நூற்றாண்டில் தமது அவதாரத்தை நிறைவு செய்த ஷீரடி சாயிபாபா, பாரதத் திருநாடு கண்ட மகத்தான அவதார புருஷர்களில் ஒருவர் ஆவார்.

இளம் வாலிபராக மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள ஷீரடித் திருத்தலத்திற்கு எழுந்தருளிய அவரது தோற்றப் பொலிவைப் பார்த்து வியந்த கண்டோபா திருக்கோயிலின் பூசாரி, "யா சாயி!" என்று அழைத்தது முதல் அவ்வாலிபரை அனைவரும் சாயிபாபா என்றே அன்புடன் அழைக்கத் தொடங்கினர். அத்திருப் பெயரே அவருடன் என்றென்றும் நிலைத்தது.

அரபு மற்றும் பார்ஸி மொழிகளில் "சாயி" என்பதற்கு இறைவன் மற்றும் குரு என்ற பொருள் உண்டு. இந்தி மற்றும் மராத்திய மொழிகளில் "பாபா" என்றால் தந்தை என்ற பொருள் உண்டு. இவ்விரண்டும் இணைந்து "சாயிபாபா" ஆனது.

தமது திருப்பெயரின் பொருளுக்கு ஏற்ப, தம்முடைய பக்தர்கள் அனைவருக்கும் இறைவனாகவும், குருவாகவும், வழிகாட்டியாகவும் மற்றும் தந்தையாகவும் இன்றளவும் விளங்கி வருகின்றார் ஷீரடி சாயிபாபா.

ஷீரடியில் இருந்த சாதாரண மண் கட்டடமான ஒரு சிறிய மசூதியில் தங்கியிருந்த இவர், தம்மை நாடி வருபவர்களின் மன வருத்தத்தைப் போக்கி ஆறுதல் சொல்வது, அவர்களது உடல் நோய்களுக்கான மருந்துகளை அளிப்பது, கிராமத்து இல்லங்களுக்குச் சென்று தாய்மார்கள் அன்புடன் அளிக்கும் சோள ரொட்டி மற்றும் பருப்பு ஆகியவற்றைப் பெற்று உண்பது ஆகியவை போக, மீதி நேரங்களில் அக்கிராமத்தில் உள்ள மரங்களின் நிழலில் அமர்ந்து தியானம் செய்வது என்றே காலம் கழித்து வந்துள்ளார்.

ஷீரடியில் இவர் ஒரு மசூதியில் தங்கி இருந்தது மற்றும் இவருடைய பழக்கவழக்கங்களின் காரணமாக இவர் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்த ஒரு 'சூஃபி' அல்லது 'பக்கீர்' எனப்படும் சித்தபுருஷராகக் கருதப் பட்டார்.

நாளடைவில், தம்மை நாடி வரும் நோயாளிகளுக்கு மருந்துகளைக் கொடுப்பதற்குப்



எஸ். ஸ்ரீதுரை



ஷீரடி சாயிபாபா
திருக்கோயில்
உட்புறத்தோற்றம்

பதில், தாமே தயாரித்த "உதி" என்னும் விபூதி முதலிய சாம்பலை அளிக்க ஆரம்பித்தார்.

மேலும் தமது பக்தர்கள் அவரவர்களின் மதங்களையும் கலாச்சாரங்களையுமே பின்பற்ற வேண்டும் என்றும், இந்துக்கள் முஸ்லிம்களாகவோ, முஸ்லிம்கள் இந்துக்களாகவோ மதம் மாறக் கூடாது என்றும் வலியுறுத்தினார்.

"எல்லோருக்கும் இறைவன் ஒருவனே!" என்னும் பொருள்படும் விதமாக "ஸப்கா மாலிக் ஏக்!" என்ற தத்துவத்தை அனைவருக்கும் உபதேசித்தார். அவர் தங்கியிருக்கும் புனிதத் தலத்தில் விஷ்ணு சஹஸ்ரநாமமும் இசைக்கப்படும், குரானும் ஓதப்படும். சில நூற்றாண்டுகளுக்கு முன்பு அவதரித்த கபீர்தாசரின் பக்திபூர்வமான பாடல்களை இவரே பாடுவதும் உண்டு. இதனால் தீவிர இந்துக்கள் மற்றும் தீவிர முஸ்லிம்களின் எதிர்ப்பையும் இவர் எதிர்கொள்ள நேர்ந்தது.

ஒருமுறை ரோகில்லா என்ற முஸ்லிம் இவரைப் பின்தொடர்ந்து வந்து ஒரு குண்டாந்தடியினால் இவரது தலையை உடைக்க முயற்சித்த வேளையில் சட்டென்று திரும்பிப் பார்த்து அவனது மணிக்கட்டைத் தடவிக் கொடுக்க, நிலைகுலைந்து போன ரோகில்லாவால் அந்தத் தடியைத் தூக்கக்கூட முடியவில்லை. பின்னர், அந்த ரோகில்லா மனம் திருந்தி பாபா எழுந்தருளியிருந்த மசூதியிலேயே தானும் தங்கியிருந்து குரான் ஓதுவது வழக்கமானது.



அதேபோன்று, அவர் தங்கியிருந்த மசூதியில் இந்து சம்பிரதாயப் பூசைகளில் ஈடுபட்ட இந்துக்கள் சிலரைக் கொல்வதற்கு முனைந்த மீர்ஜான் என்ற முஸ்லிம் இளைஞனை நோக்கி, "என் பக்தர்களான இவர்களை நீ



ஸ்ரீசாயிபாபாவும்
ஸ்ரீ நரசிம்ம சுவாமிஜியும்

கொல்லக் கூடாது. வேண்டுமானால், இவர்களை இவ்வாறு பூசை செய்ய அனுமதித்த என்னுடைய கழுத்தை நீ வெட்டிக்கொள்!" என்று கூற, அந்த மீர்ஜான் மனம் திருந்தி ஷீரடி சாயிபாபா முன்பு மண்டியிட்டான்.

1918–ஆம் வருடம் மகாசமாதியடைந்த ஷீரடி சாயிபாபாவின் திருவுடல் பள்ளிப்படுத்தப்பட்டுள்ள புனிதத்தலத்தில் பிரும்மாண்டமாக எழுந்துள்ள திருக்கோயில் இன்று நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான பக்தர்களைத் தன்வசம் ஈர்த்து வருகின்றது.

திருமலை திருப்பதி ஏழுமலையான் திருக்கோயிலைப் போன்றே பெருமளவில் பக்தர்களின் காணிக்கைகளைப் பெறும் ஷீரடி சாயிபாபாவின் ஆலய நிர்வாகம் அவ்வருமானங்களின் மூலம் அன்னதானம், இலவச மருத்துவம், நீர்ப்பாசனம் உள்ளிட்ட பற்பல பொதுநலச் சேவைகளில் ஈடுபட்டு வருகின்றது.

நரசிம்ம சுவாமிஜி என்ற தீவிர சாயிபக்தர் சென்னை



ஷீரடி சாயிபாபாவின் திருக்கோயிலை நிர்மாணம் செய்த நரசிம்ம சுவாமிஜி

யில், 1940–களின் தொடக்கத்தில் ஸ்ரீ அகில இந்திய சாயி சமாஜம் என்ற அமைப்பினை நிறுவி, சென்னையில் உள்ள மயிலாப்பூர் மற்றும் திரு வல்லிக்கேணி ஆகிய பகுதிகளின் பாபாவின் புகழைப் பரப்பி வந்தார்.

பிறகு, பாபா பக்தர்களில் ஒவ் வொருவரின் இல்லத்துக்கும் சென்று பாபாவின் திருவுருவப்படத்தை அளித்து பூசை, ஆரத்தி, பஜனை, தியானம் ஆகியவற்றில் அவர்களை ஈடுபடச் செய்தார். நாளடைவில் இந்தியாவின் பல பகுதிகளுக்கும் சென்று அவர்தம் புகழைப் பரப்பி வந்தார் நரசிம்ம சுவாமிஜி.

பாபாவைப் போலவே, நரசிம்ம சுவாமிஜியும் பல எதிர்ப்புகளைச் சந்திக்க நேரிட்டது. சனாதனத்தில் நம்பிக்கையுள்ள இந்துக்கள் மற்றும் தீவிர முஸ்லிம் மதப்பற்றாளர்கள் இப் புதிய வழிபாட்டுக் கலாச்சாரத்துக்கு எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

அவையனைத்தையும் பொறுமை, விடாமுயற்சி, பாபா மீது கொண்ட நம்பிக்கை மற்றும் சாயி பக்தர்களின் ஒத்துழைப்பு ஆகியவற்றின் மூலம் திறம்படச் சமாளித்து மயிலாப்பூர் கற்பகாம்பாள் மற்றும் கபாலீஸ்வரர் திருக்கோயிலின் குளத்திற்கு அருகில் உள்ள வேங்கடேஸ்வர அக்கிரகாரத் தில், ஷீரடியில் உள்ளதைப் போன்ற கூம்புவடிவக் கோபுரத்துடன் கூடிய சாயிபாபாவின் திருக்கோயிலை 1952–ஆம் வருடம் எழுப்பினார்.

இங்கு நிரந்தரமாக எரிந்து கொண் டிருக்கும் 'துனி' என்ற அணையாத புனித நெருப்பு உள்ள இடம் நவீன மயமாக்கப்பட்டுள்ளது. இதற்கு முன் பாக அமைந்துள்ள சாயிபாவின் உருவப்படம் மற்றும் திருவடிகளில் ஒவ்வொரு பக்தரும் தலைவைத்து வணங்கிச் செல்வது வழக்கம். இத் திருக்கோயிலுக்குள் துவாகாமயி அனா, குருஸ்தான் மற்றும் நரசிம்ம சுவாமிஜியின் சமாதி ஆகியவை அமைந்துள்ளன.

முதல்மாடியில் அமைந்துள்ள பெரிய உணவுக்கூடத்தில் நாள் தோறும் பலருக்கும் அன்னம் அளிக் கப்படுகின்றது. இது தவிர இலவச மருத்துவ சேவை, படிப்பகம் முதலிய பல சேவைகளும் உண்டு. அகில இந்திய சாயி சமாஜத்தின் தலைமை யகமாக விளங்கும் இந்தத் திருக் கோயில் உலகமெங்கும் ஷீரடி சாயி பாபாவின் புகழைப் பரப்புவதுடன், “சாயி சுதா” என்ற மாதப் பத்திரிகை யையும் வெளியிட்டு வருகின்றது.

ஆரம்பத்தில் சில நூறு பக்தர்களே வந்து வழிபட்ட இந்தத் திருக் கோயிலில், இன்று தினந்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து மனச்சாந்தி பெறுகின்றனர். வி.ஐ. பி.–க்கள், நடுத்தரம் மற்றும் எளிய வாழ்க்கை வாழும் பக்தர்கள் யாவருக் கும் இங்கு எவ்வித வித்தியாசமும் காட்டப்படுவதில்லை.

பக்தர்கள் அனைவரும் இங்குள்ள ஷீரடி சாயிபாபாவிற்குத் தங்கள் கைகளால் மாலை அணிவிக்கவும், பொன்னாடை போர்த்தவும், அவரது திருவடிகளைத் தொட்டு வணங்கவும் அனுமதிக்கப்படுவது மிகவும் விசேஷ மானது. சிறு குழந்தைகளை அவரது மடியில் வைத்து ஆசி பெறுவதற்கும் அனுமதி உண்டு.

ஷீரடி சாயிபாபா, தமது மூச்சுக் காற்று நம்மீது படுவது போன்று நம் தோளோடு தோளாக நின்று கொண்டு பேசும் பரவச நிலையினை இந்தத் திருக்கோயிலுக்கு வந்து செல் லும் ஒவ்வொருவரும் உணர முடியும். ●

ஆன்மிகம்


நம் வாழ்க்கையில் இன்பம், துன்பம் இரண்டும் மாறி மாறி வருகின்றன. துன்பம் தாங்க இயலாததாகவும், இன்பம் நிலையில்லாததாகவும் இருப்பதால், பண்பட்ட சான்றோர்கள் பிறப்பு, இறப்பு அற்ற வீடுபேற்று நிலையை அடைய வேண்டும்



வில்வ இலை கொண்டு சிவனை வழிபடும் நாகபாம்பு

கின்றன. அதேவேளை, குறிப்பிட்ட சில திருக்கோவில்களை 'முக்தித் தலங்கள்' எனத் தலபுராணங்கள் கூறுகின்றன.

பிறக்க முக்தி தருவது – திருவாரூர். தரிசிக்க முக்தி தருவது – சிதம்பரம். நினைக்க முக்தி தருவது – திருவண்ணாமலை.



பிறவிப்பிணி தீர்க்கும் விசுவநாதர் திருக்கோவில்

என்று இறைவனை வேண்டினர்.

காரைக்கால் அம்மையார், கயிலாய மலைக்குப் பேய் வடிவில் சென்றபோது, உமையம்மையிடம் 'வரும் இவள் நம்மைப் பேணும் அம்மை காண் உமையே' என்று சிவபெருமானே சொன்னதாகப் பெரியபுராணம் கூறுகிறது.

அப்படிப்பட்ட பெருமைக்குரிய காரைக்கால் அம்மையாரே, 'உனக்கு என்ன வரம் வேண்டும்?' என்று சிவபெருமான் கேட்டபோது 'பிறவாமை வேண்டும்' என்றே வேண்டினார்.

அப்படிப்பட்ட பிறவா நிலை அடைதல் எல்லோர்க்கும் எளிய செயல் அன்று. எத்தனையோ பிறவிகள் எடுத்து, எடுத்துத்தான் வீடுபேறு அடைய முடியும் என்றே நம் புராணங்கள் கூறு

இறக்க முக்தி தருவது – காசி. தீர்த்தமாட முக்தி தருவது – திருமறைக்காடு (வேதாரண்யம்). கூற முக்தி தருவது – ஆலவாய் (மதுரை). கேட்க முக்தி தருவது – அவிநாசி என முக்தித் தலங்கள் கூறப்படுகின்றன.

இந்த வரிசையில் கூறப்படாத பிறவிப்பிணி அறுக்கும் ஒரு திருக்கோவில் தமிழகத்தில் உள்ளது. அதிகம் அறியப்படாத இக்கோயிலுக்கு வந்து சிவனை வழிபட்டவர்களுக்கு மறுபிறப்பு இல்லை என்றும், யாருக்குப் பிறவிப்பிணி தீர்ந்து மறுபிறப்பு இல்லையோ, அவர்களுக்கே இக்கோவிலுக்கு வந்து வழிபடும் வாய்ப்பு ஏற்படும் என்றும் இதன் தலபுராணம் கூறுகிறது.

அப்படிப்பட்ட திருத்தலம், கும்பகோணம்

இரா. வேணுகோபாலகிருஷ்ணன்

அருகிலுள்ள இராகுத்தலமான திருநாகேஸ்வரத்திற்கு வடக்கில் சுமார் 1 கி.மீ. தொலைவில் உள்ள 'தேப்பெருமாநல்லூர்' என்னும் சிற்றூரில் உள்ள 'வேதாந்த நாயகி உடனமர் விசுவநாதசுவாமி திருக்கோவில்' ஆகும்.

இக்கோவிலைப் பற்றிக் கோவிலின் அர்ச்சகரான திரு. சுவாமிநாத குருக்கள் பல தகவல்களை நமக்கு எடுத்துரைத்தார்.

ஒரு முறை சனி பகவான் சிவபெருமானைப் பிடிக்க வேண்டிய காலம் வந்தது. அவர் உமையம்மையிடம் சென்று, 'நாளை காலை ஏழே கால் நாழிகைப் பொழுது ஈசனைப் பிடிக்கப் போகிறேன்' என்று கூறினாராம். அதைக் கேட்டுச் சினம் கொண்டாள் அன்னை.

ஆனால், தனது பணியை ஒழுங்காகச் செய்ய வேண்டும் என்ற நோக்கில் சனிபகவான் மறுநாள் வந்தார். அப்போது அன்னை, அருகிலிருந்த அரச மரத்தின் பின்னால் சிவபெருமானை மறைந்து கொள்ளச் சொன்னாள். அம்பாள் அரச மரத்தடியில் இருப்பதைப் பார்த்த சனிபகவான், சிவபெருமான் அங்கே இருப்பதை உணர்ந்து, அந்த மரத்தைப் பார்த்தவண்ணம் அங்கேயே நின்றுவிட்டார்.

ஏழே கால் நாழிகைக் காலம் கழிந்ததும், சனிபகவான் அங்கிருந்து மெதுவாக நகரத் தொடங்கினார். அப்போது சனிபகவானைப் பார்த்து, "ஈஸ்வரனைப் பிடிக்க முடியாமல் தோல்வியடைந்து திரும்பிச் செல்கிறாயா?" என்று அன்னை கேட்டாள்.

அதற்குச் சனிபகவான், "தோல்வியடையவில்லை தாயே! நான் வந்த வேலை வெற்றியுடன் முடிந்தது. ஈஸ்வரன் மரத்தின் பின்புறம் ஒளிந்திருக்க நேர்ந்ததல்லவா? அதுவே நான் அவரைப் பிடித்திருந்த நேரம்" என்று ஆணவத்துடன் சொன்னதோடு, சற்று ஒய்யாரமாக இடுப்பில் இடக்கையை வைத்த வண்ணம் அம்பாள் முன்னால் நின்றார்.

சனி அப்படி ஆணவத்தோடு சொன்னதைக் கேட்ட சிவபெருமான், மரத்தின் பின்புறத்திலிருந்து மிகுந்த சினத்துடன் வெளிப்பட்டு, மகாமந்திர பைரவர் அவதாரம் எடுத்துச் சனி பகவானை இரண்டாகக் கிழித்தார்.

இரண்டாகக் கிழிபட்ட சனிபகவான், சிவபெருமானை நோக்கி, "பெருமானே, தாங்கள் எனக்கு விதிக்கப்பட்டபடிதான் நான் எனது பணியைச் செய்து கொண்டிருக்கிறேன். எனது பணி செவ்வனே நடைபெறாவிட்டால், பூமியில் மனிதர்கள் தங்கள் விருப்பம்போல் ஆணவத்துடன் இயங்கிப் பெரும் கொடுமைகளைச் செய்வார்கள். நான் ஆணவத்துடன் நடந்து கொண்டமைக்கு என்னைப் பொறுத்தருளி, மீண்டும் முன்புபோல் செயல்பட அருள்புரியுங்கள்" என வேண்டிக் கொண்டார்.

சனியின் வேண்டுதலை ஏற்றுக்கொண்ட சிவபெருமான், இரண்டாகப் பிரிந்த அவரது உடலை ஒன்றாகச் சேர்த்து மீண்டும் செயல்பட அருள் புரிந்தார். ஆணவம் நீங்கிய சனிபகவானை இங்கே வணங்கினால் சனி தோசங்கள் விலகும் என்பது நம்பிக்கை.

அந்த வேளையில் அங்கே நாரத முனிவர் வந்தார். அவர் இறைவனிடம், "பெருமானே! நீங்கள் சனிபகவானை இரண்டாகக் கிழித்த பாவம் உங்களைப் பிடித்துக் கொண்டது. இனி நீங்கள் விஸ்வரூபம் எடுக்க இயலாது. எனவே, நீங்கள் பன்னிரண்டு ஜோதிர்லிங்கங்களை ஒருசேரத் தரிசித்தால் அந்தப் பாவம் நீங்கும்" என்று கூறினார்.

உடனே, சிவபெருமான் பன்னிரு ஜோதிர்லிங்கங்களையும் இந்தத் திருத்தலத்திற்கு வரவழைத்தார். இதைக் கண்ட நாரத முனிவர், "இந்த ஜோதிர்லிங்கங்களில் ஒருவரது திருக்காட்சி கிட்டினாலே எத்தகைய பாவங்களும், சாபங்



தேர் வடிவிலான திருக்கோவில்

களும், தோஷங்களும் நீங்கிவிடும். அப்படி யிருக்க, பன்னிரு ஜோதிர்லிங்கங்களும் திருக் காட்சி தந்த புண்ணியத்தலம் இது என்பதால், பெரும் புண்ணியம் செய்தவர்களும், மறுபிறவி இல்லாதவர்களும்தான் இங்கு வந்து இறைவனை வணங்கி அருள்பெற முடியும்'' என்றார்.

பன்னிரு ஜோதிர்லிங்கங்களில் காசி விசுவ நாதர் மட்டும் விசாலாட்சியுடன் இத்தலத்திலேயே தங்கிவிட்டார். அந்தச் சந்நிதி, மகாமண்டபத்தில் தென்கிழக்கு மூலையில் உள்ளது.

இத்தலத்தின் மகிமையை அறிந்த அகத்திய மாமுனிவர், விசுவநாத சுவாமியை வணங்கி அருள்பெற இங்கே வந்தார். அகத்தியர் வருவதை அறிந்த சிவபெருமான், அகத்தியருக்கு மறுபிறவி இருந்ததால், அவரை அங்கு வராமல் தடுக்கத் திருவுளம் கொண்டு, மகரந்த மகரிஷியை அழைத்து அகத்தியர் வராமல் தடுக்குமாறு கூறி னார்.

இறைவன் கட்டளையை நிறைவேற்ற எண் ணிய மகரந்த மகரிஷி, அகத்தியர் மேற்கொண்டு


சூரிய பகவானும்
சனீஸ்வர பகவானும்

நடக்க இயலாதவாறு வழியெங்கும் மகரந்தப் பூக்களாக மாறி வழியை அடைத்துவிட்டார்.

வழிமறித்த மகரந்தப்பூக்களைப் பற்றி ஞானக் காட்சியில் அறிந்த அகத்திய முனிவர், ''மகரந்த மகரிஷியே, நான் சிவபெருமானை வழிபட வேண்டும். வழி விடுங்கள்'' என்றார். ஆனால், மகரந்த மகரிஷி அதற்கு உடன்படவில்லை.

இதனால், கோபமுற்ற அகத்தியர், ''பூப் போன்ற உனது முகம் யாளி முகமாக மாறட்டும்'' என்று சாபமிட்டார். அதனால், யாளி முகம் பெற்ற மகரந்த மகரிஷி, ''அகத்திய மாமுனிவரே! உங் களுக்கு மறுபிறவி உண்டு என்பதால் இறைவன் கட்டளைப்படி நான் வழிமறித்தேனே தவிர, என் விருப்பத்தால் அல்ல. நீங்கள் இறைவனை இங்கே வழிபட இயலாது. எனவே, எனக்குத் தாங்கள் இட்ட சாபத்திற்கு விமோசனம் தாருங்கள்'' என்று வேண்டினார்.

அதற்கு அகத்தியர், ''உலகத்திலே யாரும் பூசை செய்யாத பொருளைக் கொண்டு இறை வனைப் பூசை செய்தால், சாபம் நீங்கி மீண்டும் பழைய முகத்தினைப் பெறுவீர்'' என்று கூறித் திரும்பிச் சென்றார்.

அன்றிலிருந்து ஒவ்வொரு நாளும் ஒரு வகை மலரைக் கொண்டு மகரந்த மகரிஷி இறை வனுக்கு ஐம்பது ஆண்டுகள் பூசை செய்தார். ஒரு நாள் பூசையின்போது அவரது கழுத்திலிருந்த ருத்ராட்ச மாலை அறுந்து, சுவாமியின் மீது விழுந் தது. உடனே சிவலிங்கம் ஒளிமயமாகக் காட்சி யளித்தது.

இதைக் கண்ட மகரந்த மகரிஷி, ஒரு முக ருத்ராட்சத்திலிருந்து, பதினான்கு முக ருத்திராட்சம் வரை இறைவனுக்குப் படைத்து வழிபட்டார். இதனால், அவரது சாபம் நீங்கப்பெற்று யாளி முகம் மாறித் தன் பழைய முகத்தைப் பெற்றார்.

இதனால் இந்தத் தலத்தில் இறைவனுக்கு ருத்ராட்சக் கவசம் சார்த்தப் படுகிறது. பிரதோஷம், மகாசிவராத்திரி, மாத சிவராத்திரிப் பூசைகளின் போது சிவலிங்கத்திற்கு 38 ஆயிரம் ருத்ராட் சங்கள் கொண்ட மாலையைக் கவசமாக அணி விக்கிறார்கள். அத்துடன் பிரதோஷ நாட்களில் இங்கு வழிபட வரும் பக்தர்களுக்கு வில்வ இலை யுடன் ருத்ராட்சமும் பிரசாதமாக வழங்கப் படுகிறது.

இங்குள்ள நந்தியின் வலது காது மடங்கி உள்நோக்கியிருக்கும். பிரளய காலத்தில் இங்கு வந்த நந்தி கால் சறுக்கி ஒரு பக்கமாய் விழுந்த போது, அதன் வலக்காது மடங்கி உள்நோக்கிச் சென்றுவிட்டது. இதனால் வருந்திய நந்தியைத் தேற்றிய சிவபெருமான், 'யார் ஒருவர் தங்கள் குறைகளை உன் வலக்காது உள்ள பக்கம் சொல் கிறார்களோ, அக்குறையை நான் நிவர்த்தி செய் வேன்' என்று கூறி அருளினார்.

திருக்கோவிலின் தெற்குப் பகுதியில் தட்சிணாமூர்த்தியும், தென்மேற்கு மூலையில் விநாயகரும், வடமேற்குப் பகுதியில் வள்ளி, தெய் வானையுடன் முருகப்பெருமானும் உள்ளனர். கோவிலின் மகாமண்டபத்தில் வடபுறத்தில் தெற்குத் திசை நோக்கி, வேதாந்தநாயகி அன்னை அருள்புரிகிறாள். அன்னை நம்முடன்

பேசுவது போன்று உதடுகள் குவிந்த நிலையில் காட்சியளிக்கிறாள். இது, நமக்கு வேதத்தின் உட்பொருளை எடுத்துரைக்கும் பாவனை என்று கூறுகின்றனர்.

அன்னையின் சந்நிதிக்கு அருகில் மகா பைரவர் என்று பெரிய உருவிலும், சாந்த பைரவர் என்று சிறிய உருவிலும் இரண்டு பைரவர்கள் காட்சி தருகின்றனர். அருகில் சனி பகவான் காக்கை வாகனத்துடன் இடுப்புக்குக் கீழே கையை வைத்தபடி மேற்கு நோக்கி இறைவனைப் பார்த்த வண்ணம் காட்சி தருகிறார்.

கோவிலின் வடபுறத்தில் இரண்டு சண்டிகேஸ்வரர்கள் உள்ளனர். ஒருவர் பெரிய தோற்றத்தில் தெற்கு நோக்கியும், இன்னொருவர் சிறிய திருவுருவில் கிழக்கு நோக்கியும் உள்ளனர். அருகில் விஷ்ணு துர்க்கையும், அம்பாள் சந்நிதிக்குப் பின்புறம் வடக்குக் கோஷ்டத்தில் எட்டுக் கரங்கள் கொண்ட துர்க்கையும் காட்சி தருகின்றனர்.

கோவிலின் வடக்குக் கோஷ்டத்தில் மகா விஷ்ணு காட்சி தருகிறார். இவர், நவராத்திரி விழாவின்போது தன் மாப்பிள்ளையான சிவ பெருமானையும், தன் தங்கையான வேதாந்த நாயகியையும் சீர்வரிசை கொடுத்துத் தன் கோவிலுக்கு அழைத்துச் செல்வாராம். இந்தத் திருக்கோவிலுக்கு அருகில் பெருமாள் கோவில் உள்ளது. இந்தப் பெருமாள் கோவிலுக்கு நவராத்திரி விழா நடைபெறும்போது கடைசி நாளில் சிவ பெருமானும், வேதாந்த நாயகியும் வருகை தருவது வழக்கம்.

கோவிலின் வடிவமைப்பு ஒரு தேர் போல உள்ளது. இறைவன் கருவறை மற்றும் அன்னையின் சந்நிதி இரண்டிலும் இருபுறங்களிலும் தேர்ச் சக்கரங்கள் பொருத்தியது போன்ற அழகிய அமைப்புடன் கோவில் திகழ்கிறது. கோவில் பரப்பளவில் சிறியதாயினும் திருத்தல மகிமையில் பெருமை வாய்ந்தது.

இத்திருக்கோவிலில் சென்ற 2010–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15–ஆம் தேதி ஒரு நாகப் பாம்பு, இங்குள்ள வில்வ மரத்திலிருந்து ஓர் இலையைப் பறித்து வந்து, சுவாமிக்கு அபிசேகம் செய்யும் நீர் வெளியேறும் துளை வழியாக உள்ளே வந்து சிவலிங்கத்தின்மீது வில்வ இலையை வைத்து வழிபட்டதாம். பின்னர், 2017–ஆம் ஆண்டும் இதேபோல வில்வ இலையைக் கொண்டு வந்து சிவலிங்கத்தைப் பூசித்ததாம். இந்தப் படங்கள் சமூக வலைத்தளங்களில் காணக்கிடைக்கின்றன.

ஒருமுறை ருத்ராட்சக் கவசத்தின்மீது இப்பாம்பின் சட்டை இருந்துள்ளதைப் பார்த்து, அதை எடுத்துக் கோவிலில் ஒரு பலகையில் பதித்து வைத்துள்ளனர்.

இக்கோவிலில் பிரதோஷம், நவராத்திரி, சிவராத்திரி ஆகிய நாட்களில் சிறப்புப் பூசைகள் நடைபெறுகின்றன. ஐப்பசியில் அன்னாபிஷேகம் நடைபெறுகிறது. கார்த்திகை மாதத்தில் திங்கள்கிழமைகளில் 108 சங்காபிஷேகம் நடைபெறுகிறது. கோவில் காலை 8 மணி முதல் 11.30 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் 7.30 மணி வரையிலும் திறந்திருக்கும்.


தட்சிணாமூர்த்தி

இந்து அறநிலையத்துறையின்கீழ் தற்போது இந்தக் கோவில் உள்ளது. இங்கு செல்ல கும்பகோணம் பேருந்து நிலையத்திலிருந்து மினி பேருந்து உள்ளது. திருநாகேஸ்வரத்திலிருந்து ஆட்டோவிலும் செல்லலாம். அருகில் கடைகள் ஏதும் இல்லாததால், இங்கு செல்வோர் பூசைப் பொருள்களைக் கும்பகோணம் அல்லது திருநாகேஸ்வரத்திலிருந்து வாங்கிச் செல்ல வேண்டும்.

யாருக்கு மறுபிறவி இல்லையோ, அவர்கள்தான் இக்கோவிலுக்கு வர முடியும் என்று சொல்லப்பட்டாலும், அங்கு சென்று வழிபட்டுப் பிறவிப் பிணியைத் தீர்க்க, அந்த இறைவனையே வேண்டித் தேப்பெருமாநல்லூர் சென்று வழிபட்டு வாருங்கள்.



கட்டுரை



தாலாட்டுப் பாடல்கள்

எஸ். கோவிந்தராஜன்

தமிழ் இலக்கியத்திலும், நாட்டுப்புறப் பாடல்களிலும், தனிப் பாடல்களிலும், திரைப்படப் பாடல் களிலும் தாலாட்டுப் பாடல்களுக்கு எனத் தனியிடம் உண்டு. குழந்தை பிறந்த பிறகு அக்குழந்தைக்கு மூன்று வயது ஆகும்வரை, தாயானவள் பலவிதத் தாலாட்டுப் பாடல்களைப் பாடிக் குழந்தையைத் தூங்க வைக் கிறாள்.

குழந்தைகளுக்கான தனிப்பட்ட பாடல்கள், எல்லா மொழிகளிலும் உண்டு. சந்தமும், ஓசையும், அவற்றில் முக்கிய இடம் பெற்றிருக்கும் எளிய சொற்கள், மழலை மொழி ஆகியவை அதிகம் காணப்படும்.

ஒரு தாயின் அன்பு ஆழம் காண முடியா ஒரு கடல் போன்றது. அவ ளது அன்பின் வெளிப்பாடே "தாலாட்டு." குழந்தையின் அழு கையை நிறுத்தவும், தூங்க வைக்கவும் தாலாட்டுப் பாடல்கள் பயன்படு கின்றன.

"தாலாட்டு" என்ற சொல்லைப் பிரித்தால் தால் + ஆட்டு என்று பிரியும். "தால்" என்றால் நாக்கு. "ராராரோ" என்று நாக்கினை ஆட்டிப் பாடுவதால் 'ஆட்டு' என்று பொருள். "ஆரோரோ" "ஆரிராரோ" என்ற சந்தங்கள் மூலம் ஒலி எழுப்பு வதால் "ஆராட்டு" என்றும் கூறுவர்.

தாலாட்டுப் பாடல்களில் பல வகை உண்டு. பரம்பரை பரம்பரை யாகத் தொடர்ந்து பாடப்படும் பாடல்களும் உண்டு. சில சமயம் தாய் மார்கள் அந்தந்த நேரங்களில் இட்டுக் கட்டிப் பாடுவதும் உண்டு.

தாலாட்டுப் பாடல்கள் வெவ் வேறு ராகங்களில் அமைந்திருக்கும். ஆனால் தாலாட்டிற்கு உரிய ராகம், நீலாம்பரி என்கிறார்கள். யதுகுல காம்போதி, சகானா, ஆனந்த பைரவி முதலிய ராகங்களிலும் பாடுவார்கள்.

குழந்தைக்கு, காது நம்மைவிட நன்றாகக் கேட்கும். எனவே, இசையை ரசித்துக் கேட்கும். மகாகவி பாரதியார் "காட்டில் விலங்கறியும், கைக்குழந்தை தானறியும், பாட்டின் சுவையதனைப் பாம்பறியும்" என்று பாடியுள்ளார்.

தாலாட்டுப் பாடல்களில் குழந் தைகளின் சிறப்புகள், அதன் விளை யாட்டு முறைகள், குழந்தையின் அம்மா, அப்பா, பாட்டன், அத்தை பெருமை பேசுதல் என்று பலவிதக் கருத்துக்கள் வெளிப்படும்.

இலக்கியத்தில் தாலாட்டு : *"தாலாட்டுதல்" என்ற வார்த்தை வெவ்வேறு பெயர்களில் இலக்கியங் களில் காணப்படுகின்றது. 'தாலாட்ட' என்பதைத் 'தாராட்ட' என்கிறது முத் தொள்ளாயிரம். "ஊமன் தாராட்ட உறங்கிற்றே" என்று கூறப்பட்டுள்ளது.*

கம்பர் தனது கம்பராமாயணத்தில் "பச்சைத் தேரைத் தாலாட்டுப் பண்ணை" என்று 'தாலாட்டு' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார்.

ஒரு குழந்தையைக் கட்டெறும்பு கடிக்க வருகிறது. தாய் பாடும் தாலாட்டு இந்த இடத்தில் இலக்கிய நடையில் வருகிறது :

"காரார் குழலாளைக்

கடிக்க வந்த கட்டெறும்பு

காலுக்குப் பீலிகட்டிக்

கைக்கு வெள்ளைக் காப்புமிட்டு

நெற்றிற்கு சுட்டி கட்டி

நிற்குதந்தக் கட்டெறும்பு"

என்று பாடுகிறார்.

முதன் முதலில் தாலாட்டுப் பாட லைப் பாடியவர் பெரியாழ்வார். அவர் பாடுகிறார் :

"மாணிக்கம் கட்டி

வயிரம் இடைகட்டி

ஆணிப் பொன்னாற் செய்த

வண்ணச் சிறுதொட்டில் பேணி

உனக்குப் பிரமன் வீடு தந்தான்

மாணிக் குறளனே! தாலேலோ!

வையம் அளந்தானே தாலேலோ!"

குலசேகராழ்வார் ராமருக்குத் தாலாட்டுப் பாடுகிறார் :

"தேவரையும் அசுரரையும்

திசைகளையும் படைத்தவனே

யாவரும் வந்தடி வணங்க

அரங்க நகர்த் துயின்றவனே

காவிரி நல் நதிபாயும்

கணபுரத்தென் கருமணியே

ஏவரிவெஞ் சிலைவலவா

இராகவனே தாலேலோ!"

இதே போல் வள்ளி கதைத் தாலாட்டு, ராமர் கதைத் தாலாட்டு என்று பல இலக்கியத் தாலாட்டுப் பாடல்கள் உள்ளன.

நாட்டுப்புறப் பாடலில் தாலாட்டு: *நாட்டுப்புறப் பாடல்களில் தாலாட்டுப் பாடல்களுக்கு முக்கிய இடம் உண்டு. ஒரு தாய் தனது குழந் தையின் அழகைப் பார்த்து, வியந்து ஆண்டவனே தனக்குக் குழந்தையாக வந்ததாக நினைத்துப் பாடுகிறாள் :*

"மதுரை அழகரோ?

மாமதுரை சொக்கரோ? நான்

சேவிக்க வந்த கண்ணனோ?

சேவற் கொடியோனோ?

திருமால் மருகோனோ?"

இன்னொரு பாடலில் குழந்தை யைத் தொட்டிலில் இட்டு, அந்தத் தொட்டிலை ஒரு தாய் வருணனை செய்கிறாள் :

"ஆடுமாம் தொட்டில்

அசையுமாம் பொன்னூஞ்சல்

பொன்னூஞ்சல் மேலிருந்து நீ

பொய்யுறக்கம் கொண்டவனோ?

நித்திரையோ என் கண்ணே

சித்திரைப்பூத் தொட்டிலிலே

பிள்ளைக் கலி தீர்க்கவந்த

பெருமாளே கண்வளராய்”

ஒரு குழந்தை அழுகிறது. காரணம் தெரியவில்லை. பலவிதமாகச் சிந்தித்துத் தாய் பாடுகிறாள் :

“மாமன் அடிச்சாரோ

மல்லிகைப் பூச்செண்டாலே?

அத்தை அடிச்சாளோ

அரளிப் பூச்செண்டாலே?”

என்று பாடி, கடைசியில் ‘உன் கண்ணீர் கண்டால் அப்பா நொந்திடுவார். சின்ன இமைக் கதவை மூடிப் பொருத்திடுவாய்’ என்று பாடி முடிப்பாள்.

தனிப் பாடல்களில் தாலாட்டு : *இக்காலத்தில் தனிப் பாடல்களில் தாலாட்டுப் பாடல்களும், இசைத் தட்டு வடிவிலும், சி.டி. பிளேயர் மூலமும், யு–டியூபிலும் வெளிவருகின்றன. அவற்றுள் சிலவற்றைப் பார்க்கலாம்.*

ஒரு தாய், பிள்ளை வரம் வேண்டித் தவமிருந்து பெற்ற பிள்ளைக்காகவே வாழ்வதாகப் பாடுகிறாள் :

“வரம் கோடி வாங்கி வந்த அரும்பே

எங்கள் குலம் காக்க கையில் வந்த கரும்பே

உனக்காகத்தான் இந்த ஜென்மம் எடுத்தேன்

உயிருக்கு உயிராக உன்னை நினைத்தேன்”

இன்னொரு பாடலில் குழந்தையின் அழகை வர்ணித்து ஒரு தாய் பாடுகிறாள் :

“அந்தியிலே பூத்த சந்திரனே

அல்லி விழிகளை மூடு

சந்தன மல்லிகைப் பாதம்

சாகசம் செய்திடும் தேனே

வராமல் வந்த மாமணியே

வண்ண விழிகளை மூடு”



திரைப்படங்களில் தாலாட்டு : *அக்காலம் முதல் இக்காலம் வரை திரைப்படங்களில் பல தாலாட்டுப் பாடல்கள் வந்துள்ளன. அவற்றுள் சிலவற்றை மட்டும் பார்க்கலாம்.*

‘பராசக்தி’ திரைப்படத்தில் “கண்ணே! கண்மணியே கண்ணுறங்காயோ” என்ற பாடல் புகழ்பெற்ற பாடல். ‘மகாதேவி’ திரைப்படத்தில் வரும் தொட்டில் தாலாட்டுப் பாடல் இன்றும் பாடப்படுகிறது.

“சிங்காரப் புன்னகை கண்ணாறக் கண்டாலே

சங்கீத வீணையும் ஏதுக்கம்மா?

மங்காத கண்களில் மையிட்டுப் பார்த்தாலே

தங்கமும் வைரமும் ஏதுக்கம்மா?”

சமூகப் படங்கள், குடும்பப் பாங்கான படங்கள் பிரபலமாகி வந்த கால கட்டத்தில், ‘பாசமலர்’ படம் வந்தது. அதில் அண்ணன் – தங்கை பாடும் தாலாட்டுப் பாடல் “மலர்ந்து மலராத” என்று தொடங்கும். அப்

பாடலில் கீழ்க்கண்ட வரிகள் இலக்கியநயம் கொண்டவை :

“நதியில் விளையாடி
கொடியில் தலைசீவி
நடந்த இளம் தென்றலே
வளர்பொதிகை மலை தோன்றி
மதுரை நகர் கண்டு பொலிந்த
தமிழ் மன்றமே!”

ஒரு குழந்தை ஒரு நாளில் 18 மணி நேரம் தூங்க வேண்டுமாம். வயதாக, வயதாகத் தூக்கத்தின் அளவு மாறுபடும். “சித்தி” படத்தில் வரும் தாலாட்டுப் பாடல் ஒன்று :

“பெண்ணாகப் பிறந்தவர்க்கு
கண்ணுறக்கம் இரண்டு முறை
பிறப்பில் ஒரு தூக்கம்
இறப்பில் ஒரு தூக்கம்
இப்போதுவிட்டால்,
எப்போதும் தூக்கமில்லை
என்னருமைக் கண்மணியே கண்ணுறங்கு
கண்ணுறங்கு”



உயர்ந்த பதவி!



தமிழ்நாட்டில் ராஜாஜி மந்திரி சபை அமைத்த நேரம்.

ராஜாஜியின் பக்தரும், ஆதரவாளருமான பேராசிரியர் கல்கி அவர்களுக்கு ராஜாஜி மந்திரிசபையில் நிச்சயம் ஒரு மந்திரி பதவி கிடைக்கும் என்று எல்லோரும் நம்பினர்.

ஒருமுறை கல்கியின் நண்பர் ஒருவர் கல்கியைச் சந்தித்தபோது, இந்த விசயத்தைப் பற்றி விசாரித்தார். கல்கி பளிச்சென்று பதில் சொன்னார் :

“என்னைப் பொறுத்தமட்டில் ‘கல்கி’ பத்திரிகையின் ஆசிரியர் பதவியைவிட உயர்ந்த ஒன்று இருப்பதாக நினைப்பதற்கில்லை!”

- **பே.சண்முகம்,** செங்கோட்டை

கணவனைத் தூளியில் வைத்து மனைவி பாடும் பாடலும் உண்டு.

“கண்ணன் ஒரு கைக்குழந்தை
கண்கள் சொல்லும் பூங்கவிதை
கன்னம் சிந்தும் தேனமுதை
கொண்டு செல்லும் என் மனதை”

ஆண்களும் தாலாட்டுப் பாட விரும்புகிறார்கள். “பெற்றால்தான் பிள்ளையா” படத்தில் வரும் தாலாட்டுப் பாடல்.

“செல்லக் கிளியே மெல்லப் பேசு
தென்றல் காற்றே மெல்ல வீசு
தூங்கும் மன்னவன் தூங்கட்டுமே
தொடரும் கனவுகள் தொடரட்டுமே”

தலைவன், தலைவிக்குத் தாலாட்டுப் பாட, தான் தாயாக வர விரும்புகிறான். “பிராப்தம்” படப்பாடல் இதோ :

“தாலாட்டுப் பாடித் தாயாக வேண்டும்
தாளாத என்னாசை செல்லம்மா
வெகுநாளாக என் ஆசை செல்லம்மா”

இதேபோல “ஏழைப் பங்காளன்” படத்தில் தாயாக மாறவா, தாலாட்டுப் பாடவா, தூங்காத கண்களைத் தூங்க வைக்கவா’ என்று பாடப்படுகிறது.

“பார்த்தால் பசி தீரும்” படத்திலிருந்து ஒரு பாடல் :

“பிள்ளைக்குத் தந்தை ஒருவன்
நம் எல்லோருக்கும் தந்தை இறைவன்
நீ ஒருவனை நம்பி வந்தாயோ
இல்லை இறைவனை நம்பி வந்தாயோ”

என்று வருகிறது. யார் வேண்டுமானாலும் தாலாட்டுப் பாடலாம். ஆனால், குழந்தை தூங்க வேண்டும்.

அமைதியான சூழ்நிலையில் இந்தத் தாலாட்டுப் பாடல்களைக் கேட்டால், மனம் அமைதி அடையும். நல்ல தூக்கம் வரும். எல்லாமே கருத்தாழமிக்கப் பாடல்கள். நாமும் தாலாட்டுப் பாடுவோம். தாயாக மாறுவோம். தூங்காமல் தவிப்பவர்களைத் தூங்க வைப்போம். ●

கட்டுரை

அருளாளர்கள் காட்டும் நல்ல நாளும் தீய நாளும்

பே. சா. கர்ணசேகரன்

எந்த ஒரு செயலையும் நல்ல நாளில் தொடங்கும் வழக்கம் இன்று நம்மிடையே இருக்கிறது. இந்த வழக்கம் அன்றும் இருந்திருக்கிறது. அன்றைய இலக்கண, இலக்கிய நூல்களில் இதற்குச் சான்றுகள் உள்ளன.

"நாளும் புள்ளும் பிறவத்தின் நிமித்தமும்" (தொல்.பொருள்.88) என்ற ஒல்காப்புகழ்த் தொல்காப்பிய நூற்பா, இலக்கண நூற்சான்றுகளில் ஒன்று. நல்ல நாள், தீய நாள், பறவைகள் முதலியன குறுக்கிடும் சகுனங்கள் என்று அதற்கு விளக்கம் சொல்லியது இளம் பூரணரின் இனிய உரை.



"நன்னாள் வதுவை கூடி" என்ற நல்ல நற்றிணைப் பாடலடி (127) இலக்கிய நூற் சான்றுகளில் ஒன்று. நல்ல நாளில் திருமணம் செய்தனர் என்று அது தெரிவிக்கிறது.

இவ்வாறு நல்ல நாள் பார்த்து எச்செயலையும் தொடங்கும் வழக்கம் பெருவழக்காக இருந்த அக்காலத்திலேயே, நல்வினை உடையார்க்குத் தீயநாள் என்று எதுவுமில்லை, எல்லா நாளும் நல்ல நாளே என்றொரு குரல் எழுந்தது. அக்குரலைப் பழமொழி நானூறு என்ற அக்கால இலக்கியம் இப்படிப் பதிவு செய்துள்ளது.

"இதுமன்னுந் தீதென்று இசைந்ததூஉம் ஆவார்க்கு

அதுமன்னும் நல்லதே யாகும் –

மதுமன்னும்

வீநாறு கானல் விரிதிரைத்

தண்சேர்ப்ப!

தீநாள் திருவுடையார்க்கு இல்" (235).

இக்கருத்துக்கு மதிப்புக்கூட்டி, இறைவனை நினைத்தலாகிய அல்லது இறைவனை வணங்குதலாகிய நல்வினை உடையார்க்குத் தீயநாள் என்று எதுவுமில்லை. எல்லா நாளும் நல்ல நாளே என்று உரைத்தார்கள் பின்னர் வந்த பக்தி இயக்கப் பாவலர்கள்.

"சென்றநாள் செல்லாத செங்கண்மால் எங்கள்மால் / என்றநாள் எந்நாளும் நாளாகும்" *(திவ்வியப் பிரபந்தம் – 2298) என்பது பேயாழ்வாரின் மதிப்புக் கூட்டிய உரை.*

"இட்டநும்அடி ஏத்துவார் இகழ்ந்து / இட்டநாள், மறந்திட்ட நாள் கெட்ட நாள்" *(திருமுறை – 7 : 489) என்பது சுந்தரரின் மதிப்புக் கூட்டிய உரை.*

இம்மதிப்புக் கூட்டிய மணி உரைகளைச் சமய சமரசம் பாடிய தனிப்பெருங்கவி தாயுமானவர்,

"திருந்து சீர்அடித் தாமரைக்கு

அன்புதான் செய்யப்

பொருந்து நாள், நல்ல புண்ணியம்

செய்யும் நாள்; பொருந்தாது

இருந்தநாள், வெகு தீவினை

இழைத்த நாள்; என்றால்

அருந்தவா ! உனைப் பொருந்துநாள்

எந்தநாள் அடிமை?"

(எனக்கு எனச் செயல் – 14)




என்று எதிரொலித்து உள்ளார்.

இவ்வாறு, இறைவனை நினைக்கும் நாளே நல்ல நாள். அவனை மறந்த நாளே தீய நாள் என்று அருளாளர்கள் கூற, சோதிட சாத்திரமோ, நல்ல கிழமை, நல்ல கோள் (நல்ல நட்சத்திரம்), நல்ல திதி, நல்ல பிறை (நல்ல திதி), நல்ல யோகம் ஆகிய அனைத்தும் பொருந்தி வரும் நாளே நல்ல நாள் என்று கூறுகிறது. இதைப் பதினெண் கீழ்க்கணக்கு நூலான சிறுபஞ்சமூலம்,

> "நாள்கூட்டம் மூர்த்தம் அவற்றோடு நன்றாம்அக்
> கோள்கூட்டம் யோகம் குணன் உணர்ந்து –
> தோள்கூட்டல்
> உற்றானும் அல்லானும் ஐந்தும் உணர்வானால்
> பெற்றான்நாட் கொள்க பெரிது" (44)

என்று குறிப்பிடுகிறது.

அதே சோதிட சாத்திரம், தீய நாள் எது என்று கூறும் போது, தீய கிழமை, தீய கோள், தீய திதி, தீய பிறை, தீய யோகம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்று பொருந்தி வந்தாலும் போதும், அப்படிப் பொருந்தி வரும் நாளே தீய நாள் என்று கூறுகிறது.



இந்த நிலையில், அருளாளர்கள் உரைத்ததையா? அல்லது சோதிட சாத்திரம் உரைத்ததையா? எதை ஏற்பது என்று கேட்கலாம். பின்வரும் காரணங்களால் அருளாளர்கள் உரைத்ததை ஏற்பதே ஏற்புடைத்தாகும்.

1. இறைவனைவிட, அடியார்கள் உயர்ந்தவர்கள் என்பது நம் சைவ, வைணவ சமயங்களில் நிலவும் உயர்ந்த கொள்கைகளில் ஒன்று. எனவே, இறைவன் அருளிய வேதங்களில் ஒன்றான சோதிடத்தைவிட, அருளாளர்கள் உரைத்ததே உயர்ந்ததாகும். உயர்ந்ததை ஏற்பதே உன்னதம் ஆகையால், அருளாளர்கள் உரைத்ததையே ஏற்க வேண்டும்.

2. திருமால், மனிதரைத் திருத்த முதலில் வேதங்களையும் அதன் அங்கங்களையும் அருளினார். அவற்றால் மனிதர் திருந்தாமை கண்டு, தாமே இப்பூவுலகில் அவதரித்து வழிகாட்டினார். அப்படியும் திருந்தாத மனிதரைக் கொண்டு மனிதரைத் திருத்த ஆழ்வார், ஆச்சாரியப் பெருமக்களை அனுப்பினார். எனவே, மனிதரெல்லாம் அப்பெருமக்கள் உரைத்ததைத் தானே ஏற்க வேண்டும் என்று இறைவன் கருதியிருப்பான். இறைவன் கருத்துக்கு மாறாக நடப்பது அடியார்க்கு அழகன்று. எனவே, அருளாளர்கள் உரைத்ததை ஏற்பதே பொருத்தமாகும்.

3. தீஞ்சுவைத் தண்ணீர் இருக்க, அப்பன் வெட்டிய கிணறு என்பதற்காக அதன் உப்புத் தண்ணீரை யாராவது அருந்துவார்களா? அருந்த மாட்டார்கள். அதுபோல அருளாளர்கள் காட்டிய மிருதுவான பாதை இருக்க, இறைவன் அருளியது என்பதற்காகச்


சுந்தரர்


ஞானசம்பந்தர்

சோதிடம் காட்டும் கரடு முரடான பாதையைத் தேர்ந்தெடுக்கலாமா?

4. இறைவனை மறவாது நினைக்க வேண்டும் என்ற ஒரே ஒரு நிபந்தனையோடு பயணிக்க வேண்டிய பாதை அருளாளர்கள் காட்டிய பாதை. கிழமை நல்லதாக இருக்க வேண்டும். கோள் நல்லதாக இருக்க வேண்டும் முதலிய பல நிபந்தனைகளோடு பயணிக்க வேண்டிய பாதை சோதிடம் காட்டும் பாதை. குறைந்த நிபந்தனைகளோடு பயணிக்கக்கூடிய பாதையைத் தேர்ந்தெடுப்பதே அறிவுடைமை என்றால், அருளாளர்கள் காட்டிய பாதையைத்தானே தேர்ந்தெடுக்க வேண்டும்.

5.`சோதிட சாத்திரத்தின்படி, ஒரு நாள் மிகமிகத் தீய நாளாகவே இருந்தாலும், அந்நாளில் இறைவன் நினைக்கப்படுவானானால் அல்லது வணங்கப்படுவானானால், அந்த நாள் மிகமிக நல்ல நாளாகும்.

“நாளும் நாதன் அமர்கின்ற நாகேச்சரம் நண்ணுவார்/ கோளும் நாளுந் தீயவேனும் நன்காம் குறிக்கொண்மினே” (திருமுறை – 2 : 1294) என்கிறார் திருஞானசம்பந்தர்.

இதிலிருந்து ஒன்று பெறப்படுகிறது. அது, சோதிட சாத்திரத்தின்படி ஒருநாள் மிகமிக நல்ல நாளாகவே இருந்தாலும், அந்த நாளில் இறைவன் நினைக்கப்படவில்லையானால் அல்லது வணங்கப்படவில்லையானால், அந்த நாள் மிகமிகத் தீய நாளாகும் என்பதாகும். “பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே” (திருமுறை – 6 : 11) என்கிறார் திருநாவுக்கரசர்.

சோதிட சாத்திரத்தின்படி, தோராயமாகக் கணக்கிட்டால்கூட ஓராண்டில் 55 சதவிகித நாட்கள் தீய நாட்களாக இருப்பது தெரிய வரும். சான்றுக்காக, 365 நாட்களைக் கொண்ட 2019–ஆம் ஆண்டை எடுத்துக் கொண்டு கணக்கிட்டதன் விவரம் வருமாறு :

தீய நாட்கள் : செவ்வாய்க்கிழமை – 53 (14.52%), சனிக்கிழமை – 52 (14.25%), அட்டமி – 24 (6.57%), நவமி – 24 (6.57%), கரிநாள் – 35 (9.59%), பிரதமை – 13 (3.56%). ஆக மொத்தம் 201 தீய நாட்கள் (55.07%).

இன்னும் துல்லியமாகக் கணக்கிட்டால் 80 சதவிகிதத்திற்கும் அதிகமான நாட்கள் தீய நாட்களாக இருக்கும் என்று கூறுகின்றனர். அந்த 80 சதவிகிதத்திற்கும் அதிகமான நாட்களைத் தீய நாட்களாக ஏற்றுக் கொள்ளும்போது, அவை நமது முன்னேற்றத்திற்குத் தடைக் கற்களாக அமைந்துவிடும்.

ஆனால், மேற்சொன்ன முறையில் அவற்றை நல்ல நாட்களாக ஆக்கிக் கொள்ளும்போது, அவையே நமது முன்னேற்றத்திற்குப் படிக்கற்களாக அமைந்துவிடும். எனவே, இறைவனை நினைக்கும் நாளே நல்ல நாள் என்று அருளாளர்கள் உரைத்ததையே ஏற்க வேண்டும்.

இவ்வாறு எந்த வகையில் சிந்தித்தாலும் அருளாளர்கள் உரைத்ததான இறைவனை நினைக்கும் அல்லது வணங்கும் நாளே நல்ல நாள்; அவனை நினைக்காத அல்லது வணங்காத நாளே தீய நாள் என்று ஏற்பதே நன்று என்பது நனி விளங்குகிறது. ●


Sakthi
as pure as mother's love
தூய்மையின் வலிமையுடன்
சக்தி பால்
தாய் பாசம் போல் தூய்மையானது
Sakthi
MILK
SPECIAL
250
Pasteurised, Homogenised, Standardised Milk
Sakthi
MILK
SUPREME
Sakthi
MILK
SELECT
Pasteurised
Toned Milk
500ml
Available in: 250 ml, 500 ml & 1 litre
பால் | தயிர் | பனீர் | வெண்ணெய் | நெய் | டெய்ரி ஒயிட்னர் | ஸ்கிம்டு பால் பவுடர்
ABT FOODS
www.sakthidairy.com, Follow us on SAKTHI DAIRY For trade enquiry: 1800 102 3040 (Toll Free)

இம்மாத ராசி பலன்

**"என்ன நடக்கலாம் என்பதை அனுமானிப்பவன் சோதிடன்
என்ன நடக்கும் என்பதைத் தீர்மானிப்பவன் இறைவன்!"**

'ஜோதிடத் திலகம்'
க. தில்லையம்பலம்

1.01.2020 அன்று கோள்கள் நிலை

			ராகு
சந்திரன்	06.1.2020 சுக். – கும்பம் 13.1.2020 புதன் – மகரம் 14.1.2020 சூரி. – மகரம் 24.1.2020 சனி – மகரம் 30.1.2020 புதன் – கும்பம்		
சுக்கிரன்			
சூரியன் கேது–சனி குரு–புதன்	செவ்வாய்		



மேஷ ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் முற்பாதியில் சூரியன் 9–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், தர்மார்த்த காரியங்களில் ஈடுபாடு கொள்ளலாம். சில காரியங்களில் சொற்பத் தடைகள் ஏற்பட்டு, பின்னர் வெற்றி ஏற்படும். குரு அஸ்தங்கதம் அடைந்து சில நாட்கள் சஞ்சரிப்பதால், சிலருக்குப் பொருளாதார ரீதியாகச் சிரமங்கள் ஏற்படலாம். தொலை தூரங்களிலிருந்து நற்செய்திகள் வரலாம். கேது – புதன் – சனி சேர்க்கை ஏற்படுவதால், அரிய பொருட்களைச் சிலர் வாங்கும் யோகம் உண்டு.

3–இல் இராகு சஞ்சரிப்பதால், வெளியூர், வெளிநாட்டு யாத்திரைப் பிராப்தியும் ஏற்படும். திருமணக் காரியங்கள் கைகூடும். இந்த ஆண்டு சுப காரியங்களுக்கு நல்லது. சுக்கிரன் 6–ஆம் தேதி முதல் லாபஸ்தானத்தில் சஞ்சரிப்பதால், வாழ்க்கைத் துணைவர் மூலமோ, இதர பெண்கள் மூலமோ நன்மை ஏற்படும். செவ்வாய் 8–ஆம் வீட்டில் தொடர்ந்து சஞ்சரித்து வருவதால், போர்க்குணம் அவ்வப்போது ஏற்படும். சிலருக்கு வம்பு தேடி வரும். 24–ஆம் தேதி முதல் சனி 10–ஆம் வீட்டிற்குப் பெயர்ச்சி ஆவதால், உங்களது தொழில், அந்தஸ்து வரும் காலங்களில் மங்கும் வாய்ப்புண்டு.



ரிஷப ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் முற்பாதியில் சூரியன் 8–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், எதிர்பாராத செலவுகள், நிகழ்ச்சிகள், உடல் உபத்திரவங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு. மாதத்தின் பிற்பாதியில் 9–இல் சூரியன் சஞ்சரிப்பதால், காரியத் தடைகள் ஏற்படும். ஒன்றுக்கு மேற்பட்ட முயற்சிகளாலும் நேர்மையான நடவடிக்கைகளாலும் காரியங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். 6–ஆம் தேதி முதல் சுக்கிரன் 10–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் தொழில், உத்தியோகத் துறைகளில் பெண்களால் உபத்திரவம் ஏற்படலாம்.

7–இல் செவ்வாய் சஞ்சரிப்பதால், கணவன் – மனைவியரிடையே சச்சரவு, கருத்து வேற்றுமை ஏற்படும். இம்மாதம் 24–ஆம் தேதி முதல் உங்களுக்கு அட்டமத்துச் சனி நிறைவு பெறுவதால், கடந்த இரண்டரை ஆண்டுகள் அனுபவித்து வந்த சிரமங்கள் அகன்றுவிடும். குரு 8–இல் சஞ்சரிப்பதால், பொருள் முடக்கம், தொழில் ரீதியான முடக்கம் இருந்துவரும். வரும் அக்டோபர் மாதம் வரை இப்பலன் நடைபெறும். திருமணம் முதலிய சுப

காரியங்கள் நிறைவேற வாய்ப்புக் குறைவு. ராகு 2–இல் சஞ்சரிப்பதால், உங்களது பேச்சால் உங்களுக்குத் துன்பம் வரும்.

மிதுனம்



மிதுன ராசி அன்பர்களுக்கு, இம்மாதத்தின் முற்பாதியில் சூரியன் 7–இல் சஞ்சரிப்பதாலும், பிற கிரகங்களின் சேர்க்கை ஏற்படுவதாலும் சில எதிர்ப்புகளைச் சந்திக்க நேரிடலாம். மாதத்தின் பிற்பாதியில் 8–ஆம் வீட்டில் சூரியன் சஞ்சரிப்பதால், எதிர்பாராத செலவு, விரயம், தேக நலிவு ஏற்படலாம். 6–ஆம் தேதி முதல் 9–இல் சுக்கிரன் சஞ்சரிப்பதால், புத்திர வர்க்கத்தாருக்கு நன்மை ஏற்படலாம். குரு 7–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் திருமண முயற்சிகளை மேற்கொள்ளலாம். சிலருக்கு இவ்வருடம் கடன் உபாதைகளிலிருந்து விடுபடவும் உடல் நலிவுகள் அகன்றிடவும் வாய்ப்புள்ளது.

செவ்வாய் 6–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் தொழில், உத்தியோகத் துறைகளில் எதிர்பார்ப்புகள் ஈடேறும் வாய்ப்புண்டு. ராசி மீது ராகு சஞ்சரிப்பதால், அலைச்சல் அதிகம் இருந்து வரலாம். வாலிப வயதினர், இள வயதினர் சிலர் வீட்டை விட்டு விலகிச் செல்ல வாய்ப்புண்டு. இம்மாதம் சனி பெயர்ச்சியாகி 8–ஆமிடம் செல்வதால், தொழில், உத்தியோகத் துறைகளில் வரும் இரண்டரை ஆண்டுகளுக்குக் கவனம் செலுத்த வேண்டும். அவசரப்பட்டுத் தொழிலை விட்டுவிட எண்ணம் வரலாம், கவனம் தேவை.

கடகம்



கடக ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் முற்பாதி அனுகூலமாகக் காணப்படுகிறது. தொழில் உத்தியோகத் துறைகளில் எதிர்பார்ப்புகள் ஏற்படும். தன வசதி ஏற்படும். அத்தியாவசியம் கருதிச் சிலர் கடன் வாங்கவும் கூடும். 6–இல் குரு சஞ்சரிப்பதால், இந்த ஆண்டு ஏதேனும் ஒரு விதத்தில் கடன் படுவீர்கள். மாதத்தின் பிற்பாதியில் 7–இல் சூரியன் சஞ்சரிப்பதால், குடும்பத்தில் சில எதிர்ப்புகள், குழப்பங்கள் ஏற்பட்டு நிவர்த்தியாகும். சனிப்பெயர்ச்சி உங்களுக்கு வரும் இரண்டரை ஆண்டுக்காலம் கலப்பான நன்மை, தீமைகளை ஏற்படுத்தும்.

செவ்வாய் இம்மாதம் 5–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், திடமான முடிவெடுத்துச் செயல்பட முடியாது. அடிக்கடி உங்கள் முடிவுகளை மாற்றிக் கொள்வீர்கள். சுக்கிரன் 8–இல் சஞ்சரிப்பதால், வாகனப் பீடை ஏற்படும். ராகு 12–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், குலதெய்வ வழிபாடு நல்லது. உங்களை நல்வழியில் கொண்டு செல்லும். 6–இல் கேது சஞ்சரிப்பதாலும், குரு சேர்க்கை பெறுவதாலும் பெரியோர்கள், குருமார்களைப் பகைத்துக் கொள்ள வேண்டாம். திருமணக் காரியங்களில் உங்களது ஜனன ஜாதகத்தை ஆய்வு செய்து இறங்குவது நல்லது.

சிம்மம்



சிம்ம ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் முற்பாதியில் காரியத் தடைகள் ஏற்படலாம். மாதத்தின் பிற்பாதியில் குழப்பங்கள் அகன்றுவிடும். தொழில், உத்தியோகத் துறைகளில் அனுகூலம் ஏற்படும். தன வசதி ஏற்படும். எதிர்ப்புகள் அகன்றுவிடும். மனதில் தைரியம், தன்னம்பிக்கை கூடும். சுக்கிரன் 6–ஆம் தேதி முதல் 7–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், பெண்களால் ஒரு சிலர் எதிர்ப்பை அடைவர். இள வயதினர் பின் விளைவுகளை யோசித்து முன்னெச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும்.

செவ்வாய் 4–இல் சஞ்சரிப்பதால், பெற்றோரின் பேச்சைக் கேட்டு நடப்பது நல்லது. உதாசீனம் செய்யலாகாது. குரு 5–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் ஒரு சிலருக்குப் புத்திரப் பிராப்தி ஏற்படும் வாய்ப்புண்டு. கேது 5–இல் சஞ்சரிப்பதால், சிற்சில விஷயங்களில் சுதந்திரமாக முடிவெடுத்துச் செயல்படுவது நல்லது. சனி 24–ஆம் தேதி முதல் 6–இல் சஞ்சரிக்க இருப்பதால், வரும் இரண்டரை ஆண்டுக்காலம் நன்மையுண்டு. பதவி, அந்தஸ்து, ஆஸ்தி, சுகம் ஏற்படும். ராகு 11–இல் சஞ்சரிப்பதால், தேவையான நேரத்தில் தேவையான உதவி கிட்டும்.

கன்னி ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் முற்பாதியில் அலைச்சல், செலவு, வீண் விரயம், உடல் நலிவுகள் தோன்றி மறையும். பெற்றோர்க்கு உபத்திரவம் வரக்கூடும். மாதத்தின் பிற்பாதியில் குழந்தைகள் வழியில் செலவும், கவலையும் ஏற்படும். செவ்வாய் 3–ஆம் வீட்டில் ஆட்சி பெற்றுச்



சஞ்சரிப்பதால், தன்னம்பிக்கை குறையாது. கடின முயற்சிகளால் சில விஷயங்களில் வெற்றி காணலாம். குரு 4–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், வீட்டைத் திருத்தியமைக்கலாம், புதுப்பிக்கலாம். சுய தொழில் தொடர்பாகச் செலவினங்கள் ஏற்படலாம்.

24–ஆம் தேதி முதல் சனி 5–ஆம் வீட்டிற்குப் பெயர்ச்சியாவதால், எதிர் வரும் இரண்டரை ஆண்டுகள் பெற்ற குழந்தைகளின் நலன் குறித்தே கவலை இருந்துவரும். 6–ஆம் தேதி முதல் சுக்கிரன் 6–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், உங்களது காசு, பணம் வம்பாலும், வழக்காலும் விரயமாகலாம். ராகு 10–இல் சஞ்சரிப்பதால் இடமாற்றம், தொழில் மாற்றம் குறித்த சிந்தனைகள் தொடரும். கேது 4–இல் சஞ்சரிப்பதால், பூர்வீகச் சொத்துக்கள், தாய்வழி வர்க்கத்தார் மூலம் பிரச்சனைகள் சிலருக்கு ஏற்படும். திருமணக் காரியம் ஈடேற வாய்ப்பில்லை.



துலாம் ராசி அன்பர்களுக்கு, சூரியன் இம்மாதம் முற்பாதியில் தொழிலில் நன்மை, பொருளாதார அபிவிருத்தி ஏற்படும். மாதத்தின் பிற்பாதியில் குடும்பக் கவலை கூடும். அலைச்சல் மிகும். உடல் நலிவுகள் அவ்வப்போது தோன்றி மறையும். இரண்டில் செவ்வாய் சஞ்சரிப்பதால், விதண்டாவாதம் பேசுவீர்கள். வீண் செலவு செய்வீர்கள். வீண் தகராறுகள் ஏற்படக்கூடும். குரு 3–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், உணர்ச்சிவசப்பட்டுக் கோபதாபங்களை அதிகப்படுத்திக்கொள்ள வேண்டாம். தெரியாத தொழிற்சிந்தனைகள் வேண்டாம்.

சுக்கிரன் 6–ஆம் தேதி முதல் அதிர்ஷ்ட வாய்ப்பை ஏற்படுத்தலாம். சரளமாகக் காசு, பணம் புழங்கும். ராகு 9–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், வெளிதேசத் தொடர்புகள் ஏற்படலாம். கோர்ட்டு விவகாரங்கள் இருப்பின் தற்சமயம் முடிவு ஏற்படாது. சனிப்பெயர்ச்சி உங்களுக்கு யோக பலன்களை ஏற்படுத்தும் வாய்ப்பு இல்லை. குடும்பக் கவலைதான் அதிகரிக்கும். பூர்வீகச் சொத்துக்கள் சம்பந்தப்பட்டு விவகாரங்கள் ஏற்படலாம். தாய்வழி வர்க்கத்தாருக்கு வரும் இரண்டரை ஆண்டுகள் ஆகாது. திருமணக் காரியங்கள் தாமதமாகும்.



விருச்சிக ராசி அன்பர்களுக்கு, இம்மாதத்தின் முற்பாதியில் தனவசதி ஏற்படலாம். சூரியன் பிற கிரகங்களுடன் சேர்க்கை ஏற்பட்டுச் சஞ்சரிப்பதாலும், குருவின் சஞ்சாரத்தாலும் அவ்வாறு ஏற்பட வாய்ப்புண்டு. குடும்பத்தில் சந்தோசம் அதிகரிக்கும். உங்கள் வாக்குச் சாமர்த்தியத்தால் நன்மை அடையலாம். சனிப்பெயர்ச்சி 3–ஆம் வீட்டில் ஏற்படுவதால் வரும் இரண்டரை ஆண்டுக் காலம் தொழில் துறையில் நன்மையும், பொருளாதார நன்மைகளும் கிட்டும். திருமணக் காரியங்கள் வரும் அக்டோபர் மாதம் வரை ஏற்படமார்க்கமுண்டு.

ராகு 8–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், தீயவர்களால் தொந்தரவு ஏற்படலாம். வழக்கு விவகாரங்கள் வரக்கூடும். செவ்வாய் ராசி மீது சஞ்சரிப்பதால், உங்களின் ஆரோக்கியம் கூடும். மனத்துணிவு அதிகரிக்கும். கோபதாபங்களும் அவ்வப்போது அதிகப்படலாம். அதிகக் கோபம் ஆகாது. கேது 2–இல் சஞ்சரிப்பதால், அளவாகச் செலவு செய்து சேமிக்க முயற்சிப்பது நல்லது. இதிகாசம், புராணம் முதலிய புண்ணிய நூல்களை வாசிப்பது, உபந்நியாசம் கேட்பது நல்லது.



தனுசு ராசி அன்பர்களுக்கு, இம்மாதத்தின் முற்பாதியில் சிரசு வலி, உஷ்ண ரோகம், மனக்குழப்பம் இருந்து வரும். மாதத்தின் பிற்பாதியில் பணத்தேவை கூடும். சிலர் கண்களில் சிறிது உபாதைகளை அடைவர். செவ்வாய் விரயஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் தூக்கம் கெடும். ஞாபக மறதி ஏற்படும். பொருள் விரயம் ஏற்படும். குரு ராசி மீது சஞ்சரிப்பதால், இவ்வருடம் கட்டுப்பாடான சூழ்நிலைகளில் வாழ வேண்டி வரும். அடிக்கடி குடும்பத்தில் கௌரவப் பிரச்சனைகள் தோன்றி மறையும்.

புதன் 13–ஆம் தேதி முதல் இரண்டில் சஞ்

சரிப்பதால் தொழில், உத்தியோகத் துறைகளிலும், வாழ்க்கைத் துணைவர் மற்றும் மாமன், மாமனார் வர்க்கத்தார் மூலம் நன்மை ஏற்படும் வாய்ப்புண்டு. ராகு 7–இல் சஞ்சரிப்பதால், மாற்று மதக் காரர்களுடன் தொழில் சம்பந்தமாகக் கூட்டு வைக்கச் சிலருக்குச் சந்தர்ப்பம் ஏற்படும். இம்மாதம் 24–ஆம் தேதி முதல் உங்களுக்கு ஜன்மச்சனி முடிந்து பாதச்சனி தொடங்குவதால், சற்று பயத்துடன் வாழ வேண்டி வரலாம். வரவு வந்தால், இணையான செலவும் வரும். உங்கள் வாய் வார்த்தையில் போதிய எச்சரிக்கை தேவை. திருமணக் காரியம் ஈடேறத் தற்சமயம் வாய்ப்பில்லை. ▲



மகர ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் முற்பாதியில் செலவு, விரயம், வாழ்க்கைத் துணைவருக்குச் சங்கடங்கள் ஏற்படலாம். மாதத்தின் பிற்பாதியில் பற்பல சிந்தனைகள் மனக்குழப்பங்களுக்கு ஆளாக நேரிடும். புதன் 13–ஆம் தேதி முதல் உங்கள் ராசி மீது சஞ்சரிப்பதால், எதையும் முன்னெச்சரிக்கையாக யூகித்துச் செயல்படுவீர்கள். சுக்கிரன் வாக்குஸ்தானத்தில் சஞ்சரிப்பதால், நல்ல வார்த்தைகளாலும், தனிப்பட்ட அறிவாற்றலாலும் உங்கள் காரியங்களை எளிதாக நிறைவேற்றிக் கொள்வீர்கள். பண வரவும் சிலருக்கு ஏற்படும்.

கேது, குரு 12–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், கற்பனைக்கெட்டாத கற்பனைகள் கனவில் தோன்றும். சிலருக்கு ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். சிலர் தர்ம ஸ்தாபனங்களை உருவாக்கக்கூடும். தான தர்மங்கள் செய்யலாம். ராகு 6–இல் சஞ்சரிப்பதால், அஜீரணக் கோளாறுகள் சிறிது தொந்தரவு கொடுக்க வாய்ப்புண்டு. சனி உங்கள் ராசி மீது சஞ்சரிப்பதால், 24–ஆம் தேதி முதல் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். உடல் நலத்தில் கவனம் வேண்டும். ▲



கும்ப ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் முற்பாதியில் சூரியன் லாபஸ்தானத்தில் சஞ்சரிப்பதால், பொருள் வரவு ஏற்படும். தொழில், உத்தியோகத் துறைகளில் அனுகூலம் ஏற்படும். ஒரு சிலர் பதவி சுகம் அடைவர். மாதத்தின் பிற்பாதியில் விரயஸ்தானத்தில் சூரியன் சஞ்சரிப்பதால், யோக பலன்களை எதிர்பார்க்க இயலாது. வாழ்க்கைத் துணைவர் மூலம் செலவுகள் வரக்கூடும். பாதகமான திசாபுத்தி நடைமுறையில் இருப்பின், அரசாங்க நிந்தனைகள் ஏற்படும்.

10–இல் செவ்வாய் சஞ்சரிப்பதால், உங்களது தகுதி, சூழ்நிலை அறிந்து உத்தியோகத் தலத்தில் நடந்துகொள்ள வேண்டும். திருமணக் காரியங்களில் இறங்கலாம். இந்த ஆண்டு சுப காரியங்களுக்கு ஏற்றது. 6–ஆம் தேதி முதல் சுக்கிரன் 1–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், சுக போகம் உண்டு. சனி 24–ஆம் தேதி முதல் மகர ராசியில் பிரவேசம் செய்ய இருப்பதால், ஏழரைச் சனியின் தாக்கம் உங்களுக்கு இனி ஏற்படும். வரும் இரண்டரை ஆண்டுக்காலம் விரயச்சனி என்பதால், சுபச் செலவு, தொழில் முதலீடு, வீடு, மனை வாங்கும் யோகம் ஏற்படும். ஒரு சிலர் குடும்பத்தைப் பிரிந்து வெளியூர், வெளிதேசம் சென்று ஜீவிப்பர். ராகு, கேதுக்கள் உங்களுக்குச் சாதகமாகச் சஞ்சரிக்கும். ▲



மீன ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் முற்பாதியில் சூரியன் 10–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், நினைத்த காரியங்களை நினைத்தபடி முடித்துக் கொள்ளலாம். தொழில் துறையிலும், பொருளாதார விஷயங்களிலும் நன்மை, அபிவிருத்தி ஏற்படும். மாதத்தின் பிற்பாதியில் வழக்கு, வியாஜ்ஜியங்களில் அனுகூலச் செய்தி கிட்டும். ஒரு சிலர் நிதி நிறுவனங்கள் மூலம் கடன் கிடைக்கப் பெறுவர். 12–ஆம் வீட்டில் சுக் கிரன் சஞ்சரிப்பதால், வாகனப்பீடை ஏற்படலாம். ஆடம்பரப் பொருள்கள் பின்னமாகலாம்.

செவ்வாய் 9–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், கருவுற்ற பெண்கள் கவனமாக இருக்க வேண்டும். சனி லாபஸ்தானத்தில் 24–ஆம் தேதி முதல் சஞ்சரிக்க இருப்பதால், வரும் இரண்டரை ஆண்டுகள் உங்களுக்கு யோகமுண்டு. வசதி வாய்ப்புகள் கூடும். வயது முதிர்ந்தவர்களின் நட்பும், நன்மையும் ஏற்படும். தொழில், உத்தியோகத் துறைகளில் இரட்டிப்பான நன்மை ஏற்படும். 4–இல் ராகு சஞ்சரிப்பதால் குடியிருக்கும் வீட்டைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். திருமண வாய்ப்புகள் ஜனன ஜாதகத்தை ஆய்வு செய்து, அதன்படி நடந்து கொள்ள வேண்டும். ●

கட்டுரை

மறந்து போன பாரம்பரிய உணவு முறைகள்!



அந்தக் காலத்திலேயே என்றும், வழி வழியே என்றும், தாத்தா பாட்டி காலத்தில் என்றும் சொல்கின்ற சொல் வழக்கே, 'பாரம்பரியம்' என்று கூறப்பட்டது. ஆனால், பாரம்பரியம் என்பது நாம் எந்த ஒரு செயலையும் செய்யும்போது அதன் தன்மை மாறாமல் செய்யும் செயலே பாரம்பரியம் ஆகும்.

இங்குப் பாரம்பரிய உணவு முறைகள் பற்றியும், நாம் அன்றாடம் உண்ணும் உணவு முறையாகவும், ஆரோக்கியமாகவும், சத்துள்ளதாகவும் இருக்க வேண்டும்; அதே சமயம் நாம் உண்ணும் உணவை எப்படி முறையாக உண்ண வேண்டும் என்பது பற்றியும் பார்க்கலாம்.

பழந்தமிழரின் உணவு உட்கொள்ளும் முறைகள் : அருந்துதல் – மிகச் சிறிய அளவே உட்கொள்ளல், உண்ணல் – பசி தீர உட்கொள்ளல், உறிஞ்சல் – வாயைக் குவித்துக்கொண்டு நீரியற் பண்டத்தை ஈர்த்து உட்கொள்ளல், குடித்தல் – நீரியல் உணவை (கஞ்சி முதலியவை) சிறிது சிறிதாகப் பசி நீங்க உட்கொள்ளல், தின்றல் – தின் பண்டங்களை உட்கொள்ளல், துய்த்தல் – சுவைத்து மகிழ்ந்து உட்கொள்ளல், நக்கல் – நாக்கினால் துழாவி உட்கொள்ளல், நுங்கல் – முழுவதையும் ஒரு வாயால் ஈர்த்து உறிஞ்சி உட்கொள்ளல், பருகல் – நீரியற் பண்டத்தைச் சிறுகக் குடிப்பது, மாந்தல் – பெருவேட்கையுடன் மடமடவென்று உட்கொள்ளுதல், மெல்லல் – கடிய பண்டத்தைப் பல்லால் கடித்துத் துகைத்து உட்கொள்ளுதல், விழுங்கல் – பல்லுக்கும், நாக்குக்கும் இடையே தொண்டைக்குழி வழியே உட்செலுத்துதல்.

தமிழர்களின் விருந்தில் போடப்படும் உணவுப் பண்டங்களே சிறந்த விருந்து என்று இன்றளவும் உலகம் முழுவதும் பேசப்படுகிறது. இதில் மிகச்சிறந்த உணவாக, அனைத்துத் தரப்பு மக்களின் அதிக ஓட்டுகளைப் பெற்று முதலிடம் பெறுவது நமது இட்லி, சாம்பார்தான்.

இந்த இட்லிக்குத் தொட்டுக் கொள்ள எவ்வகைச் சட்னி வேண்டுமானாலும் இணையாக இருக்கும். உடல்நலக் குறைவால் இருப்பவர்களுக்கும், வயதானவர்களுக்கும் டாக்டர்கள் முதலில் பரிந்துரை செய்வது இந்த இட்லியைத்தான்.

இட்லிப் பானையில் தண்ணீர் ஊற்றி, இட்லித் தட்டில் துணி போட்டு, அதில் மாவை ஊற்றி வேகும் இட்லி மிகவும் ஆரோக்கியமானதாகும்.

இந்த இட்லியை வேக வைத்து எடுத்து முறை மாறித் துண்டுகளாக்கி, மிளகாய்த்தூள்



'ஜோதிட சிரோன்மணி'
சாந்தி ராஜ்குமார்



போட்டு வாணலியில் வறுத்தெடுத்து உண்ணும் போது உடல் நலம் சீர் கெடுகிறது.

இப்போதுள்ள இளம் தலைமுறையினர் உணவில் மாற்றத்தை எதிர் பார்க்கும்போது, உடல்நலமும் மாற்றத்தை எதிர்கொள்கிறது. இந்த மாற்றத்தினால் வரும் உடல்நலக் குறைவைச் சரி செய்ய நம் சமையல் அறையில் உள்ள பொருள்களே மருந்தாக அமைகின்றன.

நமது எண் சாண் உடலைப் பஞ்ச பூதங்களே ஆட்சி செய்கின்றன. ஆம்! நமது உடல், மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகியவற்றால்தான் இயங்குகின்றது. இந்தப் பஞ்ச பூதங்களில் ஒன்று குறைந்தாலும் நாம் நோய்வாய்ப் படுகிறோம்.

சோதிடத் தத்துவப்படியும் 9 கிரகங்களின் அமைப்பின்படியும் நமது உடல் ஆரோக்கியத்தைத் தெரிந்து கொள்ளலாம். காலையில் இஞ்சி, மதியம் சுக்கு, மாலையில் கடுக்காய் என உணவிற்கு முன் எடுத்துக் கொண்டால், நோய்கள் எளிதில் நமது உடலை அணுக இயலாது.

ஆரோக்கியமும், நோயும் நாம் உண்ணும் உணவைப் பொறுத்தே அமைகின்றன. தவறான உணவுப் பழக்கத்திற்குள் நாம் அடிமையாகும் பொழுது, நம் உடலை ஆட்சி செய்யும் பஞ்சபூதங்களின் தன்மையும் குறைந்து நமது உடல்நிலையை அதிகம் பாதிக்கின்றன.

உணவு உண்பதையே ஒரு பூசை போல் கருதினார்கள் நமது பெரியவர்கள். சூரியன் உதயமான பின்பு ஒரு முறையும், மறைந்த பின்பு ஒரு முறையும் உண்டனர்.


இயற்கையைச் சார்ந்தே மனித உடலும் உணவும் அமைந்திருக்கின்றன. கை மருத்துவம், சித்தா, ஆயுர்வேதம், மூலிகை மருத்துவம், அலோபதி என அனைத்து மருத்துவத் துறைகளும் ‘அறுசுவை’ அடிப்படையில்தான் அமைந்துள்ளன.

நாள்தோறும் 6 முதல் 8 பல் பூண்டினை ஒரு சிறிய டீ ஸ்பூன் அளவு நெய்யில் சிறிது வெந்தயம், சீரகம், மிளகுத்தூள் 1 சிட்டிகை, உப்புத்தூள் 1 சிட்டிகை சேர்த்து வறுத்துச் சாப்பிட உடல் நலம் சீராகும்.

விரதம் இருந்தால் மூளை கெடாது : நம் நாட்டவர்கள் ஏதாவது ஒரு காரணத்திற்காக விரதம் இருப்பது உண்டு. அப்படி இருந்தால் நாம் நினைத்த செயல் நிறைவேறும் என்ற நம்பிக்கை நம் மக்களுக்கு அதிகமாக உண்டு. இந்த விரத முறையினால் வரும் நம்பிக்கை உண்மையாகவே இருக்கும் என லண்டனில் நடந்த ஓர் ஆய்வின் மூலம் தெரியவந்தது.

வாரத்தில் ஒரு நாளோ, இரு நாளோ விரதம் இருப்பவர்களுக்கு மூளையில் எந்தப் பாதிப்பும் ஏற்படுவதில்லை என அந்த ஆய்வில் தெரிய வந்துள்ளது.

நாம் உண்ணும் உணவு அதிகமாகும்போது கலோரியும் அதிகளவு உடலுக்குச் செல்கிறது. உண்ணாமல் இருக்கும்போது, மூளையில் சுரக்கும்



ஒருவிதத் திரவம் மூளையின் செயல் திறனைக் கூட்டுவதாக ஆய்வின் முடிவு தெரிவிக்கிறது. இந்த ஆய் வினை முதலில் எலிகளிடமும், பின் னர் வயதானவர்களிடமும் சோதித் துத் தெரிந்து கொண்டார்கள்.


சஷ்டி, சோமவாரம், கார்த்திகை, சிவராத்திரி, ஏகாதசி, ரம்ஜான், கிறித் தவர்கள் நோன்பு முதலிய அனைத் தும் மக்களுக்கு உணவு மற்றும் உடல் நலம் சார்ந்த ஆன்மிகப் பயிற்சிகளே.

ஒரு மனிதனின் ஆரோக்கியம் என்பது சமையல் அறையில்தான் தீர் மானிக்கப்படுகிறது. இன்றைய சூழ் நிலையில் அவசர கதியில் சமைத்துச் சாப்பிட்டு உடல் ஆரோக்கியத்தைக் கெடுத்துக் கொள்வதைவிட, ஆரோக் கிய உணவைச் சமைத்துச் சாப்பிட் டால் உடல் நலம் கெடாமல் இருக்கும்.

ஆரோக்கியமான உணவில் இருக் கும் ருசியும், பக்குவமும் காலை நேர அவசரச் சமையலில் வராது. இதைத் தான் 'கை மணம்' என்று சொல் வார்கள்.

சங்ககாலச் சமையல் முறைகளில் 'கற்றாழைக் குழம்பு' என ஒன்று இருந் துள்ளது. இந்தக் கற்றாழைக் குழம்பு, பெண்களின் பெரும்பான்மையான பிரச்சனைகளில் ஒன்றான மாத விடாய்க் கோளாறுகளுக்கு ஒரு தீர் வாக இருந்துள்ளது.

முழங்கால் வலிக்காக அமுக்கிராங் கிழங்கைச் சமையலில் அதிகம் பயன்





படுத்துவார்கள் எனவும் சொல்லப்படு கிறது. இன்றும் மலைவாழ் மக்கள் இந்தக் கிழங்கில் உள்ள நடு நரம்பை நீக்கிவிட்டுச் சமையல் செய்து சாப் பிடுவதாகத் தெரிய வந்துள்ளது. பெண்களுக்கு மட்டுமல்லாமல், ஆண் களுக்கும் வரக்கூடிய மூட்டு வலிக்குச் சிறந்த மருந்தாகவும், உணவாகவும் இது கூறப்படுகிறது.

அன்றாடம் நாம் பயன்படுத்தும் பருப்பு வகைகளைச் செம்மண்ணில் அடைத்துப் பக்குவப்படுத்தித் தேவைப்படும்போது சுத்தப்படுத்தி னால், அது குறைந்த கலோரியாக மாறி, எளிதில் செரிக்கக்கூடிய தன்மை யாக மாறுகிறது என ஆய்வு முடிவு கள் தெரிவிக்கின்றன. இதைத்தான் நமது விவசாய முறையில் அந்நாளில் பின்பற்றினர்.

இப்படிப் பக்குவப்படுத்தப்பட்ட தானிய வகைகளை நம் உண்ணும் போது சர்க்கரை, இரத்த அழுத்தம், மூட்டு வலி முதலிய நோய்களிலிருந்து நாம் விடுபடலாம். மருத்துவர்களும் எளிதில் செரிக்கக்கூடிய உணவு களையே பரிந்துரை செய்கிறார்கள்.

அப்படிப் பல்லாண்டுக் கால மாகப் பயன்படுத்தி வந்த சமையல் முறைகளை மாற்றி, உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் உணவு முறைக்கு நாம் மாறிவிட்டோம் என்பதே உண்மை யாகும்.

மனத்தூய்மை, அளவான உழைப்பு, ஆரோக்கியமான உணவு, மனக்கவலை இல்லாத ஓய்வு இவற் றுடன் கூடிய வாழ்க்கையானது, நோய்கள் இல்லாமல் நல்ல உடல் நலத்துடன் வாழ வழிவகுக்கும். ●





டாக்டர்
வி. கிருஷ்ணமூர்த்தி

என்ற ஒரு பொதுத்துறை நிறுவனம். இதேபோல மாருதி என்ற மற்றொரு பொதுத்துறை நிறுவனம். இது இந்திய – ஜப்பான் கூட்டு நிறுவன மாக உருவாகிய நிறுவனம். மூன் றாவதாக, செயில் என்று சுருக்க மாகச் சொல்லப்படுகிற இந்திய எஃகு ஆணையம் (Steel Authority of India).

அதனுடைய தலைவராக இருந் தவர் வி. கிருஷ்ணமூர்த்தி. மத்திய திட்டக் கமிஷனில் உறுப்பினராக

சிகரம் பேசுகிறது

'சிகரம் பேசுகிறது' என்று ஒரு புதிய நூல் தமிழ் வாசகர்களுக்கு வாய்த்திருக்கிறது. அந்த நூல், சிகரம் என்று பேசுகிற ஆளுமை யார் என் றால், டாக்டர் வி. கிருஷ்ணமூர்த்தி என்பவர்.

அவரோ, மக்கள் மத்தியில் பிரபல மாகாதவர். அரசியல் தொடர்பு அற்ற வர். கல்லூரிகளில் தங்கப் பதக்கங்கள் வாங்கியவரல்ல. அவருடைய குடும்பம் அவரை டிப்ளமோ படிக்க வைக்கும் அளவுக்குத்தான் வசதி உள்ளதாக இருந்தது.

இப்படி சாதாரணப் படிப்பைப் பெற்ற வி. கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் வி. கிருஷ்ணமூர்த்தியாக உயர்ந்தார். அப்படியென்றால், அவர் செய்த சாதனைகள் என்ன?

இந்தியாவில் பிஎச்இஎல் (BHEL) இருந்தவர். இந்த உறுப்பினருக்கு மத்திய அமைச்சருடைய அந்தஸ்து. பன்னாட்டு நிறுவனங்கள் என அழைக்கப்பகிற எம்.என்.சி. கம்பெனி கள் பல உள்ளன. இந்தியாவிலுள்ள பன்னாட்டு நிறுவனங்களின் அமைப்புக்கு இவர்தான் தலைவர்.

அதுமட்டுமல்ல, புகழ்பெற்ற டெல்லி ஐ.ஐ.டி., அகமதாபாத் ஐ.ஐ.எம்., பெங்களூர் ஐ.ஐ.எம். முதலிய கல்வி நிறுவனங்களின் நிர் வாகக் குழுவின் தலைவர் யார் தெரி யுமா? இவர்தான்.

தமிழ்நாடு திருவாரூரில் தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகம் ஒன்று உள்ளது. இதேபோல, சென்னையில் உத்தண்டி என்ற ஊரில் இந்திய கடலியல் பல்கலைக்கழகம் ஒன்று உண்டு. இந்த இரண்டு பல்கலைக் கழகங்களின் வேந்தர் இவர்தான்.

நமக்கு அருகாமையிலுள்ள திருச்சி தேசியக் கல்லூரி எல்லோருக்கும் தெரியும். அந்தக் கல்லூரியின் அறிஞர் குழுவின் தலைவராகவும் இவர்தான் பதவி வகித்தார். சோவியத் நாட்டின் இன்றைய ரஷ்யா அறிவியல் அகாடமி இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

இதேபோல, பனாரஸ் இந்து பல்கலைக்கழகம், புதுச்சேரி பல்கலைக்கழகம் இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கின. ஜப்பான் நாட்டின் உயர் விருது என்பது 'ரைசிங் சன்'



என்பதாகும். அவர் காலத்தில் அந்த விருதைப் பெற்ற ஒரே இந்தியர் இவர்தான்.

நமது நாட்டின் பத்ம விருதுகளான பத்மஸ்ரீ, பத்மபூஷண், பத்ம விபூஷண் ஆகிய மூன்றையும் பெற்றவர் இவர். இனி பெறவேண்டியது 'பாரத ரத்னா'தான்.

இப்படிப்பட்ட பின்புலமுள்ள ஒருவரின் கல்வி வெறும் மெக்கானிக்கல் டிப்ளமோதான்.

ஒரு முறை டாக்டர் அப்துல் கலாம் திருச்சி 'பெல்' நிறுவனத்திற்கு விருந்தினராகச் சென்றபோது, அந் நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் அனைவரும் டாக்டர் வி. கிருஷ்ணமூர்த்தி பற்றியே அதிகமாகப் பேசியதாகவும், யார் அந்தக் கிருஷ்ண மூர்த்தி என்று கலாம் அவர்கள், இணையதளத்தில் தேடியபோது, எதுவுமே கிடைக்கவில்லை என்று வி. கிருஷ்ணமூர்த்தியிடமே கூறியிருக்கிறார். இது அவருடைய தன்னடக்கத்தைக் காட்டுகிற தகவல்.

'பெல்' எனப்படும் பாரத கனரக மின்னியல் நிறுவனம் இவருடைய வருகைக்குப் பிறகுதான் பிரகாச மடைந்தது. அதேபோல, சிறு கார் உற்பத்தி செய்வதற்கான 'மாருதி உத்யோக் லிமிடெட்' நிறுவனம் தனது முயற்சியில் தடங்கல்களைச் சந்தித்துக் கொண்டிருந்த காலம். அப்போது தான் அந்நிறுவனத்திற்குத் தலைவராகி, அந்தச் சிறிய கார் உற்பத்தி நிறுவனத்தைச் சிறப்புக்குரியதாக்கினார்.

இதேபோல இந்திய எஃகு ஆணையம் எஃகுக்கு உரிய வலுவோடு இல்லாமல் பலவீனமாக இருந்தபோது, அந்நிறுவனத்தை எஃகின் வலிமைக்குரியதாக்கி நிற்கச் செய்தார்.



டாடா, பிர்லா, சிங்கானியா, கோயங்கா ஆகியோரை முதலாளிகள் ('கேப்பிடலிஸ்ட்') என்போம். அவர்கள் ஒவ்வொருவரும் புகழ் வாய்ந்த கம்பெனிகளை நிறுவியவர்கள். டாக்டர் வி. கிருஷ்ணமூர்த்தி அப்படிப்பட்ட முதலாளியல்ல. எந்த நிறுவனத்தையும் புதிதாக உருவாக்கிய

வரும் அல்ல. ஆனால், ஏற்கனவே தொடங்கப்பட்டுத் தொய்வடைந்த பொதுத்துறை நிறுவனங்களைத் தோள் கொடுத்து நிறுத்தி மீட்டுருவாக்கிய தொழில் முனைவோர் இவர். மேதைமையுள்ள மேலாளர் இவர். இவருடைய முதலீடுகள் அனைத்தும் நிதி அல்ல, மதி.

இவருடைய வாழ்க்கை முழுவதையும் ஞானப்பழத்தின் சாறாகப் பிழிந்தால், அதற்கு என்ன பெயர் வைக்கலாம் என்று யோசித்தால், இவரை விஞ்ஞானி என்றோ, தொழில் முனைவோர் என்றோ, மேலாளர் என்றோ சொல்வதையெல்லாம்விட, நிர்வாகத் தத்துவமேதை என்று இவரைச் சொல்வது பொருத்தமாக இருக்கும்.

நிர்வாகம் என்பது ஒருங்கிணைப்பது. எவற்றை? மூலதனம், தொழிலாளர்கள், நிலம், சந்தை, சரக்கு ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைத்து அதனைச் சிறப்புக்குரியதாக உருவாக்குவதுதான் சாதனை. இந்தப் பின்புலம் இவருக்கு எப்படி அமைந்தது என்பது பற்றி இந்நூல் விரிவாகப் பேசுகிறது.

இவருடைய மதிநுட்பத்தின் மகத்துவத்தை அறிந்த இந்தியாவின் பிரதமர் நேருஜி, இவரோடு நெருக்கமாக இருந்தவர். அதற்குச் சமமாக நேருஜியின் கலப்புப் பொருளாதாரக் கருத்தோட்டத்தில் டாக்டர் வி. கிருஷ்ணமூர்த்தி அதிக ஈடுபாடு காட்டியவர்.

இவர் கேட்ட கேள்வி, இந்தியாவில் சிறந்த அறிவாளிகள் பலர் உள்ளனர். அவர்கள் பொதுத்துறை நிறுவனங்களிலும் பணியாற்றுகிறார்கள். ஆனாலும், பொதுத்துறை நிறுவனங்கள் டாடா, பிர்லா முதலியோரின் தனியார் நிறுவனங்களுக்குச் சமமாக லாபகரமாக இல்லையே ஏன்? என்பதுதான்.

இந்தக் கேள்விக்கான நதி மூலத்தைக் கண்டறிவதற்காக இவர் நடந்து சென்ற பாதை அறிவியல் பாதை. பொதுத்துறை நிறுவனத்தின் நிர்வாகத்தில் உள்ள கோளாறுதான் இந்த வீழ்ச்சிக்குக் காரணம் என்பதைக் கண்டறிந்தார்.

அதனால், மனித வளத்தை மேம்படுத்த வேண்டும். அதற்குக் கல்விக் கூடங்கள் மட்டும் போதாது. பொதுத்துறை நிறுவனங்களும் பங்களிக்க வேண்டும் என்பதுதான்.

சோவியத் நாடு இவருக்கு வழங்கிய டாக்டர் பட்டத்திற்கான ஆய்வு என்ன தெரியுமா? பொதுத்துறை நிறுவனங்களின் நிர்வாக மேலாண்மை என்பதுதான். நிர்வாக மேலாண்மையில் முக்கிய அம்சம் மற்ற எவரும் கடைப்பிடிக்க விரும்பாத ஓர் அம்சம் தான். அது என்ன?



அந்நிறுவனங்களுக்குச் சுதந்திரம் வேண்டும். என்ன சுதந்திரம்? உடனுக்குடன் முடிவெடுக்கக்கூடிய சுதந்திரம். சந்தையின் கிராக்கியை உணர்ந்து உற்பத்தி செய்யக்கூடிய சுதந்திரம்.

பொதுவாக, பொதுத்துறை நிறுவனங்களுக்கு இந்தச் சுதந்திரம் மத்திய ஆட்சியிலிருந்துதான் உத்தரவாக வரும். மத்திய ஆட்சியில் தொழில் துறை அமைச்சராக இருப்பவர் அரசியல் செல்வாக்கால் அதனைப் பெற்றவரே தவிர, தனது அறிவு நுட்பத்தால் பெற்றவராக இருக்க முடியாது. அதன் காரணமாக மேலிருந்து வரக்கூடிய உத்தரவுகள் பொதுத்துறை நிறுவனங்களைத் தன் விருப்பத்திற்குக் கட்டுப்படுத்துமே தவிர, அந்நிறுவனத்தின்

தொடர்ச்சி : 92–ம் பக்கம்

சிறுகதை

ஆதலையூர் சூரியகுமார்



மேலும் ஓர் அவதாரம்

கேட்டிருந்த வங்கிக்கடன் நிச்சயமாக இன்று கிடைத்துவிடும் என்று முழுமையாக நம்பிக் கொண்டிருந்தான் பாஸ்கர்.

"சார் நீங்க போன வாரமே எல்லா பார்மாலிட்டிசும் முடிச்சுட்டீங்க, அதனால ஒண்ணும் கவலைப் பட வேணாம். நாளைக்கு சீனியர் மேனேஜர் கூட ஒரு சின்ன இன்ட்ராக்ஷன் தட்ஸ்...ஆல் தொண்ணூத்தொம்போது சதவீதம்... நீங்க கேட்ட ஐந்து லட்ச ரூபாய்... உங்க அக்கவுண்ட்ல டெபாசிட் ஆய்டும்..."

சீனியர் கிளர்க் நேற்றே சொல்லியிருந்தார்.

பாஸ்கர் கம்ப்யூட்டர் சயின்ஸில் மாஸ்டர் டிகிரி முடித்து 5 வருடம் ஆகிவிட்டது. "சொந்தக் கால்ல... நிக்கணும் மச்சி.. யார்கிட்டயும் போய் வேலை கேட்டு நிக்கமாட்டேன்" என்று தன் நண்பர்களிடம் அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பான்.



> ஒவ்வொரு வங்கியிலும் அப்ளிகேஷன் போடுவதில் தொடங்கி இன்டர்வியூ வரை முன்னேறிவிடுவான். இதோ கிடைத்துவிடும், அதோ கிடைத்துவிடும் என்பார்கள். கடைசியில் ஏதாவது ஒரு காரணம் சொல்லித் தட்டிக் கழித்து விடுவார்கள்.

கல்லூரியில் படிக்கும்போது நடந்த பல்வேறு அறிவியல் கண்காட்சிகளில் கலந்துகொண்டு பரிசுகளை அள்ளிக் கொண்டு வருவான் பாஸ்கர்.

மாப்ள... அப்துல் கலாமுக்கு அடுத்தது நீதாண்டா... விஞ்ஞானி... இந்த மாநாட்டுக்கு உன்னோட சேவை அவசியம் தேவை... என்று பாஸ்கரைக் கலாய்ப்பார்கள்.

சின்னச் சின்ன நுட்பங்களில் புதிய புதிய கண்டுபிடிப்புகளைக் கண்டுபிடித்து அசத்திக் கொண்டே இருந்தான் பாஸ்கர்.

கேம்பஸ் இண்டர்வியூலேயே கைநிறையச் சம்பளத்துடன் வேலை கிடைத்தும் அதெல்லாம் உதறிவிட்டுச் சுயமாகத் தொழில் செய்ய வேண்டும் என்று உறுதியாக நின்றான் – பாஸ்கர்.

ஆனாலும் இவனுடைய முயற்சிக்குச் சோதனை மேல் சோதனைதான் வந்து கொண்டே இருந்தது.

பத்து லட்ச ரூபாய் புராஜக்ட் தயாரித்து வைத்துக்கொண்டு கடந்த 5 வருடங்களாக எல்லா வங்கிகளையும் ஏறி இறங்கிவிட்டான்.

ஒவ்வொரு வங்கியிலும் அப்ளிகேஷன் போடுவதில் தொடங்கி இன்டர்வியூ வரை முன்னேறிவிடுவான். இதோ கிடைத்துவிடும், அதோ கிடைத்துவிடும் என்பார்கள். கடைசியில் ஏதாவது ஒரு காரணம் சொல்லித் தட்டிக் கழித்து விடுவார்கள்.

“ஸாரி.. சார் எங்க டார்கெட் முடிஞ்சிடுச்சி...”

“உங்க ப்ராஜக்ட் ஏரியா... பஜார் ப்ராஞ்ச்ல வருது சார். அங்க மூவ் பண்ணுங்க...”

“அசையாச் சொத்து... செக்யூரிட்டி தரணும் சார்...”

இப்படித்தான் ஐந்து வருடமாகப் பேசிப் பேசியே அனுப்பிவிட்டதில் நொந்து போய் இருந்தான் பாஸ்கர்.

ஆனால் இந்தமுறை என்னவோ தெரியவில்லை, ஆரம்பத்தில் இருந்தே கிரீன் சிக்னல் கிடைத்துக்கொண்டே இருந்தது.

“இந்த ஒரு பேங்க்தான் இதுவரை அப்ளை பண்ணாத பேங்க். அதையும் ஏன் விடணும்... அப்ளிகேஷன் போட்டுத்தான் பார்த்துடுவோம்...” என்று வேண்டா வெறுப்பாகத்தான் விண்ணப்பம் எழுதிக் கொடுத்திருந்தான்.

“இந்தாடா பாஸ்கர்... வேணுகோபாலசுவாமி பிரசாதம். உனக்கு லோன் கிடைக்கணும்னு வேண்டிகிட்டு அர்ச்சனை பண்ணிட்டு வந்திருகேன்...”

இவன் அப்ளிகேஷன் எழுதி முடிப்பதற்கும், அம்மா பிரசாதம் கொண்டு வந்து தருவதற்கும் சரியாக இருந்தது.

அம்மா கொண்டு வந்திருந்த குங்குமத்தை எடுத்து வேணுகோபாலா... வேணுகோபாலா.., வேணுகோபாலா... என்று மூன்று முறை சொல்லி, விண்ணப்பத்தின் நெற்றியில் பொட்டு வைத்தான்.

“வேணுகோபால சுவாமி பத்தி உனக்குத் தெரியாதுடா... வேண்டியதை வேண்டியது போலவே தரும் சாமிடா... கோயிலுக்குப் போய் பாரு... எவ்வளவு பேரு கூட்டம் கூட்டமா வந்து செல்லமா... வேணுசாமி... வேணுசாமி...ன்னு வேண்டிக்கிறாங்க...”

அம்மா சொன்னது மாதிரியே... அடுத்தடுத்து... சம்பவங்கள் நடந்தன.

அப்ளிகேஷன் போட்ட ஒரு வாரத்திலேயே முதல் கட்ட இண்டர்வியூக்கு லெட்டர் வந்துவிட்டது.

தன்னுடைய தொழில் திட்டங்களைப் பற்றித் தயாரிப்பாளருக்குக் கதை சொல்லும் அறிமுக இயக்குநர் போல சரியான நீள அகலங்களோடு விவரித்தான்.

பாஸ்கர் சொல்லச் சொல்ல ஆச்சரியமாய்க் கேட்டுக் கொண்டு இருந்தார்கள். அட்டெண்டர் வந்து இருவருக்கும் காபி வைத்துவிட்டுப் போனான்.

“பிரமாதம் பாஸ்கர், உங்க ப்ராஜக்ட் நிச்சயம் ஜெயிக்கும். ‘ஹைலி ரெகமண்டட்” அவன் கண் எதிரிலேயே எழுதிக் கையெழுத்துப் போட்டார் கிளை மேலாளர்.

“ஏன் மத்த பேங்க்ல இந்த ப்ராஜக்டை ரிஜக்ட் பண்ணாங்கன்னு... தெரியல... பாஸ்கர். வெரிகுட் அப்ளிகேஷன்ஸ். உங்க ப்ராஜக்டை நீங்க ப்ரசன்ட் பண்ணின விதம் நல்லா இருந்தது. அதற்காகவே சேங்ஷன் பண்ணலாம்.”

“இதுல என்னோட டூட்டி முடிஞ்சது. சீனியர் மேனேஜர் இன்னொரு நாள் உங்களைப் பர்சனலா மீட் பண்ணுவார். இதே மாதிரி அட்சரம் பிசகாமச் சொல்லிடுங்கோ... அவர் அபிப்ராயம் இதில் ரொம்ப முக்கியம்... எனி ஹவ் விஷ்.. யூ.. ஆல்.. தி.. பெஸ்ட்.”

சீனியர் மேனேஜர் ரொம்ப நாள் எடுத்துக் கொள்ளவில்லை. அடுத்த ஒரு வாரத்திலேயே அவரிடமிருந்தும் அழைப்பு வந்துவிட்டது.

“ஷார்ப்பா... பதினொரு மணிக்கு

அவர் கேபின்ல இருக்கணும்...”

பேங்கிலிருந்து அலைபேசியில் அழைத்து அட்டெண்டர் சொல்லி யிருந்தார்.

– அம்மாதான் நிறைய அட்வைஸ் சொல்லி அனுப்பினாள். “பாஸ்கர் கவலைப் படாத... வேணுகோபாலசாமி கிட்டே போய் நல்லா வேண்டிகிட்டு... சாமி பேருக்கு ஓர் அர்ச்சனை பண்ணு. லோன் கிடைச்ச பிறகு ஓர் அபிஷேகம் பண்றேன்னு வேண்டிக்க. நல்லா மன சார வேண்டிகிட்டுப் போ. நிச்சயமா வேணுகோபாலசாமி நல்லா வழிகாட்டுவார்.

“வேணுகோபாலசாமியோட மகி மையைப் பத்தி நீ இன்னும் புரிஞ்சுக்கல பாஸ்கர். நம்ம கண் முன்னாடி நிக்கற தெய்வம்ப்பா... வேணுகோபாலசாமி... அப்ளிகேஷன் போட்ட ஒரு மாசத்துக் குள்ள காரியம் கைகூடி வந்திருக்கு பாத் தியா...!” அம்மா நீண்ட நேரமாக வேணுகோபாலசாமி புராணம் வாசித்துக் கொண்டிருந்தாள்.

அம்மா சொன்னபடியே அதிகாலை யிலேயே, துளசிமாலை, குங்குமம் சகித மாக வேணுகோபாலசாமி கோயி லுக்குப் போய்விட்டான் பாஸ்கர்.

பஞ்ச தீப தரிசனம் பார்த்தது மனசுக்கு இதமாக இருந்தது.

“வேணுகோபால சாமியை வேண்டி வந்தவா... யாரும் வீண் போவதில்ல... உங்களுக்குச் சீக்கிரமே பெருமாள் நல்ல வழி காட்டுவார்...” பிரசாதத்தை நீட்டிய படியே பட்டாச்சார்யார் சொன்னார்.

சீனியர் மேனேஜர் கேபினில் நுழைந்து வணக்கம் சொன்னபோது, அவர் காபி சாப்பிட்டபடியே, பதில் வணக்கத்திற்காகத் தலையசைத்தார்.

இவனுடைய புராஜக்ட் புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டிக்கொண்டே பாஸ்கர் சொல்வதைக் கேட்டுக் கொண் டிருந்தார், சீனியர் மேனேஜர்.

“எல்லாம் சரிதான் பாஸ்கர், எங்க ப்ராஞ்ச் பொறுத்தவரைக்கும் பத்து லட்சம் என்பது ஓவர் லிமிட். நான் வேணா இதே அப்ளிகேஷனை மெயின் ப்ராஞ்சுக்கு அனுப்பிடறேன். நீங்க அங்கே மூவ் பண்ணுங்க... அதுதான் சரியாக இருக்கும்.”

ஃபைலை மூடி இவன் கையில் கொடுத்துவிட்டு... இவன் பதிலுக்குக் கூடக் காத்திருக்காமல் அட்டெண் டரை வரச்சொல்லி பெல்லை அழுத்தி விட்டார் மேனேஜர்.

முகம் முழுவதும் வெளிறிப் போய் விட்டது பாஸ்கருக்கு. கொஞ்சம் விட் டால் அழுதுவிடுவான் போல் இருந் தது. அவசர அவசரமாக வங்கியை விட்டு வெளியேறினான் பாஸ்கர்.

“சார்... ஒரு நிமிஷம்...” அட்டெண் டர் பின்னாலேயே ஓடிவந்தான்.

“நான் இந்த பேங்க் அட்டெண்டர், எல்லாத்தையும் பாத்துகிட்டுத்தான் சார் இருந்தேன். கடைசியில லோன் இல்லைன்னு சொல்லிட்டாங்க. கேட்கவே கஷ்டமா இருக்கு சார். நான் ஒரு யோசனை சொல்றேன் கேப்பீங் களா...?” தயக்கத்தோடு பேசினான் அட்டெண்டர்.

“சொல்லுங்க சார்.. நீங்க லோன் அரேஞ்ச் பண்ணித் தருவீங்களா... மேனேஜருக்கு எதாவது கமிஷன் கொடுக்கணுமா சார்...?”

“அதெல்லாம் ஒண்ணும் இல்ல சார்... நீங்க தொழில் சம்பந்தமா சொன்ன ஐடியா ரொம்ப நல்லா இருந் தது. இதைவிட சப்பையான ஐடியா வுக்கு எல்லாம் லோன் கொடுத்திருக் காங்க சார்.”

“ . . . .”

“உங்க ப்ராஜக்ட்.. ரொம்ப அருமை யான சப்ஜெக்ட் சார். வொர்க்அவுட் பண்ணினா நிச்சயமா... கோடி கோடி யாக் குவிக்கலாம்...”

“ரொம்ப சந்தோஷம்.. நீங்க புரிஞ்சி கிட்டதுக்கு...”

“உங்க ஐடியாவை ஃபேஸ் புக்ல போடுங்க சார்... நிச்சயமாக ஸ்பான்சர் கிடைப்பாங்க... உங்களுக்குத் தேவை யான தொகையை வெளிநாட்டு நிறு

வனம்கூட ஸ்பான்சர் பண்ண வாய்ப் பிருக்கு சார்...”

‘ச்சே... நமக்கு இந்த யோசனை வராமப் போயிடுச்சே...’ முட்டிக் கொண்டான் பாஸ்கர். அங்கேயே உட்கார்ந்து... தனது புராஜக்ட் ஐடியாவை முகநூலில் எழுதி போஸ்ட் செய்துவிட்டுத்தான் புறப்பட்டான்.

ஆனாலும் லோன் கிடைக்காத வருத்தம் அவன் முகத்தில் அப்பிக கிடந்தது.

“ஏய் கவலைப்படாத பாஸ்கர், நிச்சயமா அந்த வேணுகோபாலசாமி உனக்கு நல்ல வழி காட்டுவார், இது இல்லன்னா... வேற ஐடியா... உனக்குத் தோணும்...” அம்மா ஆறுதல் சொன்னாள்.

அம்மா... சொன்னது போல அந்த ஆச்சரியம் அடுத்த இரண்டு நாட்களில் நடந்திருந்தது. இவனுடைய முகநூல் பதிவைப் பார்த்துவிட்டுப் பலர் உதவி செய்வதாகப் பதில் கொடுத்திருந்தார்கள்.

சிலர் முகவரி விசாரித்துக் கொண்டு வீட்டுக்கே வந்துவிட்டார்கள்.

“பாஸ்கர்... பேஸ் புக்ல உங்க புராஜக்டோட ஒன் லைன்தான் படிச்சேன்... பிரமாதம்... எனக்கு நம்பிக்கை இருக்கு; நிச்சயமா சக்சஸ் ஆகும். எனக்கு உங்க மேலேயும் நல்ல நம்பிக்கை இருக்கு... ப்ரோஃபைல் பாத்தேன். அஞ்சு வருஷமா.. நீங்க லோன் கேட்டு அலைஞ்சதையும் போட்டுருந்தீங்க... இனிமே அஞ்சு நிமிஷம்கூட லேட் பண்ணக் கூடாது...” அவன் கட்டுக் கட்டாகப் பணத்தை எடுத்து பாஸ்கர் முன் வைத்தான்.

“பிஸினஸ் பேசினதால பேர் சொல்ல மறந்துட்டேன்... என் பேரு பிரகாஷ். அப்ராட்ல... பல வருஷம் குப்பை கொட்டிருக்கேன். நம்ம நாட்டுக்காக ஏதாச்சும் செய்யணும்னு நினைச்சப்பத்தான் உங்க... பேஸ்புக் கண்ணில பட்டது.. உடனே கிளம்பி வந்துட்டேன். அவ்வளவும் ஒயிட் மணி பாஸ்கர். நீங்க தாராளமா... தைரியமா உங்க தொழிலை ஆரம்பிக்கலாம்.”

கணபதி பூஜையுடன் கம்பெனியை ஆரம்பித்திருந்தான் பாஸ்கர். வந்திருந்த அத்தனை பேருமே பாஸ்கரை வாழ்த்திப் பேசியது பெருமையாக இருந்தது பாஸ்கருக்கு.

“எந்த பேங்க்ல போய் நின்னாலும் உனக்கு இனிமே லோன் கொடுப்பாங்கப்பா.. ஜமாய்க்கலாம்...” பழைய நண்பன் ஜனா சொன்ன போதுதான் ஒரு விஷயம் பொறி தட்டியது பாஸ்கருக்கு.

“இந்த யோசனையை முக நூலில் போடச்சொன்ன பேங்க் அட்டெண்டருக்கு நன்றி சொல்லவில்லையே...”

பைக்கை எடுத்துக்கொண்டு வங்கிக்குப் பறந்தான் பாஸ்கர்.

அட்டெண்டர் டீ கிளாசோடு வெளியே வந்து கொண்டிருந்தான்...

“வாங்க பாஸ்கர் சார்... மேனேஜரைப் பார்க்கணுமா...”

“இல்ல சார், உங்களைப் பார்க்கத்தான் வந்தேன்.”

“என்னைப் பார்க்கவா... என்ன விஷயம் சார்?”

வாங்கி வந்திருந்த ஸ்வீட் பாக்ஸை அட்டெண்டர் கையில் திணித்தான் பாஸ்கர்.

“நீங்க சொன்ன யோசனைப்படிதான் சார் நான் என்னுடைய புராஜக்டை ஃபேஸ் புக்ல போட்டேன்... உடனே சக்சஸ் ஆயிடுச்சு சார்... பிரகாஷ்..ன்னு ஒருத்தர் ஸ்பான்சர் பண்ணிருக்கார். இன்னைக்குக் காலைல கணபதி பூஜையோடு கம்பெனி தொடங்கிட்டோம்.”

“நீங்கதான் சார் நல்ல ஐடியா சொன்னீங்க, ரொம்ப தேங்க்ஸ்”

அட்டெண்டர் சந்தோஷப் புன்னகையோடு பாஸ்கரைப் பார்த் தான்.

“வாழ்த்துக்கள் பாஸ்கர்... நல்லா வாங்க...”

“அன்னைக்கு அவசரத்துல உங்க பேரைக்கூடக் கேட்காமப் போய்ட்டேன் சார்... உங்க பேரைத் தெரிஞ்சுக்கலாமா... சார்...”



“நான் ஒரு சாதாரண அட்டெண் டர் சார். என் பேரு வேணுகோபால ஸ்வாமி... என்னை எல்லோரும் வேணு சாமி.. வேணுசாமி..ன்னு கூப்பிடு வாங்க.” அட்டெண்டர் சொல்லி முடித் தான்.

அன்று பஞ்சதீப தரிசனம் பார்த் துச் சிலிர்த்த அந்த வேணுகோபால ஸ்வாமி கண்முன் வந்து நிற்க...


அட்டெண்டரைப் பார்த்து இரண்டு கரங்களையும் தன்னை அறியா மல் குவித்துக் கொண்டான் பாஸ்கர். ●

85–ம் பக்கத் தொடர்ச்சி

தலைவர்களுடைய விருப்பத்திற்குச் செயல்பட விடாது. இதுதான் கோளாறு. முதன்முதலாக இதனைக் கண்டறிந்தவர் டாக்டர் வி. கிருஷ்ண மூர்த்தி அவர்கள்தான்.

அரசின் குறுக்கீடுகள் எவையும் இன்றி, நிதி, நிர்வாகம், நிறுவனத்திற்கான தொழில்நுட்பம், அவசியப்படும் எந்திரங்களை இறக்குமதி செய்வது என அனைத்திலும் சுதந்திரம் வேண்டும் என்பதை ஆராய்ந்து சொன்னவர் இவர்.

இதனைப் பற்றி ஓர் ஆய்வறிக்கையை டாக்டர் வி. கிருஷ்ணமூர்த்தி, பிரதமர் பி.வி. நரசிம்மராவ் ஆட்சியில் தாக்கல் செய்தபோது இவருக்குக் கிடைத்த பதில் என்ன தெரியுமா?



இந்த ஆய்வறிக்கையை ஒப்புக்கொண்டால் பொதுத்துறை நிறுவனங்கள்மீது மத்திய அரசின் பிடி தளர்ந்து போய் விடும் என்ற சந்தேகம்தான்.

இதனைப்பற்றி பிஸினெஸ் இந்தியா, பிஸ்னஸ் குழு எழுதிய விமர்சனம் கவனிக்கத்தக்கது. டாக்டர் வி. கிருஷ்ணமூர்த்தி மட்டும் தனது முயற்சியில் தோற்றுப் போவாரேயானால், 20 ஆண்டுக் காலத்திற்குள் பொதுத்துறையே அழிந்து போகும் என்று 1987–இல் எழுதியது.

பொதுத்துறை நிறுவனங்களின் வெற்றிக்கு இவர் வழங்கிய ஐம்பெரும் கோட்பாடுகள் :

- இந்தியர்களுக்கு மதிப்பளித்துக் கண்ணியமாக நடத்துவது.
- பங்களிப்போருடன் தொடர்ந்து கருத்துப் பரிமாற்றம் செய்வது.
- உற்பத்தித் திறன், தரம் இரண்டிலும் தொடர்ந்து கவனம் செலுத்துவது.
- சந்தைப் படுத்துதலையும், வாடிக்கையாளரைப் போற்றுவதுமான பண்பாட்டை ஏற்படுத்துவது.
- தொடர்ந்து தொழில் நுட்பத்தை மேம்படுத்துவது.

இவருடைய சாதனைகளை 'ஓம் சக்தி' தொடர்ந்து பேச உள்ளது. வளரும் தலைமுறை இதனைப் படிக்கலாம், படித்துப் பயன்பெற்று அவர்களும் சாதனைகள் செய்யலாம்.

இந்தியாவிற்கு இப்போது அதிகமாகத் தேவை அரசியல்வாதிகள் அல்ல. ஏன்? ஆன்மிகவாதிகள்கூட அல்ல. அறிவியலாளர்களும், டாக்டர் வி. கிருஷ்ணமூர்த்தி போன்ற தொழில் மேதைகளும்தான். இவர்களால் இன்னொரு புதிய இந்தியாவை உருவாக்கிக் காட்ட முடியும். இந்திய இளைஞர்களுக்கு இவர்கள்தான் ஞான குருமார்கள். (இன்னும் வரும்)

'சிகரம் பேசுகிறது', ஆசிரியர் : டாக்டர் வி. கிருஷ்ணமூர்த்தி, வெளியீடு : தங்கத் தாமரை பதிப்பகம், 37, கால்வாய்க்கரைச் சாலை, கஸ்தூரிபா நகர், அடையாறு, சென்னை – 20, போன் : 044-2441 4441.

– சிபி



பட்டமளிப்பு விழாவில் ஒரு மாணவிக்குப் பட்டச்சான்றிதழ் வழங்குகிறார் வேளாண் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் நீ. குமார். அருகில் என்.ஐ.ஏ. கல்வி நிறுவனங்களின் தலைவர் டாக்டர் ம. மாணிக்கம், செயலர் டாக்டர் சி. இராமசாமி, சக்தி குழும டெக்ஸ்டைல்ஸ் செயல் இயக்குநர் திரு. டி. ராஜ்குமார், கல்லூரி முதல்வர் முனைவர் சி. சின்னுசாமி, தாளாளர் திருமதி. கே. கற்பகவல்லி ஆகியோர்.

வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தில் 2-ஆவது பட்டமளிப்பு விழா!

பொள்ளாச்சி மணக்கடவில் உள்ள ‘வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தில் 18.12.2019 அன்று இரண்டாவது பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

விழாவிற்கு என்.ஐ.ஏ. கல்வி நிறுவனங்களின் தலைவர் டாக்டர் ம. மாணிக்கம் அவர்கள் தலைமை வகித்தார். சக்தி குழும டெக்ஸ்டைல்ஸ் செயல் இயக்குநர் திரு. டி. ராஜ்குமார் அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.

கல்லூரி முதல்வர் முனைவர் சி. சின்னுசாமி அவர்கள் கல்லூரிச் செயல்பாட்டினை அறிக்கையாகத் தொகுத்து வழங்கினார். இந்நிகழ்வில் 240 மாணவ, மாணவியர் பட்டம் பெற்றனர். கல்லூரி அளவில் 5 தங்கம், 5 வெள்ளி, 6 வெண்கலப் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் நீ. குமார் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பட்டங்களை வழங்கினார்.


என்.ஐ.ஏ. கல்வி நிறுவனங்களின் தலைவர் டாக்டர் ம. மாணிக்கம் அவர்கள் தன் தலைமையுரையில் “வேளாண் பட்டதாரிகள், நாட்டின் வேளாண்மை உற்பத்தித் திறனைப் பெருக்க உதவ வேண்டும், வேளாண்மையுடன் கூடிய தொழில்களில் ஈடுபட வேண்டும்” என்று வலியுறுத்தினார்.

வேளாண் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தமது உரையில், “வேளாண் கல்வி என்பது மிகவும் பாராட்டப்பட்ட மற்றும் மதிப்புமிக்க அறிவியலில் ஒன்றாகும். வேளாண் பாடத்திட்டம் பல துறைகளை உள்ளடக்கியது. டாக்டர் அப்துல் கலாம் கூறியபடி, சிறந்த உலகத்திற்காக நீங்கள் கனவு காண வேண்டும். உங்கள் கனவுகளை யதார்த்தமாக மாற்றுவதற்குக் கடுமையாக உழைக்க வேண்டும்” என்றார்.

என்.ஐ.ஏ. கல்வி நிறுவனங்களின் செயலர் முனைவர் சி. இராமசாமி அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத் தாளாளர் திருமதி. கே. கற்பகவல்லி அவர்கள், தென்னிந்திய தென்னை சாகுபடியாளர்கள் சங்கத் தலைவர் திரு. கிருஷ்ணசாமிக்கவுண்டர் ஐயா, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக முதன்மையர் முனைவர் கல்யாணசுந்தரம், திரு. ஒ.வி.ஆர். சோமசுந்தரம், மகாலிங்கம் பொறியியல் கல்லூரி முதல்வர், அனைத்துத்துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

– ந.நி.





பெ. சிதம்பரநாதன்

பழிக்குப் பழி

காலம் ஏற்படுத்திய சேதங்களைக்
கண்டு அதிர்ச்சியடைந்தவனல்ல.
நிச்சயமாக இப்படித்தான் நிகழுமென்று
முன்மொழியப்பட்டதை வழிமொழிந்து நிற்பவன்.

அடர்த்தி இழந்த கருமுடி வெளுத்துப் போனது
கண்கள் பஞ்சடைத்துப் போய்
காதுகள் தூர்ந்துவிட்டன.

பலமே இல்லாது ஆடுகிற பற்கள்
முகமெல்லாம் காலத்தின் கிறுக்கல்கள்
இறுக்கமில்லாத தோலெல்லாம் சுருக்கங்கள்.

இளமை அழகையும் வாலிப முறுக்கையும்
இரண்டையுமே சூறையாடிய காலம்
வயோதிகச் சகதியில் வீசிவிட்டுப் போய்விட்டது.


காலம் இப்படித்தான் கைவிடுமெனத் தெரியாதவன்
இளவரசன் சித்தார்த்தன்.
காலத்தை 'காலருகே வாடா' எனக் கூப்பிட்டு
காலால் எட்டியுதைக்கத் திட்டமிட்டவன் பாரதி.

காலத்தைப் பழிவாங்க வேண்டுமென்பதே
எனது கனவும் ஆசையுமாகும்.
கழுத்துக்குக் கயிறு வீசப்பட்டபோது காட்டிய
மார்க்கண்டன் சாமர்த்தியம்
எனக்குச் சம்மதமில்லை.

உடைத்து உருக்குலைத்த காலத்தைப் பழிவாங்க
நான் வகுத்த திட்டமென்ன தெரியுமா?
நானே காலமாகிவிட்டால்
காலம் என்னை என்ன செய்ய முடியும்?

57-ம் பக்கத் தொடர்ச்சி

விஷ்ணு என்பதா? சிவன் என்பதா? ஒன்றும் புரியவில்லை. ஏறக்குறைய அந்தக் கோவில் 500 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள கோவில். தமிழ்நாட்டின் பெரிய கோவில் நெல்லையப்பர் கோவில். அது 200 ஏக்கர் பரப்பளவுதான். 500 ஏக்கர் வெட்டவெளியைப் பார்த்தாலே பிரமித்துப் போவோம். இது வெட்டவெளியல்ல. கட்டடங்கள் – கோவில்கள் – அகழிகள் – சுற்றுச் சுவர்கள்.



அந்தக் கோவிலைச் சுற்றி 3 கி.மீ. அளவிற்கு அகழிகள். என்ன ஆபத்தை எதிர்பார்த்து அப்படிப் பட்ட அகழிகள் அமைத்தனர்? இவ்வளவு பெரிய அகழிக்கு அவசியம் என்ன? அது பற்றிய ஆராய்ச்சி இன்றும் நடக்கிறது.

அந்தக் கோவில்களில் ஒன்றுகூட ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட அழகிய நிலையில் இல்லை. இடிந்து, தகர்ந்து கிடந்தன. தகர்ந்து தரைமட்டமாகிக் கிடந்தன. தரைமட்டத்தில் கற்குவியல்கள். எப்படி இவ்வாறு அந்த அழகிய கோவில்கள் ஆயின என்று பார்வையாளராகவும், பக்தர்களாகவும் சென்றவர்கள் கவலை தோய்ந்த முகத்தோடு அங்கு நின்று கொண்டிருந்ததைக் கண்ட எங்களுக்கு எப்படி மகிழ்ச்சி வரும்?

அந்தக் கோவிலை வலம் வருவது என்பது சாத்தியமில்லை. அத்தனை பெரிய சுற்றளவு கொண்டது அக்கோவில். எந்தக் கோவிலுக்குள்ளும் பூசை, புனஸ்காரம் இல்லை, அர்ச்சகர் இல்லை, ஆராதனை இல்லை.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட அங்கோர்வாட் கோவிலும், காஞ்சியிலுள்ள சிவாலயமும் ஒரே வடிவத்தில் எப்படி அமைந்தன? எவர் செய்த மாயம் இது? கோவில்கள் எல்லாம் அந்தக் காட்டுக்குள் ஒன்றன்பின் ஒன்றாகத் தெரிந்து கொண்டிருந்தன.

ஒரு நாள் போதாது, இரு நாள் போதாது. ஒரு வார காலம் சுற்றிச் சுற்றி வந்தால்தான் அக்கோவிலைப் பற்றிக் கற்றுக்கொள்ள முடியும். ஒவ்வொரு கல்லும் ஒரு கதை சொல்லும். ஒவ்வொரு கதையும் ஒரு சரித்திரச் சம்பவம். சரித்திரச் சம்பவம் ஒவ்வொன்றுமே ஒரு சாதனை.

இப்படி ஒரு கோவில் அங்கோர்வாட்டில் இருப்பதை இந்த உலகம் சென்ற 15 ஆண்டுகளாகத்தான் பார்த்துக் கொண்டு வருகிறது. இன்னுமொரு 15 ஆண்டுகளில் வானளாவிய இந்தக் கோவிலின் கோபுரங்கள் தரைதட்டிவிடும், தகர்ந்துவிடும். தள்ளாடிக் கீழே விழுந்துவிடும் என்பதில் சந்தேகமில்லை.



ஐ.நா. அமைப்பின் வரலாற்று ஆவணப் பிரிவில் இதனை ஒரு பாரம்பரியச் சின்னமாக (World Heritage) அறிவித்திருக்கிறார்கள். தாஜ் மகால்கூட ஓர் அதிசயம்தான். ஆனால், இது பாரம்பரிய அடையாளச் சின்னம்.

இந்தக் கோவில் ஒன்றல்ல, இரண்டல்ல. நூற்றுக்கும் அதிகம். கஜா புயலால் தஞ்சை சூறை யாடப்பட்டதைப்போல, இங்கே எந்தப் புயல் வீசியது? நிலநடுக்கத்தால் மாடமாளிகைகள் சரிந்து கிடந்ததைப்போல் எந்த நிலநடுக்கம் இங்கே ஏற்பட்டது? காட்டாற்று வெள்ளத்தால் காணாமல் போய்விட்ட விளைந்த வயல்களைப் போல எந்தக் காட்டாற்று வெள்ளம் இங்கே பிரவாகமெடுத்தது?

1200 ஆண்டுகளுக்கு முன்பு நாகரிக இங்கிலாந்துகூட நாடோடி மக்கள் உள்ள நாடாகத் தான் இருந்தது. இங்கிலாந்தே இப்படி என்றால், மற்ற ஐரோப்பிய நாடுகளைப்பற்றிச் சொல்ல வேண்டியதே இல்லை.





1200 ஆண்டுகளுக்கு முன்பு கம்போடியா வில் கல்லில் கலைவண்ணம் கண்டவர்கள் என்றால், அதற்குச் சற்று முன்பு இதே கலை வண்ணம் தமிழ்நாட்டில் காஞ்சிபுரத்திலும், மாமல்லபுரத்திலும் நிகழ்ந்திருக்கிறது. பின்னர் தமிழ்நாட்டு அரசர்களில் ராஜராஜசோழன் தஞ்சை யில் பெரிய ஆவுடையார் கோவிலை எழுப்பினான். அதுவும் ஐ.நா.வின் உலகப் பண்பாட்டுச் சின்ன மாகக் கொடிகட்டிப் பறக்கிறது. ராஜேந்திரசோழன் தந்தையை மிஞ்சும் வகையில் கங்கைகொண்ட சோழபுரம் கோவிலை எழுப்பினான்.

தமிழ்நாட்டு மன்னர்கள்தான் கங்கையை வென்றவர்கள், கடாரம் வென்றவர்கள். இவர் களைப் போன்றவர்கள்தான் கம்போடியாவை வென்றுள்ளனர். கடல் கடந்து போய்த் தங்கள் நாட்டிற்கான தலைநகரை அங்கே நிறுவியுள் ளனர். அந்தத் தலைநகரம்தான் இந்த அங்கோர் வாட். அதற்குச் சற்றுத் தொலைவில் அங் கோர்தாம். அங்கும் கோவில்கள்.

கம்போடியாவின் பெண்களை ஊர்வசிகள் என்றே கூறலாம். கொள்ளை அழகு. அவர்களிடம் தமிழ்நாட்டின் அடையாளத் தடயங்கள் மிகச் சொற்பமாகவே உள்ளன. ஒன்றே ஒன்றுதான் அவர்கள் நம்மவர்கள் என்பதை ஊர்ஜிதப்படுத்து கிறது. அது அங்கே ஆட்சிபுரிந்த வர்மன்களின் வரிசைகள்தான்.

தமிழ்நாட்டிலிருந்து 5 ஆயிரம் கிலோ மீட்டருக்கு அப்பால் தமிழன் நிறுவியுள்ள தலை நகரம் அங்கோர்வாட் என்பதை மற்ற தேசத்தாரை விட, தமிழர்கள் பார்க்கிறபோது இரட்டிப்பு மகிழ்ச்சி ஏற்படத்தானே செய்யும்.

அங்கோர்வாட்டுக்கு 4 கி.மீட்டருக்கு முன்பு ஒரு நவீன நகரம் ரீப். ஆயிரக்கணக்கான 3 நட்சத்திர விடுதிகள் உள்ள நகரம். ஐரோப்பி யர்கள், ஆஸ்திரேலியர்கள் வந்த வண்ணம் உள்ளனர். டெல்லியில் போலப் போக்குவரத்து நெருக்கடி.

கம்போடியாவில் ஒரு தமிழ்ச்சங்கம். பாண்டிச் சேரிவாசி ஞானசேகரன் அங்கே ஓர் ஓட்டல் நடத்துகிறார். அவருடைய நண்பர் ராமவர்தன் அவரோடு காணப்பட்டார். அந்த ஓட்டலில் நமது தமிழ்நாட்டு மிளகுரசம், சாம்பார், பாயசம், நம்ம ஊர்ச் சாப்பாடு. திருப்தியாகச் சாப்பிட்டோம்.

பாண்டிச்சேரி ஞானசேகரன் உலகத்தையே சைக்கிளில் வலம் வந்து முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களின் பாராட்டைப் பெற்றவர். அவருக்குக் கம்போடியா பிடித்துப் போய்விட்டது. அங்கேயே ஓட்டல் நடத்திக்கொண்டு பல ஆண்டு களாகத் தங்கிவிட்டார். அவர் கம்போடியாவின் பூர்வீகச் சரித்திரத்தைப் பற்றி ஒரு நூலும் எழுதி யுள்ளார்.

அவருடைய ஆராய்ச்சிப்படி கம்போடியா

கடல் கடந்த தமிழ்நாடு. அந்த மக்கள் தமிழர்கள். அடையாளமே தொலைந்து போய்விட்டது. தொன்மையையும்விடப் புராதனப் பிரதேசம். அது கீழடியைப் போலப் புதைந்து போயிருந்தால்கூட, தோண்டிப் பார்த்துவிடலாம். இது புதைந்து போகவில்லை. சிதைந்து போயிருக்கிறது. நமது தமிழ் நாட்டில் பூசைக்கு வசதியில்லாத புராதனக் கோவில் போலப் பாழடைந்துபோய்த் தானாகவே இடியவும் தொடங்கிவிட்டது.

அநேகமாக சென்ற 400 – 500 ஆண்டுகளாக அங்கோர்வாட் கோவில் இடிந்து கொண்டே வந்திருக்கிறது. இடிந்து, இடிந்து, சரிந்து கிடக்கிறது. இந்திய மத்திய அரசு இப்போதுதான் ரூ. 700 கோடி ஒதுக்கிச் சில பழுதுகளைப் பார்க்க நடவடிக்கை எடுத்து வருகிறதாம். பழுது பார்த்து இக்கோவிலைச் செப்பனிட முடியாது. சரிந்துவிட்ட அக்கோவில்களை மேலும் மேலும் சரியாமல் இருக்க இரும்புக் குழாய்களை



உமையாள் சோமசுந்தரம், சசிகலா துரைராஜன், சோமசுந்தரம், துரைராஜன், உஷா சத்தியமூர்த்தி, விசாலாட்சி, ஜெயந்தி, சரோஜினி, அழகிரிசாமி, சிதம்பரநாதன், சத்தியமூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி, ஸ்ரீலதா, காளீஸ்வரன், சிவசங்கரன்.

முட்டுக் கொடுத்துச் சரிவைத் தள்ளிப் போட்டிருக்கிறார்களே தவிர, இதனைச் சரிசெய்துவிட முடியுமா என்பது சந்தேகமே.

இவை கோவில் என்பதால் இன்றைய மத்திய அரசே இவற்றின்மீது சற்றே கவனம் செலுத்தி உள்ளது. பூர்வீகத்தில் இது தமிழர்களின் வீரம் தவழ்ந்து வந்த தாழ்வாரமாக இருந்துள்ளது. அதனால்தான் இக்கோவில்கள் சிவபெருமான், திருமால், விநாயகர், முருகன் என்பது போன்ற சிற்பங்களோடு தென்படுகின்றன.

ஆதிச்சநல்லூரிலும், கீழடியிலும் நமது புராதன நகரத்தைக் கண்டறிவதற்குச் செலவிட்டு வருவதைப்போல, அங்கோர்வாட் கோவிலுக்கும் கணிசமான தொகையைச் செலவிடத் தமிழக அரசு முன்வர வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள கல்வெட்டு அறிஞர்கள், செப்பேட்டு அறிஞர்கள் பலரை இங்கே தங்கவைத்து இந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளலாம்.

பாண்டிச்சேரி அன்பர் எங்களிடம் சொன்ன செய்தி, அங்கோர்வாட் பிராந்தியத்தில் விவசாயம் தான் பிரதானத் தொழில். அதுவும் நெல் விவசாயம். அங்கு நம்ம சோறுதான் உணவு. நூடுல்ஸ் உண்டு. காய் கறிகளான கத்தரி, வெண்டை, தக்காளி, பீர்க்கு, வாழை என எல்லாம் நம்ம ஊர்க் காய்கறிகள்.

பாண்டிச்சேரி அன்பர், ‘தமிழர்கள் இங்கே கொஞ்சம் பூமி வாங்கிப்போட்டு விவசாயத்தில் ஈடுபடலாம்’ என்றார். அங்கோர்வாட்டில் தமிழர்கள் குடியேற வேண்டும் என்கிறார். குடியேறினால், தமிழ் இனம் மீண்டும் அங்கே தழைக்கும். இழந்த பொக்கிஷத்தை மீட்டெடுத்துவிடலாம்.

இன்றைய நவீன தகவல் சாதனங்களாக உள்ள இணையம் போன்றவற்றால் எளிதாகத் தகவல்களைப் பரிமாறிக்கொள்ள முடியும். தென் ஆப்பிரிக்காவில் தமிழர்களின் நலனுக்கு உதவி செய்த தமிழக அரசு, கம்போடியத் தமிழ்க் கோவில்களுக்கும் உதவ முன்வர வேண்டும். இதற்கான நிதியத்தைத் தமிழ்நாட்டுத் தொழிலதிபர்களிடம் பெறலாம்.

ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை உருவாக்கியதில் தமிழக அரசு முன்மாதிரியாக நடந்தது. அதுபோல இதிலும் சிந்திக்கலாம். தமிழர்கள் அங்கே பூமி வாங்கி விவசாயத்தில் ஈடுபடவும் உதவலாம். கம்போடியாவில் இன்றும் ராஜாவின் வம்சம் இருக்கிறது. அந்த மக்களுக்கு ராஜபக்தியும் இருக்கிறது.



வியட்நாமின் தேசத்தந்தை ஹோ–சி–மின் மியூசோலியம் எனப்படும் அவருடைய திருஉருவக் கூடத்தில், சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துபோன ஹோசிமின் அவர்களின் தேகம் பாடம் செய்து வைக்கப்பட்டுள்ளது. படுத்த நிலையில் கிடத்தி வைக்கப்பட்டுள்ள அவ்வுடலை, வரிசையாகச் சென்று பார்க்க தினமும் மக்கள் அனுமதிக்கப்படுகிறார்கள்.

தானாக இடிவதற்குக் காரணம், அங்குள்ள ராட்சச மரங்களின் வேர்கள்தான். ஒரு காலத்தில் அங்கோர்வாட் பிரதானக் கோவிலின் கோபுரம் முழுவதுமே தங்கத் தகடுகள் வேயப்பட்டிருந்தன என்கிறார்கள். தங்கத்தைத் திருடிச் சென்றுவிட்டார்கள். சிலைகளைச் சேதப்படுத்தாமல் விட்டுச் சென்றதற்கே அவர்களைக் கைகுவித்துக் கும்பிட வேண்டும்.

இந்தக் கோவில்களைக் கட்டுவதற்கான கற்களை அங்கேயே உற்பத்தி செய்திருக்கிறார்கள். கல் தச்சர்களின் அசாதாரணமான கடுமையான உழைப்பால் கோவில்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தெய்வச் சிலைகள் நிறுவப்பட்டுள்ளன.

அங்கோர்தாம் சிவாலயத்திற்குள் போனால், கற்கள் இடிந்து தலைமீது விழுந்துவிடுமோ என்று பார்த்துக் கொண்டேதான் போக வேண்டும். அங்கே தட்டுப்படும் சில கடைக்காரர்கள், மாலை



மாஸ்கோவில் லெனின் உடம்பும், பீகிங்கில் மா.சே.துங் உடலும் இப்படித்தான் வைக்கப்பட்டுள்ளன.

இந்தியக் கலாச்சாரத்தில் உடல் என்பது நாம் அணிந்து கொள்கிற சட்டையைப்போல. ஆன்மா அணிந்து கொள்கிற சட்டைதான் உடல். ஆன்மா அகன்றுவிட்டால் சட்டைக்கு மதிப்பில்லை. அது சடலம். அதனைப் பாதுகாப்பது அவசியமற்றது என்று கருதியே அதனைப் புதைத்துவிடுகிறோம் அல்லது எரித்துவிடுகிறோம்.

ஆனால், கிழக்கு ஆசியாவில் புதிதாக வந்த கலாச்சாரப்படி, திருஉடலைப் போற்றிப் பாதுகாப்பது நடைமுறைக்கு வந்துள்ளது. ரஷ்யாவிலும், சீனாவிலும் தேசப் பிதாக்களின் திருமேனிகளைப் பாதுகாத்து வருகின்றனர்.

கம்போடியாவில் உள்ள அங்கோர்வாட் கோவிலும், அங்கோர்தாம் கோவிலும் உலக வரலாற்றில் தானாகவே இடிந்து காணாமல் போக உள்ளன.

6 மணிக்குப் பிறகு கடைகளைக் கட்டிவிடுகிறார்கள். இரவில் யாரும் தங்க முடியாதாம்.

இடி, மின்னல், மழை பெய்தால் கடுமையாக இருக்குமாம். இடிந்து கிடக்கும் கற்களின் மீது நின்றுதான் பேச வேண்டும். கோபுரங்களின் முகப்பில் மனித முகம் தெரிகிறது. பாதுகாப்புக்கென்று யாரும் இல்லை. பாதைகளும் சரிவர இல்லை. தடுக்கி விழுந்துவிடுவதற்கான சந்தர்ப்பங்கள் நிறைய உண்டு. நல்லவேளை, நாங்கள் யாரும் தடுக்கி விழவில்லை. தாண்டித் தாண்டித்தான் செல்ல வேண்டும். அப்போதுக்கப்போது மழையும் வந்துவிடும், காற்றும் வீசும். பகல் படர்வதற்குத்தான் பஞ்சம் அதிகம்.

ரோமாபுரியில் உள்ள மைக்கல் ஏஞ்சலோவின் கட்டடக்கலை அழகை அவர் நிறுவிய பீட்டர்ஸ் தேவாலயத்தில் பார்த்துப் பிரமித்துப் போனவர்கள் பலர். அவர்கள் அங்கோர்வாட் கோவிலைப் பார்ப்பார்களேயானால், அதிர்ச்சியடைந்து போவார்கள்.

– ந.நி

Registered with Registrar of Newspapers for India No. 42582/83
Licensed to post without Pre-payment under Regn. No. TN/WR/CBE/016/WPP/2018-20

Date of Publication
28.12.2019

Regd.No.CB/016/2018-20

OM SAKTHI - JANUARY - 2020